# பொன்னான பிரமாணம்

– ஏழாம் தூதனின் கட்டுரைகள்

# பொன்னான பிரமாணம்

*(நீதியின் பிரமாணமாகிய பொன்னான பிரமாணம் தொடர்பாக சகோ. ரசல் அவர்களினால் எழுதப்பட்டுள்ள கட்டுரைகளின் தொகுப்பு மற்றும் மொழியாக்கம்)*

"ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்." (மத்தேயு 7:12)

# *பொருளடக்கம்*


| வ. எண். | தலைப்புகள் | |
|---|---|---|
| 1. | ரீப்பிரிண்ட்ஸ் கட்டுரைகள் | 4 |
| 2. | பாஸ்டர் ரசல் அவர்களின் பதில்கள் | 36 |
| 3. | பாஸ்டர் ரசல் அவர்களின் சொற்பொழிவுகள் | 37 |
| 4. | பாஸ்டர் ரசல் அவர்களின் வேறுசில கட்டுரைகள் | 44 |

R5883

## அன்பு மற்றும் நீதியின் கொள்கைக்கிடையிலான வித்தியாசம்

நன்மை தீமைப் பற்றின கொள்கைகளைக் குறித்த தெளிவான புரிந்துகொள்ளுதலும், உணர்ந்துகொள்ளுதலும் மற்றும் இவற்றினால் ஆளப்பட வேண்டும் என்ற முழுமையான தீர்மானமும், தேவனுடைய சபையின் அங்கத்தினர்களுக்கான சமாதானத்திற்கும், வளமைக்கும் அவசியமாயிருப்பதுபோன்று, வேறெதுவும் காணப்படுவதில்லை. கிறிஸ்தவர்கள் மத்தியிலும்கூட ஆவிக்குரிய வளர்ச்சியையும், வளமையையும் பெரிதும் குறுக்கிடுமளவுக்குக் கிரியைகள் சம்பந்தப்பட்ட கொள்கைகளின் விஷயத்தில் வேற்றுக்கருத்துகள் இருக்கவே செய்கின்றன. இம்மாதிரியான சிரமங்களானது அன்பின் கோரிக்கைகளுக்கும், நீதியினுடைய கோரிக்கைகளுக்கும் இடையிலான வித்தியாசத்தினைக் காணத் தவறுவதினாலேயே பெரும்பாலும் எழும்புகின்றதாய் இருக்கின்றது. ஆகையால் இந்தக் கொள்கைகளையும், தேவனுடைய பிள்ளைகள் மத்தியில் இவற்றின் செயல்பாடுகளையும் குறித்துப் பார்ப்பது பிரயோஜனமானதாக இருக்கும் என்று நாம் கருதுகின்றோம்.

நீதியானது, சிலசமயங்களில் சரிசமமான தராசுகளினாலும், சிலசமயங்களில் சதுர வடிவத்தினால் (square) மற்றும் திசைக்காட்டியினாலும் (compass) விவரிக்கப்படலாம்; இவை இரண்டும் நீதியின் தன்மைகளை விவரிக்கும் பொருத்தமான அடையாளங்களாகும். நீதியானது கிரியை விஷயத்தில் அதற்கு நிர்ணயிக்கப்பட்ட விதியினின்று திசைமாறிடுவதுமில்லை மற்றும் அது எதிலும் விட்டுக்கொடுப்பதுமில்லை. அது முற்றிலும் வரையறுக்கப்பட்டதாகும். அது "அதிக எடைச் செலுத்தப்பட்டால், அதற்கென்று ஒன்றும் செய்கிறதில்லை. அதில் கிருபையோ, இருதயமோ, அனுதாபமோ, தயவோ கிடையாது. அது சத்தியம் மற்றும் நியாயத்தின்படி இம்மியும் பிசகாமல் துல்லியமாய் அளவிடுகிற ஒன்றாயிருக்கின்றது. நீதி செய்யப்பட்டால், நீதி செய்தவருக்கு எந்த நன்றியும் ஏறெடுக்கப்படுகிறதில்லை. நீதி செய்தவர் கடமையை நிறைவேற்றினவராக மாத்திரம் இருப்பார்; ஒருவேளை நீதி செய்வது புறக்கணிக்கப்பட்டால் அது குற்றமாக இருக்கும் மற்றும் நீதி செய்தால் எந்த மேன்மையும் அல்லது பாராட்டுதலும் கிடையாது. உறுதியும், கண்டிப்புமானதுமான இக்கொள்கையானது, தேவனுடைய சிங்காசனத்தின் ஆதாரமாய்க் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கொள்கையே, அவரது சிருஷ்டிகளை அவர் கையாளும் விஷயம் அனைத்திலும் காணப்படுகின்றது. அது அவரது மாறாக்கொள்கையாகும்; மேலும் நமது இனத்திற்கு எதிராய் நிற்கும் நீதியினைத் திருப்திபடுத்துவதை அடிப்படையாகக் கொண்டிருக்கும் இரட்சிப்பின் திட்டத்தினைப் புரிந்துகொள்ளும் யாவருக்கும், எவ்வளவு உறுதியாய்த் தேவன் இக்கொள்கையில் காணப்படுகின்றார் என்பது தெரியவரும். நீதியினைத் திருப்திபடுத்திடுவதற்குத் தம்முடைய ஒரேபேறான மற்றும் நேசகுமாரனுடைய ஜீவனைக்கொடுக்க வேண்டியதாய் இருப்பினும், திவ்விய நீதியின் இக்கொள்கையானது மிகவும் முக்கியமானதாய்க் காணப்பட்டபடியால், தேவன் நம் அனைவருக்குமாய்க் குமாரனை இலவசமாய்த் தந்தருளினார்.

### தயாளத்திற்கு முன்னதாக நீதி

நீதியைப் போன்றில்லாமல், அன்பின் கொள்கையானது பரிவினால் பொங்கிவழிகின்றது மற்றும் ஆசீர்வதிக்க ஏங்குகின்றது. அது முழுக்க கிருபை நிறைந்தது மற்றும் தயைப் பாராட்டுவதில் மகிழ்கின்றதாய் இருக்கின்றது. எனினும் நீதியைத் தனது மூல ஆதாரமாய்க் கொண்டிராத எந்த ஒரு கிரியையும் தயையாகக் கருதப்படவோ அல்லது அன்பின் வெளிப்பாடாகக் காணப்படவோ முடியாது.

ஆகையால் ஒருவர் உங்களிடத்தில் ஓர் அன்பளிப்புடன்/ஈவுடன் வந்தும், அதேசமயம் உங்களுக்கு நியாயமாய்க் கடன்பட்டிருக்கும் காரியம் ஒன்றினைப் புறக்கணித்திருப்பாரானால், அவரது அன்பளிப்பானது அன்பின் வெளிப்பாடாக உணர்ந்துகொள்ளப்படாது மற்றும் நீங்களோ: "தயாளமாய் இருப்பதற்கு முன்னதாக நாம் முதலாவது நீதியுடன் காணப்பட வேண்டும்" என்பீர்கள்.

மேலும் இது சரியே; தேவனுடைய நடவடிக்கைகள் அனைத்திற்கும் நீதியே அடிப்படைக் கொள்கையாகக் காணப்படுமானால், அப்படியாகவே நம்முடைய நடவடிக்கைகளின் விஷயத்திலும்கூடக் காணப்பட வேண்டும்; மேலும் இப்படியாகவே கிறிஸ்துவுக்குள்ளான சகோதர சகோதரிகள் விஷயத்திலும், உலகத்தார் மத்தியிலும் நாம் காணப்பட வேண்டும். கிறிஸ்துவுக்குள்ளான சகோதர சகோதரிகளாகிய நாம், ஒருவருக்கொருவர் தன்னிச்சையாக நடந்துகொள்வதற்கு உரிமைப்பெற்றிருப்பதில்லை. நாம் நீதி செய்யவே உரிமைப் பெற்றிருக்கின்றோம்; நமக்குரியதான உரிமைகளாய் இருப்பவைகளை நாம் விட்டுக்கொடுத்திடலாம். ஆனால் நம்முடைய நடவடிக்கைகளில், நாம் எப்போதுமே நீதி செய்திட நாட வேண்டும் - ஒருவருக்கொருவர் நாம் உண்மையாகவே கடன்பட்டிருக்கும் விஷயங்களில், அவற்றைக் கட்டித் தீர்ப்பதில் நாம் நீதியுடன் காணப்பட வேண்டும்; ஒருவரையொருவர் நியாயந்தீர்க்கும் விஷயத்தில் நாம் நீதியுடன் நடந்துகொள்ள வேண்டும்; மற்றவர்களுடைய பெலவீனங்களை உரிய விதத்தில் நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்; ஏனெனில் நாம் நம்மிலும் அதேபோன்றதான பூரணமின்மைகளைக் காணவே செய்கின்றோம் என்பதினாலாகும்; ஒருவரையொருவர் நியாயமாய், சிநேக பாவமாய்க் கையாளுவதில் நீதியுடன் நடந்துகொள்ள வேண்டும்.

நாம் ஏற்கெனவே சொல்லிவிட்டதுபோன்று, நாம் நமக்காக நீதியினைக் கோரிடமுடியாது மற்றும் வேண்டுமானால் நாம் விரும்பும் பட்சத்தில் முறுமுறுக்காமல் அநீதியினைச் சகித்துக்கொண்டு செல்லலாம். நாம் கிறிஸ்துவினுடையவர்களானால், நம்மால் நீதியினை அடையாளங்கண்டுகொள்ள முடிகிற அளவிற்கு ஏற்ப நாம் நீதி செய்திட வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், இது விஷயத்தில் நாம் மற்றவர்களுடைய செயல்பாடுகளுக்குப் பொறுப்பாளியாகிறதில்லை, மாறாக நம் செயல்பாடுகளுக்கே பொறுப்பாளியாய் இருப்போம். ஆகையால் அன்பினை வெளிப்படுத்தும் வண்ணமாக ஒரு காரியத்தினைச் செய்திடுவதற்கு முன்பாக, நாம் நம்முடைய கிரியைகள், நம்முடைய வார்த்தைகள் மற்றும் நம்முடைய சிந்தைகளானது, நீதியின் மாறா விதியுடன் இசைவாய்க் காணப்படத்தக்கதாக நாம் உண்மையாய்ப் பிரயாசம் எடுத்திட வேண்டும்.

## நீதி, நியாயம் என்பது ஒரு கிறிஸ்தவ பண்பாகும்

அநேக கிறிஸ்தவ ஜனங்கள் அநேகம் வருடங்கள் கடந்தும் பெரிதும் வளர்ச்சி ஏதுமில்லாமல் காணப்படுவதாகத் தென்படலாம். நாம் கர்த்தருடைய குடும்பத்திற்குள்ளாகக் கூட்டிச் சேர்க்கப்பட்டது முதற்கொண்டு, நமக்கும் பொருந்துகின்றதான திவ்விய பிரமாணங்களில் அடங்கும் அடிப்படையான கொள்கைகளை அடையாளம் கண்டுகொள்ள தவறிடுவதே மேற்கூறப்பட்டுள்ள இந்நிலைமைக்கு வழிநடத்தப்படுவதற்குரிய ஒரு காரணியாக இருக்கின்றது. இந்த அடிப்படையான கொள்கைகளில் முதலாவது நீதியாகும். நம்முடைய உரிமைகள் எவை என்றும், சபையிலும், சபைக்கு வெளியிலுமுள்ள நம்முடைய சக சிருஷ்டிகளின் உரிமைகள் எவை என்றும் நாம் மிகமிகத் தெளிவாய்க் கற்றுக்கொள்ள வேண்டும். நம்முடைய சொந்த காரியங்களையும், மற்றவர்களுடைய காரியங்களையும் நீதி எனும் தூக்கு நூலினால் எப்படி அளக்க வேண்டும் என்று நாம் கற்றுக்கொள்ள வேண்டும்; எந்த ஒரு சூழ்நிலையிலோ அல்லது சந்தர்ப்பத்திலோ மற்றவர்களுடைய உரிமைகள், சுயாதீனங்கள் அல்லது நலன்கள் விஷயத்தில் நாம் அத்துமீறல் பண்ணிடக்கூடாது என்றும், அப்படி அத்துமீறுவது என்பது திவ்விய சித்தத்திற்கு விரோதமான தவறாக, பாவமாகக் காணப்பட்டு, கிருபையில் நாம் வளர்கின்ற விஷயத்திற்குக்

கடுமையான இடையூறாகக் காணப்படும் என்றும் அடையாளம் கண்டுகொள்ள நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இரண்டாவதாக நீதிக்கு அடுத்தப்படியாக அன்பை திவ்விய வரிசையில் முக்கியமானதாகக் கருதிடுவதற்கு நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அன்பு என்று குறிப்பிடுகையில், அது காதலையோ, மென்மையான உணர்வுகளையோ குறித்துக் குறிப்பிடாமல், மாறாக நம்முடைய பரலோக தந்தையினிடத்திலும், நமது கர்த்தராகிய இயேசுவிடத்திலும் வெளிப்பட்டதாக நாம் பார்க்கின்றதான இரக்கத்தின், அனுதாபத்தின், கரிசனையின், தயாளத்தின் கொள்கையினையே நாம் குறிப்பிடுகின்றோம்.

நாம் கர்த்தரில் வளருகையிலும், அவரில் பெலப்பட்டிருக்கையிலும், நம் வளர்ச்சியானது அவரது குணலட்சணத்தினுடைய இந்த அம்சங்களின் அடிப்படையில் காணப்பட வேண்டும். நாம் மற்றவர்களிடத்தில் அவர்களது சோதனைகளிலும், பிரச்சனைகளிலும், கஷ்டங்களிலும் அதிகமதிகமாய் அவர்களைப் புரிந்துகொள்கிறவர்களாகவும், அவர்களுக்காக அனுதாபங்கொள்கிறவர்களாகவும் இருக்க வேண்டும்; அனைவரிடத்திலும், அதிலும் விசேஷமாக விசுவாச வீட்டார் யாவரிடத்திலும் நாம் தயவோடும், பொறுமையோடும், இரக்கத்தோடும் அதிகமதிகமாய்க் காணப்பட வேண்டும். ஆவியின் கனிகள் அனைத்தும், அன்பினுடைய அம்சங்களாய் இருக்கின்றன. தேவன் அன்பாகவே இருக்கின்றார் மற்றும் அவரது ஆவியினைப் பெற்றுக்கொள்பவர்கள் யாவரும், அன்பின் ஆவியினைப் பெற்றுக்கொள்பவர்களாய் இருப்பார்கள்.

இந்த இரண்டு அடிப்படையான கொள்கைகளும், நம்முடைய ஜீவியத்தின் நடத்தைகள் யாவற்றிலும் அடங்கிட வேண்டும். நாம் தீமை செய்திடக்கூடாது என்று நீதியானது நம்மிடத்தில் கூறுகின்றது - அதாவது மற்றவருக்கு அநீதி நடப்பிப்பதற்கு ஏதுவான எந்த ஒரு வார்த்தையையும் நாம் பேசிடவோ, எந்த ஒரு கிரியையும் நாம் செய்திடவோ கூடாது; பார்வையினால்கூட நாம் அநீதி நடப்பிக்கக்கூடாது; நம்முடையதுபோலவே, நாம் அவள் அல்லது அவனின் நலனுக்கடுத்த காரியங்களில் கவனமாய் இருத்தல் வேண்டும். மற்றவர்கள் விஷயத்திலான நம்முடைய நடவடிக்கைகள் அனைத்தையும் நீதியானது நெறிபடுத்திட/ஆண்டிட வேண்டும். நீதிக்கும் அதிகமாய் நாம் மற்றவர்களுக்குச் செய்திட அன்பு வேண்டுமானால் அனுமதித்திடலாம், ஆனால் நீதிக்கும் குறைவானதை நாம் மற்றவர்களுக்கு ஒருபோதும் செய்திடக்கூடாது என்று நீதி கேட்கின்றதாய் இருக்கின்றது. நாம் நீதி செய்ய வேண்டும் என்று மற்றவர்கள் நம்மிடத்தில் கேட்கவில்லை என்றாலும், நீதிக்கும் குறைவானதையே அவர்கள் நம்மிடமிருந்து பெற்றுக்கொள்ள விருப்பத்துடன் காணப்படுகின்றார்கள் என்றாலும், நாம் நமக்குச் சாதகமாய் அவர்கள் விஷயத்தில் நடந்தாலும்கூட, அவர்கள் ஏதும் கூறமாட்டார்கள் என்றாலும், நீதிக்குறித்த நம்முடைய நிலைப்பாட்டினை அவர்கள் புரிந்துகொள்ளமாட்டார்கள் என்றாலும், நம்முடைய நடக்கையானது, நீதியின்படியாகவே காணப்பட வேண்டும். நாம் கர்த்தருடைய ஆவியைப் பெற்றிருக்கின்றோம் மற்றும் இந்த நிலைப்பாட்டின்படியே நாம் செயல்பட வேண்டுமே ஒழிய, அவரது ஆவியினைப் பெற்றிராதவர்களுடைய அல்லது ஏறக்குறைய குருடானவர்களாகவும், நீதியாய்க் கையாள இயலாதவர்களாகவும் காணப்படும் மற்றவர்களுடைய நிலைப்பாட்டின்படி நாம் செயல்படக்கூடாது.

## அன்பும், நீதியும், இரண்டுமே கட்டுப்படுத்துகின்றது

மற்றவர்கள் விஷயத்திலுள்ள நம்முடைய நடக்கையை நீதியானது வழிவகுக்க வேண்டும் என்றால், மற்றவர்கள் நம்மிடம் நடந்துகொள்ளும் விஷயத்தில், அவர்களது நடக்கையினை அளவிட அன்பானது நம்மால் பயன்படுத்தப்பட வேண்டும். மற்றவர்களுக்கு நாம் செய்யும் விஷயத்தில் நீதியின் கண்டிப்பான விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டியது நம்முடைய பொறுப்பாய் இருப்பினும், நாம் அவற்றை மற்றவர்களுக்குப் பொருத்தி எதிர்ப்பார்த்திடக்கூடாது. நீதிக்கும் குறைவானதை நாம் மற்றவர்களிடத்திலிருந்து ஏற்றுக்கொள்ளும்படியாக அன்பும், தயாளமும் கோரிக்கை விடுகின்றதாய்

இருக்கின்றது; ஏனெனில் அவர்கள் விழுந்துபோனவர்களாகவும், அவர்களது மாம்சத்தில் மாத்திரமல்லாமல், அவர்களது கணிப்புகளிலும் பூரணமற்றவர்களாகவும் காணப்படுவதை நாம் உணர்ந்துள்ளோம். இன்னுமாக உலகத்தின் ஜனங்கள் கர்த்தருடைய ஆவியைப் பெற்றுக்கொள்ளவில்லை என்றும், இதனால் நாம் புரிந்துகொண்டிருப்பதுபோன்று நீதி மற்றும் அன்பின் இந்த அடிப்படையான கொள்கைகளை அவர்களால் புரிந்துகொள்ள முடியாது என்றும் நாம் காண்கின்றோம். அவர்களது நிலைமையினை வியாதிப்பட்டிருக்கின்ற அயலானின், நண்பனின், பெற்றோரின் அல்லது பிள்ளையின் நிலைமையைக்குறித்து நாம் எப்படிப் பார்ப்போமோ, அப்படியே அன்பில் அனுதாபத்தோடு பார்க்க வேண்டும். அவர்களது ஒழுங்கற்ற நிலைமையினை நாம் சகித்துக்கொள்ள வேண்டும் மற்றும் கூடுமான மட்டும் அவர்களது வார்த்தைகள், நடத்தைகள் முதலானவைகளை இரக்கத்தோடு கருதிக்கொள்ள வேண்டும்.

இது நாம் உண்மையான நிலைமைக்குக் குருடர்களாக அல்லது அசட்டையாய்ப் பார்க்கிறவர்களாக இருக்க வேண்டும் என்றாகாது மற்றும் நாம் பெற்றிருந்த அல்லது சம்பாதித்திருந்த யாவற்றையும் இழந்துபோக நம்மைநாமே ஆளாக்கிக்கொள்ள வேண்டும் என்றாகாது; மாறாக நம்மால் கையாளப்படுகிறவர்களிடமிருந்து வெளிப்படும் அநீதியையும், அநியாயத்தையும் நாம் இரக்கமான, அனுதாபமான பார்வையோடு பார்த்திட வேண்டும். அவர்கள் விழுந்துபோனவர்கள் என்றும், நாம் பெற்றுக்கொண்டுள்ளதுபோன்று, அவர்கள் தேவனுடைய கிருபையைப் பெற்றிருக்கவில்லை என்றும், இதனிமித்தம் அவர்களை நாம் கண்டிப்பான நீதியின்படி நிதானிக்காமல், மாறாக அவர்களது பூரணமின்மைகளானது, அன்பென்னும் வளைந்துகொடுக்கும் நரம்பினால் சகிக்கப்பட வேண்டும் என்றும் நாம் நினைவில் கொண்டிட வேண்டும். நம்முடைய சொந்த நடக்கையே, நீதியின் பிரமாணமாகிய பொன்னான பிரமாணத்திற்கு இசைவாக இருக்கின்றதாவென நாம் பார்த்திட வேண்டும்.

## அன்பு எவ்வாறு நிரம்பி வழிந்திடும்

மற்றவர்களிடத்தில் நாம் நடந்துகொள்ளும் நடக்கைகள் பொன்னான பிரமாணத்திற்கு இசைவாகக் காணப்பட வேண்டும் என்றும், மற்றவர்கள் நம் விஷயத்தில் நடந்துகொள்ளும் நடக்கைகளை நாம் தயவோடு பார்த்திட வேண்டும், அதாவது "நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்" என்று நமது கர்த்தர் கூறின வார்த்தைகளுக்கு இசைவாக, அவர் எப்படி நம்மை நியாயந்தீர்த்திடும் விஷயத்தில், நம்மைப் பார்த்திட வேண்டும் என்று விரும்புவோமோ, அப்படிப்போலவே நாமும் மற்றவர்களைத் தயவோடு பார்த்திட வேண்டும் என்றும் நமக்கு வலியுறுத்துவதன் வாயிலாக ஆண்டவர் எத்துணைத் தெளிவாய் இக்காரியங்களை நம்முன் வைக்கின்றவராய் இருக்கின்றார். கர்த்தருடைய ஜனங்கள் நீதி மற்றும் அன்பு எனும் இந்த அடிப்படைக்கொள்கைகளைச் சரியாகப் புரிந்துகொண்டு, அதை ஜீவியத்தின் அன்றாட காரியங்களில் செயல்படுத்துவார்களானால், அவர்கள் உலகத்தினின்று மேல் நிலைக்கு வந்தவர்களாய்க் காணப்படுவார்கள். அது அநேகமான வாய்ச் சண்டைகளையும், அநேகமான வழக்குகளையும், அநேகமான சண்டைகளையும் இல்லாமலாக்கி, கர்த்தருடைய ஜனங்களை இரக்கத்திற்கும், தயவிற்கும், அன்பிற்கும் பிரகாசிக்கிற முன்மாதிரிகளாகவும், அதேசமயம் நீதிக்கும், நேர்த்தியான ஜீவியத்திற்கும், நேர்மைக்கும், நாணயத்திற்கும் முன்மாதிரிகளாகவும் ஆக்கிவிடும்.

துல்லியமாய்க் கணக்கிடும், அளவிடும் கொள்கையையுடைய நீதியைப் போன்றதல்ல அன்பு. அது மூன்று அம்சங்களை உடையதாகும்: அது பரிதாபப்படுகின்றது; அது அனுதாபப்படுகின்றது - அதாவது பாசத்துடன் காணப்படுகின்றது; அது பயபக்தியோடு காணப்படுகின்றது. அன்பின் இந்த வெவ்வேறு வடிவங்களானது, யார் மீது அன்பு செலுத்தப்படுகின்றதோ, அதற்கேற்ப செயல்படுத்தப்படுகின்றது. பரிதாப அன்பு என்பது கீழ்த்தள வகையான (lowest form) அன்பாய் இருக்கின்றது; இது வெறுக்கப்படத்தக்கவர்களையும், இழிவானவர்களையும் கூடக் கவனத்தில் எடுத்துக்கொள்கின்றது மற்றும் உதவி அளிக்கும் விதத்தில் செயல்படுகின்றதாய் இருக்கின்றது. அனுதாபமான அன்பானது இன்னும் சற்று மேலானதாகவும், ஐக்கியத்தினையும், தோழமையையும் அருளுகின்றது. ஆனால் மூன்றாம் வகை அன்பு என்பது, இவை அனைத்திற்கும் மேலானதாகக் காணப்பட்டு, நல்லவற்றையும், தூய்மையானவற்றையும் மற்றும் அருமையானவற்றையும் கருத்தில் எடுத்துக்கொள்வதில் மகிழ்கின்றதாய் இருக்கின்றது. இந்தக் கடைசி வகையான அன்பின் வாயிலாகவே, போற்றுதலுக்கும், வியந்து பாராட்டுதலுக்கும் உண்மையில் பாத்திரமானவராகத் தேவனைப் பிரதானமாய் நாம் அன்புகூர்ந்திடுவோம்; மற்றும் அவரது சாயலைச் சக மனிதர்கள் பெற்றிருப்பதற்கேற்ப, சக மனிதர்களையும் அன்புகூருகிறவர்களாக இருப்போம். தேவனையும், மனிதனையும், இரண்டுபேரையுமே அன்புகூர்ந்திடும்படியாகத் திவ்விய பிரமாணம் கேட்கின்றதாய் இருக்கின்றது.

ஒவ்வொரு மனுஷனிடத்திலும் இப்படி ஏதேனும் ஒருவிதத்தில் அன்புகூர நாம் கடமைப்பட்டவர்களாக இருப்பினும், இதையே நாம் ஒருவர் இன்னொருவரிடம் எதிர்ப்பார்த்துக் கேட்டிட முடியாது; ஆனால் அன்பானது நீதிக்கும் மேலாய்ப் பொங்கி வழிகின்றது. அன்பானது குலுக்கி, அமுக்கிவிட்டு, இன்னும் குவிக்கின்றதாய் இருக்கின்றது. தன்னிடம் அன்பு பாராட்டப்படவில்லை என்று கிறிஸ்தவனால் குறையாகச் சொல்லப்படக்கூடாது; எனினும் அன்பு காட்டப்படும்போது, அது நன்றியறிதலோடு உணர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்டு, தாராளமாய்த் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். அன்பை அடைய வாஞ்சிக்கிறவர்கள், அன்பை அதன் உயர்தளத்தில் வாஞ்சித்திட - அதாவது போற்றப்படும் மற்றும் பாராட்டப்படும் விதமான அன்பினை வாஞ்சித்திட வேண்டும். ஆனால் இவ்வகையான அன்பானது மிகுந்த விலையுடையதாகும்; மேலும் இதை அடைவதற்கான ஒரே வழி - உண்மையில் உயர்பண்புகள் உடையவர்களாய் இருப்பவர்களை, நமது கர்த்தராம் இயேசுவைப் போன்று உண்மையில் காணப்படுபவர்களை ஈர்க்கும் அத்தகைய உயர்பண்புகளை வெளிப்படுத்திட நாடிடுவதாகும்.

அனுதாபத்தினாலும், ஐக்கியத்தினாலும் உருவான அன்பும்கூட மிகவும் விலையேறப்பெற்றதாகும். எனினும் கேட்டுக்கொண்டதன் காரணமாய் வெளிப்படும் எந்த ஒரு மன உணர்ச்சியும், அன்பின் உச்சிதமான நறுமணமில்லாமலேயே காணப்படும். ஆகையால் ஒருபோதும் அன்பைக் காட்டும்படி கேட்டுக்கொள்ளாதீர்/எதிர்ப்பார்க்காதீர், மாறாக மற்றவர்களிடம் அன்பை வெளிப்படுத்தி, இப்படியாகப் பிரதி அன்பை நாடிடுங்கள். பரிதாப அன்பானது, அது யார் மேல் செலுத்தப்படுகின்றதோ அவரின் பெருந்தன்மையினால் உண்டானதாயிராமல், மாறாகச் செலுத்தியவரின் பெருந்தன்மையினால் உண்டானதாகும்; அதாவது செலுத்தியவரின் இருதயமானது முழுக்க அன்பினால் நிறைந்திருப்பதினால், தகுதியற்றவர்களிடத்திலும் கூடத் தாராளமாய் அது பொங்கி வழிகின்றதாய் இருக்கின்றது. பரிதாபத்திற்குப் பாத்திரமாய் இருப்பவர்கள் யாவரும், உயர்தளத்திலுள்ள அன்பை நாம் பாராட்டிடுவதற்கும் பாத்திரமற்றவர்களாய் இருப்பார்கள் மற்றும் இத்தகையவர்களில் சிலர் நம்முடைய அன்பை எல்லாவிதத்திலும் எப்போதும் பெற்றுக்கொள்பவர்களாய் இருப்பார்கள்.

## சுயநலமான ஒரு பக்க பார்வை

நீதிக்கும் அப்பால் காணப்படும் அன்பின் பொங்கிவழிந்திடும் ஆசீர்வாதத்தினை வேண்டிக் (மற்றவரிடம்) கேட்பது என்பது பேராசையின் வெளிப்பாடாய் இருக்கும். அன்பின் இந்தக் கொள்கை யின்படி நாம் செயல்பட்டாலும், அதை மற்றவர் நம்மீது பாராட்டிட வேண்டும் என்று நாம் கேட்டிடக்கூடாது. ஒருவேளை நாம் அப்படிக் கேட்டுக்கொள்வோமானால், நாம் அன்பில் குறைவுகொண்டவர்களாகவும், கொஞ்சம் சுயநலம்கொண்டவர்களாகவும் இருக்கின்றோம் என்பது வெளியாகும். சிலர் தங்களுக்கு சகோதர அன்பானது, எந்தமட்டிற்குப் பாராட்டப்பட வேண்டும் என்பதைத் தெளிவாகக் கண்டுகொள்பவர் களாகவும், ஆனால் இது விஷயத்திலுள்ள தங்கள் சொந்த கடமைகளைக் கண்டுகொள்வதில் தாமதமாய் இருக்கின்றவர்களாகவும் காணப்படுகின்றனர்.

உதாரணத்திற்கு: இரண்டு சகோதரர்கள் ஒருமுறை ஒரே அறையில் தங்கினார்கள்; மேலும் அன்பு மற்றும் நீதியின் தொடர்பினைக் கவனிக்க தவறினவராக ஒருவர், அறைக்கான முழு வாடகையையும், மற்றவர் செலுத்த வேண்டும் என்று எதிர்ப்பார்க்குமளவுக்கு, மற்றவரிடத்தில் சகோதர அன்பை எதிர்ப் பார்த்திட்டார். ஆனால் மற்றவர் நீதியை வலியுறுத்தினபோது, இவர் சகோதர அன்பை வலியுறுத்தவே, மற்றவர் எப்படி இதை மறுக்க என்று அறியாது, மனமில்லாமல் முழுவாடகையையும் செலுத்தினார் மற்றும் அதேசமயம் அவருக்கு உலக ஜனங்களைக்காட்டிலும் சில கிறிஸ்தவர்கள் கொள்கை விஷயத்தில் குறைவுடையவர்களாய் இருக்கின்றனர் என்ற எண்ணம் பதிந்தது. தேவனுடைய பிள்ளைகளில் யாரேனும் இவ்வளவுக்குக் குறுகின, இவ்வளவுக்கு ஒரு பக்கக்கண்ணோட்டத்தினை, இவ்வளவுக்குச் சுயநலமான கண்ணோட்டத்தினைப் பெற்றிருப்பது எத்துணை விநோதமானதாய்க் காணப்படுகின்றது! அன்பும், நீதியும் இரண்டு விதங்களிலும் செயல்பட வேண்டும் என்றும், இது விஷயத்தில் ஒவ்வொருவரும் மற்றவரை மேற்பார்வையிடாமல், மாறாக ஒவ்வொருவரும் தன்தன் நடக்கையைப் பார்த்துக்கொள்வதும், தான் சகோதர அன்பைக் காண்பிக்கின்றானா என்று பார்த்துக்கொள்வதும் கடமையாய் இருக்கின்றது என்றும், தான் மற்றவருக்குப் போதிக்கிறானென்றால், அது கொள்கையின்படி என்பதைவிட, மாதிரியின் படி காணப்படத்தக்கதாகப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அனைவராலும் காணமுடியவில்லையா?

## அன்பு பிரதானமாய் ஆளக்கடவது

பேராசைக்கு நேரான தன்மையினைக்குறித்து நாம் எச்சரிக்கையாய் இருப்போமாக. நம்மில் ஒவ்வொருவரும் கர்த்தரினால் நம்மிடத்தில் ஒப்படைக்கப்பட்டவைகளுக்கே உக்கிராணக்காரனாக இருக்கின்றோமே ஒழிய, மற்றச் சகோதரனிடத்தில் ஒப்படைக்கப்பட்டவைகளுக்காக அல்ல என்பதையும், ஒவ்வொருவனும் கர்த்தர் தன் கைகளில் ஒப்படைத்தவைகளைச் சரியாய்ப் பயன்படுத்திடும் விஷயத்தில் மற்றவர்களுக்கல்ல, மாறாக கர்த்தருக்கே கணக்கு ஒப்படைக்க வேண்டியவனாய் இருப்பான் என்பதையும் நினைவில்கொள்வோமாக. ஒருவர் இன்னொருவருடைய தனிப்பட்ட காரியங்களைக்குறித்து இழிவாய் விமர்சித்துக் குறைக்கூறிடும் தன்மையானது, தேவனுடைய பிள்ளைகளிடத்தில் மிகவும் விரும்பத்தகாத, வெறுக்கத்தக்க காரியமாய் இருப்பது போன்று வேறு எதுவும் இருப்பதில்லை. இது பரிசுத்தவான் களுக்கடுத்த காரியமல்ல மற்றும் இது சகோதர அன்பு குறைவுபட்டிருப்பதை, அதாவது பெரிதாக்கு வதற்குப் பதிலாகத் திரளான பாவங்களை மூடிப்போடுகின்றதான, அதாவது பரந்த மனப்பான்மையோடும், தயவோடும் விசேஷமாய்ப் பார்த்திடும் சகோதர அன்பு குறைவுப்பட்டிருப்பதை வெளிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

கிறிஸ்தவன் அன்பான, தயவான இருதய நிலைமையினை - பரம பிதாவினுடைய குணத்தின் சாயலைப் பெற்றிருக்க வேண்டும். தேவன் கிறிஸ்துவின் நிமித்தமாய் நம்மைக் கையாளுவது போலவும் நம்மால் தெரிந்தும், துணிகரமாயும் செய்யப்படாத பாவங்களை நம்மீது சாற்றாதது போலவும், கிறிஸ்தவனும் முக்கியமில்லாத விஷயங்களைக் கவனியாமல் விட்டுவிடுமளவுக்கு மிகுந்த அனுதாபமும், அன்பும் கொண்டிருக்க வேண்டும். இத்தகைய நியதியானது, கிறிஸ்தவர்கள் மத்தியில் செயல்பாட்டில் காணப்படுமானால் - வேண்டுமென்றே செய்யப்படாத எதையும் குற்றமாகப் பார்க்கக்கூடாது என்ற தீர்மானம் காணப்படுமானால், இது அனைவருக்கும் மிகுந்த ஆசீர்வாதமாய்க் காணப்படும் மற்றும் தகுதியானதாகவும், தேவனுக்கொத்த நடக்கையாகவும் காணப்படும். மத்தேயு 18:15-17-ஆம் வசனங்களில் நமது கர்த்தரினால் குறிப்பிடப்பட்டிருக்கும் மீறுதல்களானது, பின்விளைவுகளற்ற அற்ப காரியங்களல்ல; தீமையான ஊகங்களும், கற்பனைகளுமல்ல; வதந்திகளல்ல; கற்பனையான அவமதிப்பல்ல; மாறாக நமக்குச் செய்யப்பட்டுள்ள உண்மையான தப்பிதங்களாகும் மற்றும் இதன் காரணமாக அன்பாகவும், இரக்கமாகவும், ஞானமாகவும் சில தகுதியான கடிந்துகொள்ளுதலைக் கொடுப்பது - அதாவது தவறு செய்யப்பட்டுள்ளதை நாம் அடையாளம் கண்டுகொண்டுள்ளோம் மற்றும் அது நம்மை வேதனைப்படுத்தியுள்ளது மற்றும் நம்மைக் காயப்படுத்தியுள்ளது மற்றும் அது சரி பண்ணப்பட வேண்டும் என்று கொஞ்சம் சுட்டிக்காட்டிடுவது நம்முடைய கடமையாக இருக்கின்றது.

மன்னிக்கும் மனப்பான்மையானது எப்போதும் நம்மிடத்தில் காணப்பட வேண்டும் மற்றும் அது நம்மால் எப்போதும் வெளிக்காட்டப்பட வேண்டும். நம்முடைய அன்புடன்கூடிய தயாளம், நம்முடைய இரக்கம், யாரைக் குறித்தும் தீமை, அதாவது கொஞ்சமும் தீமை சிந்திக்கக்கூடாது என்ற நமது வாஞ்சையானது - நம்முடைய வார்த்தைகள் மற்றும் ஜீவியத்தின் கிரியைகள் யாவற்றினாலும் வெளிப்படுத்தப்பட வேண்டும். இது தேவனுக்கொத்த காரியமாகும். நாம் பாவிகளாய் இருந்தபோதே தேவன் நம்மிடத்தில் இரக்கத்தின், தயாளத்தின், பரந்தமனப்பான்மையின் உணர்வுகளையே கொண்டிருந்தார். பாவிகள் மன்னிப்புக் கேட்பதற்காக அவர் காத்திராமல், மாறாக உடனே இணக்கத்திற்குள் வருவதற்கான அவரது வாஞ்சையையும் மற்றும் மன்னிப்பதற்கான அவரது ஆயத்தத்தையும் வெளிப்படுத்தினார். "தேவனோடே ஒப்புரவாகுங்கள்" என்பதே ஒட்டுமொத்த சுவிசேஷத்தின் செய்தியாகும். நம்முடைய முகங்களில் கடினமான பார்வை காணப்படாத அளவுக்கும், நம்முடைய வார்த்தைகளில் கசப்பைக்கொட்டும் கடிந்துகொள்ளுதல் இல்லாமல் இருக்குமளவுக்கும், நம்முடைய இருதயங்களானது, மன்னிக்கும் இத்தன்மையினால் முழுக்க நிரம்பியிருப்பதாக. நம்முடைய இருதயங்களில் எல்லா வேளைகளிலும் நாம் பெற்றிருக்க வேண்டியதான அன்புடன்கூடிய மன்னிப்பினை நாம் வெளிப்படுத்திட வேண்டும்.

சத்துரு மேன்மைப்பாராட்ட இடமில்லாத அளவுக்கு அன்பும், நீதியும் அதனதன் இடத்தினை தேவனுடைய ஜனங்கள் அனைவரின் இருதயங்களிலும் பெற்றிருப்பதாக! "ஆண்டவரே நான் உமது திருச்சட்டத்தின் மீது (நீதியினை அஸ்திபாரமாகக் கொண்டுள்ள அன்பின் பிரமாணத்தின் மீது) எத்துணைப் பற்றுக் கொண்டுள்ளேன்! நாள் முழுவதும் அதைப்பற்றியே சிந்திக்கிறேன்" என்று சங்கீதக்காரன் கூறியுள்ளார் (சங்கீதம் 119:97; திருவிவிலியம்). நிச்சயமாகவே தேவனுடைய பிரமாணமானது அனைவராலும் தொடர்ந்து தியானம் பண்ணப்படுமாயின், நாம் அடிக்கடி காண்கின்றதான கடுமையான தவறுகள் எவ்வளவாய்க் குறைந்துபோய்விடும்! புதுச்சிருஷ்டிகளாகிய நம்மை எதிராளியானவனும், விழுந்துபோன மாம்சமும் ஜெயம் கொண்டுவிடாதபடிக்கு நாம் கவனமாயும், தெளிந்த புத்தியுள்ளவர்களாகவும் இருப்போமாக. சுயமானது அதிகமதிகமாய் ஒழிக்கப்படுவதாக மற்றும் அன்பானது பிரதானமாய் ஆளுவதாக.

R2589 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# இராஜரிகப் பிரமாணம்-பொன்னான சட்டம்

## மத்தேயு 7:1-14

"ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்."

"ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (மத்தேயு 7:12). இவ்வசனத்தில் இடம்பெறும் "ஆதலால்" என்ற வார்த்தை யானது இவ்வசனத்திற்கும், இப்பாடத்தில் நாம் முன்பு பார்த்துள்ள விஷயங்களுக்கும் இடையே தொடர்பு இருப்பதைக் காட்டுகின்றது. இவ்வசனத்தின் காரியங்களானது, நாம் எப்போதெல்லாம் மற்றும் எவ்வளவாய் மற்றவர்களுடைய நோக்கங்களைத் தவறாய் நியாயம் தீர்த்துக்கொண்டு, அவர்களிடத்தில் (கைகளிலும், பாதங்களிலும்) குத்திக் காணப்படும் சிறு கூர்மையான கண்ணாடித் துண்டுகளை மாற்றிப்போடுவதற்கு மிகவும் கவனமாக, அறுவை சிகிச்சை செய்வதற்கு முயற்சிகள் எடுப்பதற்கு அநாவசியமாகத் தலையிடு கின்றோம் என்பதை அறிந்துகொள்வதற்குப் பரீட்சையாக அல்லது கோட்பாடாக அல்லது அளவு கோலாகக் காணப்படுகின்றது. ஆகவே இவ்வசனமே, "பொன்னான பிரமாணமாகும்;" அதாவது இதுவே தேவனுடைய ஜனங்கள் அவர்களுடைய ஜீவியத்தின் அனைத்து விஷயத்திலும் மற்றும் விசேஷமாக அவர்கள் "சகோதரர்களுடன்" கொண்டிருக்கும் உறவிலும், அவர்கள் "சகோதரர்களைக்" கையாளும் விஷயத்திலும் பயன்படுத்த வேண்டிய சட்டமாகும். மற்றவரிடத்தில் குற்றம் கண்டுபிடிக்கவோ அல்லது குற்றத்தைத் தேடுவதற்கோ நாம் உந்தப்படும்போதும், மற்றவரைக் குற்றம் சாட்டுவதற்கு அல்லது மற்றவருடைய குறைகளை விமர்சிக்க நாம் உந்தப்படும்போதும் அல்லது அவரை வெறுப்பதற்கு உந்தப்படும் போதும் இப்படி எண்ணுவது அல்லது செய்வது ஏற்புடையதா அல்லது ஏற்புடையதாக இல்லையா என்பதை நாம் அறியும் பொருட்டு, "ஒருவேளை நான் அந்தச் சகோதரனுடைய இடத்திலும், அந்தச் சகோதரன் என்னுடைய இடத்திலும் இருந்தால், என்னைக்குறித்து அந்தச் சகோதரன் இப்படியாக எண்ணுவதையோ, பேசுவதையோ நான் விரும்புவேனோ?" என்ற கேள்வியை நம்மிடத்திலேயே நாம் கேட்டுப்பார்க்க வேண்டும்.

இந்தப் பிரமாணம் கவனமாய்ப் பின்பற்றப்பட்டால், இப்பிரமாணம் ஒரு வழிகாட்டியாகக் காணப்படும். கர்த்தருடைய ஜனங்கள் இப்பிரமாணத்தை நினைவில் கொண்டிருந்தும், இதற்குக் கீழ்ப்படிய இருதயத்தில் விருப்பம் கொண்டிருந்த போதிலும், புறங்கூறும் விஷயத்திலும், தீமைப்பேசும் விஷயத்திலும், வதந்திகள் பரப்பும் விஷயத்திலும், தாங்கள் இந்தப் பொன்னான பிரமாணத்தை மீறும் விஷயத்தில், தங்களைக் குற்ற பழியினின்று விலகிக்கொள்வதற்கான காரணத்தைக்காட்ட வாய்ப்புத் தேடுகின்றனர். இந்தக் கர்த்தருடைய பிரமாணத்தைக் கையாளும் விஷயத்தில் ஜாக்கிரதையாய் இருக்கக்கடவோம். அதாவது, தேவனுடைய வார்த்தைகளை ஏமாற்றுத்தனமாகக் கையாளாதபடிக்கு, அதாவது இந்தப் பிரமாணத் தினுடைய உண்மையான முக்கியத்துவம் தொடர்பான விஷயத்தில், நம்மையே நாம் குருடாக்கி, ஏமாற்றிக் கொள்ளாதபடிக்கு, அதாவது இவ்விதமாய் நம்மையே நாம் ஏமாற்றி, நம்முடைய மனசாட்சியை நாம் சிறைப் படுத்தி, பலவீனப்படுத்தாதபடிக்கு, அதாவது பரிசுத்த ஆவி வேண்டும் என்பதான நம்முடைய ஜெபங்களை நாமே தடைபண்ணிப் போடாதபடிக்கு ஜாக்கிரதையாய் இருக்கக்கடவோம். ஏனெனில், வழி திறந்திருக்கும் பட்சத்திலேயே பரிசுத்த ஆவியானது நம்முடைய இருதயங்களுக்குள் பாய்ந்து வரமுடியும். இந்தப் பொன்னான பிரமாணத்தை முழுமையாகக் கைக்கொள்ளும்போது மாத்திரமே, வழித்திறந்து காணப்பட முடியும். இந்தப் பொன்னான பிரமாணமும், இந்த அனைத்துப் படிப்பினைகளும் புதியவைகள் போன்று தோன்றுவதற்கான காரணம் - இவைகள் முன்பு இல்லாத அளவுக்கு மாபெரும் போதகரினால், தெளிவான மற்றும் துல்லியமான வெளிச்சத்துடன் முன்வைக்கப்பட்டுள்ளதினாலேயாகும். இன்னுமாக, இவைகள் மோசேயினுடைய நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கத்தரிசிகள் வாயிலான தேவனுடைய போதனைகள் ஆகியவைகளின் சாரமாக உள்ளது.

R4826 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# எண்ணங்களுக்கான சரியான பழக்கவழக்கங்கள்

"நீதியுள்ளவைகளெவைகளோ." இங்கு நமக்கு மற்றுமொரு வரையறைகூடக் காணப்படுகின்றது. சரியாய்/நியாயமாய்க் காணப்படுபவைகளே, நீதியுள்ளவைகளாக இருக்கின்றன. நீதி மற்றும் நியாயம் என்பது ஒரே பொருளையுடைய வார்த்தைகளாகும். நீதியுள்ளவைகளும், அன்புள்ளவைகளும் ஒன்றாகவே இருக்கின்றது என்று பெரும்பாலும் எண்ணப்படுகின்றது; உதாரணத்திற்குப் பொன்னான பிரமாணமாகும்; "மற்றவர்கள் உனக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகின்றாயோ, அதையே நீ மற்றவர்களுக்குச் செய்." இது அன்பிற்கான பிரமாணமல்ல, மாறாக நீதிக்கான சட்டமாக இருக்கின்றது. மற்றவர்கள் நமக்கு எதைச் செய்துவிடக்கூடாது என்று எண்ணுகின்றோமோ, அதை மற்றவர்களுக்குச் செய்திடுவதற்கு நமக்கும் உரிமையில்லை. பொன்னான பிரமாணத்தை நாம் கைக்கொள்ளுகையில் நாம் மாபெரும் அன்பின் பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறவர்களாய் இராமல், மாறாக சரியான/நீதியான திசையில் நாம் ஓர் அடியெடுத்து வைத்தவர்களாய் இருக்கின்றோம். யாரும் நீதியாய்க் காணப்படுவதற்கு முன்னதாக, அன்பைக் குறித்துச் சிந்திக்க வேண்டாம். அன்பு என்பது நீதியைக்காட்டிலும் கொஞ்சம் அதிகமானதாகும். அன்பானது நீதியைக்காட்டிலும் கொஞ்சம் மேலானதாய் இருக்கின்றது. நீதிக்கும் அதிகமாய் எதிர்பார்த்திடுவதற்கு நமக்கு எந்த உரிமையும் இல்லை. நீதிக்கும் அதிகமாய் நாம் பெற்றுக்கொள்ளும் எதுவும் அன்பாகும், தயவாகும்.

## நீதி நம் ஜீவியங்களுக்கான பிரமாணமாக இருக்க வேண்டும்

அப்போஸ்தலரால் பரிந்துரைக்கப்பட்டவைகளை நாம் சிந்திக்கும் விஷயத்தில், நாம் முதலாவதாக நம்முடைய போக்கைக் குறித்துச் சிந்திக்க வேண்டும். நீதியானதும், நியாயமானதுமான இந்த விஷயங்களைக் குறித்துத்தான் நாம் எப்பொழுதும் சிந்தித்துக்கொண்டிருக்கின்றோமா என்று நாம் ஆராய்ந்து கவனிக்க வேண்டும். இவ்விஷயத்தில் நாம் ஒருபோதும் தவறான அபிப்பிராயங்கள் கொண்டிருக்கக் கூடாது. நீதியே நம்முடைய ஜீவியங்களுக்கான, நடத்தைகளுக்கான பிரமாணமாக காணப்பட வேண்டும். இவைகளைக் (நீதியானவைகளைக்) குறித்துச் சிந்திக்கையில், நாம் மற்றவர்களுடைய நடத்தைத் தொடர்புடைய விஷயத்தில் சிந்திப்பதற்கு இயல்பாகவே நடத்தப்பட்டுவிடுவோம். உதாரணமாக பல்வேறு காரியங்களினால் ஏற்படும் தாக்கங்களைக்குறித்து நாம் சிந்தித்துவிடக்கூடும். நமக்கோ அல்லது வேறெங்கோ நடைப்பெற்ற அநீதிகளின் மீது நமது மனதின் கவனத்தை நாம் செலுத்திவிடக்கூடும்; ஆப்பிரிக்கா நாட்டில் நடைபெற்ற அநீதியின் மீதோ, தொழிலில் ஏற்பட்ட அநீதியின் மீதோ நமது மனதின் கவனத்தை நாம் செலுத்திவிடக்கூடும். இப்படியாகக் கவனம் செலுத்தி, சிந்திப்போமானால், அநேகம் குப்பைகளைக் குவித்துக்கொள்பவர்களாய் இருப்போம். இப்படியான காரியங்கள் மீது நம்முடைய எண்ணங்கள் செல்லக் கூடாது. நாம் நல்லவைகளையும், மேலானவைகளையும், சந்தோஷமானவைகளையும் சிந்தித்துக்கொண்டிருக்க வேண்டும்; இந்தத் தற்கால ஜீவியத்திற்கான நற்காரியங்களை மாத்திரமல்லாமல், வரவிருக்கும் ஜீவியத்திற்கான ஆசீர்வாதமான காரியங்களைக்குறித்தும் நாம் சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும் மற்றும் இப்படியாக நம்முடைய மனங்களானது, எப்போதும் நீதியானவைகளுக்கு இசைவாகக் காணப்பட வேண்டும்.

R4567

# பொன்னான பிரமாணம்

## மத்தேயு 7:1-12

"ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கத்தரிசனங்களுமாம்." (மத்தேயு 7:12)

"அந்த மனுஷன் பேசுகிறது போல ஒருவனும், ஒருகாலும் பேசினதில்லை." பொன்னான பிரமாணத்தின் போதனைக்குக் கொஞ்சம் சமமானதாகக் கண்பூசியஸ் அவர்களின் பின்வரும் கொள்கையின் வார்த்தைகள் இடம்பெறுகிறது; "மற்றவர்கள் உங்களுக்கு என்ன செய்யக்கூடாது என்று எண்ணுகின்றீர்களோ, அதை நீங்களும் மற்றவர்களுக்குச் செய்யாதிருங்கள்" என்பதே கண்பூசியஸ் அவர்களின் வார்த்தைகளாகும். இவரின் வார்த்தைகள் பிரமாண்டமான போதனையாக இருப்பினும், இது மேம்பட்டதாகக் காணப்படும் பொன்னான பிரமாணத்திற்கு மிகவும் கீழானதேயாகும். கிறிஸ்தவர்கள் என்பவர்கள் எதிர்மறையான இயல்புள்ளவர்களாய் (negative) இராமல், ஆக்கப்பூர்வமானவர்களாய்க் (positive) காணப்பட வேண்டும். அவர்கள் மற்றவர்களுடைய standards/ கொள்கைகளைப் பின்பற்றுகிறவர்களாக மாத்திரம் காணப்படாமல், மாறாகக் கொள்கைகளை உடையவர்களாய் இருத்தல் வேண்டும்; ஜனங்கள் முன்னிலையில் இவர்கள் கர்த்தருடைய கொள்கைகளை உயர்த்திப்பிடித்துக் காட்டிட வேண்டும். "மனுஷீக பிரமாணங்களுடைய எல்லைக்குட்பட்டுக் காணப்படுவதற்கு நாங்கள் பிரயாசப்படுவோம்" என்று இயேசுவின் பின்னடியார்கள் கூறிடாமல், மாறாக "எங்களால் கூடுமானமட்டும் திவ்விய பிரமாணத்திற்கு இசைவாய் ஜீவித்திடுவோம். மனுஷீக பிரமாணம் என்பது பெரும்பான்மையான விழுந்துபோன மனுஷர்களின் நியமமாக இருக்கின்றதே ஒழிய, அவைத் திவ்விய நியமம் அல்ல என்று நாங்கள் கருதுகின்றோம்" என்றே கூறிட வேண்டும்.

தேவனுக்கான மற்றும் நம்முடைய அயலாருக்கான நம்முடைய அன்பின் அடிப்படையில் நாம் சோதிக்கப்படுவோம் என்று நம்முடைய இரட்சகர் நமக்குத் தெரிவிக்கின்றார். கிறிஸ்துவினுடைய பலியின் புண்ணியத்தின் வாயிலாக தேவன் நம்முடைய கடந்த காலங்களுடைய பாவங்களுக்காக மன்னிப்பை அருளியுள்ளார் மற்றும் இப்பொழுதோ தம்முடைய பிள்ளைகள் மற்றவர்களிடத்தில் இரக்கம், பரிவு, மன்னிப்புப் பாராட்டுவதற்கான படிப்பினைகளைக் கற்றுக்கொள்வதற்கு நோக்கம் கொண்டுள்ளார். ஆகையால் மற்றவர்களுக்கு நாம் எந்தளவுக்குக் கருணைக் காண்பிக்கின்றோமோ, அவ்வளவாய் நம்முடைய பெலவீனங்கள் மற்றும் குறைவுகள் விஷயத்தில் தேவனுடைய கருணையினை நாம் எதிர்ப்பார்த்திட முடியும் என்று அவர் நம்மிடம் தெரிவிக்கின்றார். இதில் நீதியின் கொள்கை அடங்குகின்றதாய் இருக்கின்றது. மற்றவரிடத்தில் பரிவும், மன்னிப்பும் பாராட்டும் யார் ஒருவனும், அன்பினைத் தன்னில் மேலோங்கின நிலையில், ஆளும் நிலையில் பெற்றிருக்கின்றான் என்பதை நிரூபிக்கின்றவனாய் இருப்பான். "அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாய் இருக்கின்றது." ஆகையால் இவர்கள் ஏதோ பூரணர்களாய் இருப்பதுபோன்று கையாளப்படுவர்; காரணம் மற்றவர்களிடத்திலான இவர்களது நடத்தையானது - இவர்களது இருதயங்கள் சரியாய் இருக்கின்றது மற்றும் அன்பினால் ஆளுகை செய்யப்படுகின்றது என்பதற்குச் சான்று பகர்கின்றதாய் இருக்கின்றது; மேலும் இருதயத்தின் காரணமாய் இராமல், மன்னிக்கப்படத்தக்கதான மாம்சத்தின் பெலவீனங்களே இவர்களது மீறுதல்களினால் உண்டாகும் பூரணமின்மைகளுக்குக் காரணமாய் இருக்கின்றது என்பதற்கும் சான்றுபகர்கின்றதாய் இருக்கின்றது.

இந்தக் கண்ணோட்டத்தின்படி நோக்கம், உள்நோக்கம் முதலியவைகள் விஷயத்தில், கிறிஸ்தவர்கள் எப்படி ஒருவரையொருவர் நிதானிக்க வேண்டும்? நிச்சயமாகவே மிகவும் இரக்கத்தோடே நிதானித்திட வேண்டும்! அவர்கள் எப்படி ஒருவர் இன்னொருவருடைய பிரயாசங்களைப் பார்த்திட வேண்டும்? நிச்சயமாகவே மிகவும் தயவோடே பார்த்திட வேண்டும்! ஒரு சகோதரனிடத்தில் காணப்படும் குறையினை அவர்கள் எப்படிப் பார்த்திட வேண்டும்? இவர்களது அனுதாபமானது சகோதரனுடைய குறைவை இவர்களது கணிப்பில் சிறியதாக்கிட வேண்டும் - இவர்களது சொந்த அபூரணங்கள் இவர்களுக்கே பெரியதாய்த் தெரிந்திட வேண்டும். நிச்சயமாகவே இப்படிப்பட்டவன் சகோதரனுடைய கண்ணில் தொல்லைக்கொடுத்துக்கொண்டிருக்கும் துரும்பை அல்லது சிறிய குறைவை நீக்கிடுவதற்கென்று சகோதரனுக்கு உதவுவதைப் பார்க்கிலும், தன் சொந்த கண்களிலுள்ள உத்திரத்தை எடுத்துப் போடுவதில் மிகவும் அக்கறையாய் இருப்பான். ஆகையால் தொடர்ச்சியாய்க் குற்றம் கண்டுபிடித்துக் கொண்டிருப்பவன், அதாவது மற்றவர்களில் பெரிய குறைகளைக் காண்பவனும் மற்றும் தன்னில் எந்தக் குறைகளையும் காணாதவனுமானவன் தன் குறைகளுக்குக் குருடனாய் இருக்கிறான் அல்லது மாய்மாலக்காரனாய் இருக்கின்றான் என்று நாம் எடுத்துக்கொள்ளலாம். இதுவே ஆண்டவருடைய வார்த்தைகளாய் இருக்கின்றன.

நாம் வேற்றுமைகளைக் கண்டறிய வேண்டும். அனைவரும் கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர் அல்ல, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் அல்ல. மற்றவர்களில் சிலர் அதிகமாயும், சிலர் குறைவாயும் கீழ்த்தரமானவர்களாகக் காணப்படுகின்றனர். ஆகையால் பல்வேறு தரப்பட்ட ஜனங்களை நாம் கையாளும்போது, நம்முடைய மார்க்கத்தின் மிகவும் விலையேறப்பெற்ற மற்றும் பரிசுத்தமான காரியங்களை, இவைகளை உணர்ந்துகொள்ளவோ அல்லது புரிந்துகொள்ளவோ முடியாத நிலைமையில் காணப்படுவோருக்கு முன்வைத்திடுவதை நாம் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இத்தகையவர்கள் சினமடைந்து, நமக்குப் பாதகம் பண்ணிடுவார்கள். மாறாக சத்தியத்தை முன்வைக்கும் விஷயத்தில் நாம் சர்ப்பத்தைப்போல் வினாவுள்ளவர்களாகவும், புறாக்களைப் போலக் கபடற்றவர்களாகவும் காணப்பட வேண்டும். கேட்கும் செவிகளை உடையவர்களுக்குத் தேவகிருபையினுடைய ஐசுவரியங்களை நாம் அறியப்பண்ணிட வேண்டும்.

அர்ப்பணம் பண்ணியுள்ள இயேசுவின் பின்னடியார்கள் யாவரும், தங்களுக்குத் தேவையானவைகளை - அதாவது தேவனுடைய வார்த்தைகளில் உண்மையுள்ளவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை வேண்டிக்கொள்ளத்தக்கதாக, கிருபையின் சிங்காசனத்திடத்திற்கு அவருடைய நாமத்தில் தாராளமாய் வந்திடலாம். நாம் அவைகளை நாடித் தேடிட வேண்டும் மற்றும் அவைகளை நாம் கண்டடைவோம். நாம் தட்டும்போது, திவ்விய ஆசீர்வாதங்கள் நம்முன் திறக்கப்படும்.

இந்தக் கொள்கையானது எவ்வாறு விழுந்துபோன மனுஷர்கள் மத்தியில் நிலவுகின்றது என்று நாம் பார்த்திடலாம். எந்த ஒரு தகப்பனிடத்திலாவது மீன் கேட்கப்பட்டால், அவர் சர்ப்பத்தைக் கொடுப்பாரோ? அப்பம் கேட்கப்பட்டால் கல்லைக்கொடுப்பாரோ? நிச்சயமாக இல்லை! அப்படியானால் நமது பரம பிதாவைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தம்மிடத்தில் வேண்டிடும் பிள்ளைகளுக்கு அவர் அருளிடுவதற்கு அதிகம் விருப்பமுள்ளவராய் இருப்பாரல்லவா? உண்மையில் நாம் கேட்காமலேயே அநேகம் ஆசீர்வாதங்களை நமக்குக் கொடுத்திருக்கின்றார்; ஆனால் நாம் வேண்டிக்கேட்டுக்கொள்வது வரையிலும் அவர் தம்முடைய உச்சிதமான தயவுகளில் சிலவற்றைத் தராமல் வைத்திருக்கின்றார் - காரணம் இப்படியாக அவர் நம்மை அவரிடத்தில் நெருங்கப்பண்ணி, அவர் நமக்கு அருளவிருக்கின்றதான ஆசீர்வாதங்களுக்கு நம்மை இன்னும் அதிகமாய் ஆயத்தம்பண்ணுகின்றார்.

பிதா விசேஷமாய்க் கொடுக்க விரும்பும் நல் ஈவானது, அவரது பரிசுத்த ஆவியை அருளும் காரியமே என்று வேறொரு இடத்தில் ஆண்டவர் நமக்குத் தெரிவித்துள்ளார். இதுவே மிகவும் முக்கியமானதாகும்; ஏனெனில் நாம் பரிசுத்த ஆவியினை உடையவர்களாய் இருந்தால் மாத்திரமே, தேவன் மற்றும் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மனதினை, குணங்களை நாம் அடைந்தால் மாத்திரமே, நாம் அழைக்கப்பட்டிருக்கின்றதான மகிமையான ஆயிரவருட இராஜ்யத்தில் ஓர் இடத்தினைப் பெற்றுக்கொள்ள தகுதியானவர்களாய் இருப்போம். சாந்தம், தயவு, பொறுமை, நீடிய பொறுமை, சகோதர சிநேகம் - அன்பின் வாயிலாக அவரது பரிசுத்த ஆவியானது நம்மில் வெளிப்படுகின்றதாய் இருக்கின்றது.

"ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கத்தரிசனங்களுமாம்" (மத்தேயு 7:12) என்பதே நம்முடைய பாடத்திற்கான ஆதார வசனமாகும். தேவனுடைய பிரமாணத்தின் ஒட்டுமொத்த கோரிக்கையும், இந்தப் பொன்னான பிரமாணத்தில் சுருக்கமாய்க் கொடுக்கப்பட்டுள்ளது. எனினும் கிறிஸ்தவனுக்கு இன்னொரு விஷயமும் - அதாவது கர்த்தருடைய "புதிய கட்டளையும்" காணப்படுகின்றது. மீட்பரின் இராஜ்யத்தில் அவரோடுகூட உடன்சுதந்தரத்தை அடைவதற்கு, நம் மீட்பர் நம்மை அன்புகூர்ந்தது போன்று - சுயத்தைப் பலிசெலுத்தி மரிக்குமளவுக்கு அன்புகூர்ந்தது போன்று, நாமும் "ஒருவரையொருவர் அன்புகூர்ந்திட வேண்டும்." "நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாய் இருக்கின்றோம்" (1 யோவான் 3:16).

ஜீவியத்தின் காரியங்கள் அனைத்திலும் நம்முடைய வாசகர்கள் அனைவரும் பொன்னான பிரமாணத்தினைக் கடைபிடிப்பதற்கு ஒருவேளை தீர்மானிப்பார்களானால், நாம் மகிழ்வுறுவோம்; ஆனால் நம்மால் அப்படி எதிர்ப்பார்த்திட முடியாது, ஏனெனில் அவர்கள் யாவரும் தேவனுக்கு முழுமையாய் அர்ப்பணம் பண்ணினவர்களாய் இருப்பார்கள் என்று நாம் எதிர்ப்பார்த்திட முடியாது. கர்த்தர் விஷயத்திற்கும், கிறிஸ்துவினுடைய பள்ளிக்கூடத்தின் அறிவுரைகள் விஷயத்திற்குமான முழுமையான அர்ப்பணிப்பில் குறைவு என்பது, இந்தப் பொன்னான பிரமாணத்திற்கு இசைவாய் ஒரே சீராய் ஜீவித்திட எந்தவொரு மனுஷனுக்கும், மனுஷிக்கும் உதவுவதாய் இராது. மாபெரும் போதகரின் உதவும் கிருபையினால் மாத்திரமே, அர்ப்பணிக்கப்பட்ட இருதயத்தில் இப்பிரமாணம் நிலைக்கொள்ள முடியும். ஆகையால் அர்ப்பணம் பண்ணியுள்ளவர்கள் இந்தப் பிரமாணத்தினையும், "புதிய கட்டளையையும்" பின்பற்றிடவும், மற்றவர்கள் தங்களை அர்ப்பணம் பண்ணிடவும் நாம் வலியுறுத்துகின்றோம்.

---

R5740 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## குணலட்சணத்திற்கான சிறிய சோதனைகள்

கைப்பிரதிகளின் மேல் விலாசத்தை ஒட்டுவதையும் அல்லது கர்த்தருடைய ஊழியங்களில் இக்காலக்கட்டத்தில் அனுமதிக்கப்படும் எந்த ஒரு வேலையையும் சிலாக்கியமாக நாம் கருத வேண்டும். "நான் போதகம் பண்ணுவதற்குத்தான் போவேன்" என்று யாராவது சொல்வாரானால், கர்த்தர் வழியைத் திறந்து, சந்தர்ப்பத்தைக் கொடுப்பாரானால் செய்யுங்கள். ஒரே நாளில் போதிக்க அநேக சந்தர்ப்பங்கள் கிடைத்தால் - ஒருவருக்கோ அல்லது பத்துப் பேருக்கோ அல்லது ஆயிரம் பேருக்கோ போதிக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். ஆனால் உங்களுக்குப் போதிக்க எந்தச் சந்தர்ப்பமும் கிடைக்கவில்லை என்றால், கைப்பிரதிகளின் மேல் விலாசம் ஒட்டுகிற வேலையைச் செய்யலாம். இப்படியாகத் தபால்காரர்தான் படிக்கக்கூடிய வீட்டிற்கு அதை எடுத்துச்செல்கிறார் என்றாலும்,

படிக்கக்கூடிய விஷயங்களை, மற்றவர்கள் கையில் கிடைக்கும்படிச் செய்வதில் நீங்கள் ஒரு கருவியாக இருக்கலாம். அல்லது நமது வேலை சமயற்கூடத்தில் அல்லது வீட்டின் வேறு எந்தப் பகுதியில் இருந்தாலும், அதைக் கர்த்தருக்கென்று நினைத்துச் செய்வோமானால் அது அவருக்கான ஊழியமாகிடும். அவர் சகோதரர்களுக்கு ஏதாவது செய்யும் சந்தர்ப்பத்தை நமக்கு அன்பாகத் தருகிறார்.

ஆகையால் நாம் என்ன செய்தாலும், அதை நாம் கர்த்தருக்கென்று செய்கிறோம்; அவருக்காக, அவர் விரும்புவதுபோல நாம் செய்கிறோம். நாம் சந்தோஷத்தை உணரும்படியாகக் காரியங்களை நோக்கக்கூடிய ஒரு வழி இருக்கிறது. நாம் அவ்வப்போதாவது நம்மைக் கேட்க வேண்டிய நல்ல கேள்வி என்னவெனில்: நான் எதைத் தேடுகிறேன்? இதைச் செய்வதில் என் நோக்கம் என்ன? யாருக்காக நான் செய்கிறேன்? என்பதேயாகும். நாம் கர்த்தருக்காக வேலை செய்து அவரைச் சந்தோஷப்படுத்த முயற்சிப்பதாலும், சிறிய காரியங்களில் ஊழியம் செய்வதில் நன்றி கூறுவதின் ஆவியை வளர்ப்பதினாலும், பெரிய காரியங்களுக்கு நாம் பாத்திரவான்கள் என்பதை நிரூபிப்போம். வீட்டில் நமது சிக்கனத்திலும், நம்மைச் சுற்றிலும் இருக்கிற மற்றவர்களைக் கவனிப்பதிலும் - கர்த்தருக்கு உண்மையான ஊழியத்தைச் செய்வதிலுமுள்ள நமது விருப்பத்தை வெளிப்படுத்துகிறோம். அதிகமாய்ச் சண்டைச்சச்சரவுகளில் ஈடுபடுபவர்கள் அல்லது வீட்டில் சண்டைச்சச்சரவுகளை உண்டுபண்ணுபவர்கள் தாங்கள் முழுமையாகத் தகுதியுள்ளவர்கள் அல்ல என்பதை வெளிப்படுத்துகிறார்கள். வீட்டைச் சுற்றி மற்றவர்களைத் தொந்தரவு செய்யும்விதத்தில் விசிலடிக்கிறவர்களும் அல்லது அதிகாலையில் எழுந்திருந்து, அதிக சத்தம் போட்டு மற்றவர்கள் ஓய்வெடுக்க முடியாதபடி செய்பவர்களும் அல்லது இரவு நேரத்தில் மிகவும் காலதாமதமாக வந்து சத்தத்தை ஏற்படுத்திக்கொண்டு தனது அறைக்குப் போகிறவர்களும், பொன்னான பிரமாணத்தைக் கடைப்பிடிக்கவும், மற்றவர்களது உரிமைகளை மதிக்கவும் கற்றுக்கொள்ளவில்லை என்பதை மெய்ப்பிக்கிறார்கள். கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக நமது நடத்தைகள் அனைத்திலும் முதலாவதாக -- நீதியின் கொள்கைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும். மற்றவர்களது உரிமைகள் என்னென்ன என்பதையும், அந்த உரிமைகளில் நாம் அத்துமீறுகிறோமா என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். அப்படிச் செய்வதாக நாம் கண்டால், நாம் நீதியின் பிரமாணத்தை மீறுகிறோம் என்பதை அறியலாம். வாழ்க்கையின் எல்லாச் சந்தர்ப்பச் சூழ்நிலையிலும் நீதி முதலாவது வரவேண்டும்; அதன்பிறகு முடிந்தமட்டும் இரக்கமும், தயையும் உள்ளவராக நாம் இருக்கலாம்.

---

R2688 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்

"ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்." (மத்தேயு 7:12)

என்ன பரீட்சைகளை நாம் மேற்கொண்டாலும், மற்றவைகள் அனைத்தையும் காட்டிலும் இயேசு மற்றும் அவரது போதனைகளே மேலோங்கி நிற்கின்றதைக் காணமுடிகின்றது. உதாரணத்திற்குப் பொன்னான பிரமாணமானது கண்பூசியஸ் அவர்களின் எழுத்துகளிலும், புதிய ஏற்பாட்டிலும் காணப்படுகின்றது என்றும், இதுவே கண்பூசியஸ் அவர்கள் இயேசுவுக்கு நிகரானவராகவும், தேவனால் அனுப்பப்பட்டவராகவும், காணப்படுகின்றார் என்பதற்கு ஆதாரம் என்றும் நம்மிடம் அடிக்கடி தெரிவிக்கப்படுகின்றது. இப்படியான கூற்றினைத் தெரிவிப்பவர்களில் அநேகர் நேர்மையான எண்ணங்களுடன்தான் இப்படித் தெரிவிக்கின்றனர் என்பதில் எந்த ஐயமுமில்லை; உண்மை

என்னவெனில் இயேசுவினால் கொடுக்கப்பட்டதான பொன்னான பிரமாணத்தினுடைய ஆழத்தையும், அகலத்தையும் அநேகம் கிறிஸ்தவர்கள் ஒருபோதும் கண்டுணர்ந்ததில்லை மற்றும் கண்பூசியசால் எழுதப்பட்ட பழமொழியானது/கொள்கையானது பொன்னான பிரமாணத்திற்கு ஒத்திருப்பதுபோன்று தோன்றுவதினால், இரண்டும் ஒன்றே என்று தவறாய்ப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. பெருமளவில் வித்தியாசம் உள்ளன; மேலும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது, கண்பூசியசின் வார்த்தைகள் ஆணவமான /Brazen சட்டமெனச் சொல்லப்படலாம். கண்பூசியஸ் அவர்களின் பழமொழியாவது: "மற்றவர்கள் உங்களுக்கு என்ன செய்யக்கூடாது என்று எண்ணுகின்றீர்களோ, அதை நீங்களும் மற்றவர்களுக்குச் செய்யாதிருங்கள்." இதுவே நமது கர்த்தரினால் கொடுக்கப்பட்டதான பொன்னான பிரமாணத்தில் பெரும்பான்மையான கிறிஸ்தவர்களால் பார்க்கப்படுகின்றது என்று நாம் மீண்டுமாகக் கூறுகின்றோம்.

கண்பூசியஸ் அவர்களின் பழமொழியானது முழு உலகத்திலுள்ள ஒவ்வொரு சிருஷ்டியினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால், அதைக் காண்பதில் நாம் மகிழ்ச்சியடைந்திருப்போம்; மேலும் இப்படிச் செய்யப்பட்டிருக்குமானால் சந்தேகத்திற்கிடமின்றிப் பலனானது மனுக்குலத்திற்கு மாபெரும் ஆசீர்வாதமாகவே காணப்பட்டிருக்கும் - தற்போதைய நிலைமைகளில் மாபெரும் முன்னேற்றங்கள் சம்பவித்திருந்திருக்கும்; மேலும் கர்த்தருடைய அடிச்சுவடுகளில் தொடர்ந்து நடப்பதற்கு நாடிக்கொண்டிருப்பவர்களாகிய பரிசுத்தவான்களைத் தவிர மற்றப்படி கிட்டத்தட்ட அனைவருமே தினந்தோறும், தங்கள் அயலார் தங்களுக்கு எவைகளைச் செய்யக்கூடாது என்று விரும்புகின்றார்களோ, அதை மற்றவர்கள் விஷயத்தில் செய்யாதவர்களாய்க் காணப்பட்டிருப்பார்கள். இப்படிப் பெரிய அளவில் சீர்த்திருத்தங்கள் கொண்டுவரப்பட வாய்ப்பிருப்பினும், இன்னமும் குறைவுகள் காணப்படவே செய்திருக்கும்; "உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுவது போன்று பூலோகத்திலும் செய்யப்படுவதாக" என்ற நமது கர்த்தருடைய ஜெபமானது தெரிவித்திடும் நிலைமையில் உலகமானது காணப்படாமலே இருந்திருக்கும். ஏனெனில் மனுஷர்கள் கொள்கைகள் அல்லது ஏதேனும் மற்றக் காரணங்களின் நிமித்தம் ஒருவரோடொருவர் நீதியுடன் நடந்துகொண்டிருப்பார்கள் மற்றும் மற்றவர்கள் தங்களுக்குச் செய்யக்கூடாது என்று அவர்கள் கருதிடும் காரியங்களை மற்றவர்களுக்குச் செய்யாதவர்களாய்க் காணப்பட்டிருப்பார்கள் மற்றும் அவர்கள் அனைவரின் இருதயங்களும் முழுக்க சுயநலத்தினாலும், குறுகிய மனப்பான்மையினாலும், பேராசை முதலியவையினாலும் நிரம்பியிருந்திருக்கும் மற்றும் அன்பினின்று தூரமாயிருந்திருக்கும்.

ஆனால் நமது கர்த்தருடைய பொன்னான பிரமாணத்தினுடைய பரந்த தன்மையினை நாம் கவனிக்கையில், இது முற்றிலும் ஓர் அன்பின் பிரமாணம் என்றும், இதில் கூட்டவோ, குறைக்கவோ எதுவுமில்லை, இது முழுமையானதொரு பிரமாணம் என்றும் நாம் கண்டுகொள்கின்றோம். இது "தீமைச் செய்யாதே" என்று சொல்லுகிற எதிர்மறை (negative) பிரமாணமாய்க் காணப்படாமல், "நன்மை செய்வாயாக; உன் அயலான் உனக்குச் செய்ய வேண்டுமென்று நீ விரும்புகின்றதான நன்மை யாவற்றையும், இரக்கம் யாவற்றையும், ஊழியம் யாவற்றையும், அவனுக்குச் செய்வாயாக" என்று சொல்லுகிற ஆக்கப்பூர்வமான (positive) பிரமாணமாய்க் காணப்படுகின்றது. "சுயாதீன பிரமாணம்" என்று அப்போஸ்தலனால் அழைக்கப்படும் இந்தப் பிரமாணத்திற்கு, இந்தப் பூரண பிரமாணத்திற்கு, ஜீவியத்திற்கான இந்தப் பொன்னான பிரமாணத்திற்கு, இணையான ஒரு பிரமாணமானது எங்குமில்லை, எவருடைய எழுத்துகளிலும் இல்லை மற்றும் இதற்கும் மேலாய்ப் பிரமாண்டமாய் வெளிப்படுத்தப்படவும் முடியாது. ஆனால் எத்தனை சொற்பமானவர்கள் இந்தப் பிரமாணத்தினைச் சரியாய்ப் புரிந்துகொண்டவர்களாகவும், இதனை விரும்புபவர்களாகவும் மற்றும் தங்களது சொந்த நடவடிக்கையினை அளந்துபார்த்திட இதனை தினந்தோறும் பயன்படுத்துகின்றவர்களாகவும்

காணப்படுகின்றனர்! ஏற்கெனவே தெரிவித்திருந்ததுபோல பெரும்பான்மையானவர்கள், உலகத்திலுள்ள நல்ல ஜனங்கள்கூட, பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள்கூட இப்பிரமாணத்தினுடைய அகலங்களையும், நீளங்களையும் கவனிக்கத்தவறிப்போனவர்களாகக் காணப்பட்டு, மற்றவர்களுக்குப் பாதகம் செய்யக்கூடாது என்று சொல்லும் கட்டளையாக மாத்திரமே இதனை கண்நோக்குகின்றனர். அப்படியானால் எத்தனை சொற்பமானவர்கள் மாத்திரம் இதன் அம்சங்களைச் சந்தோஷத்தோடும், உணர்வோடும் கிரகித்துக்கொண்டவர்களாக, தங்கள் ஜீவியங்களை இப்பிரமாணத்திற்கு இசைவாகப் பெற்றிருக்கத்தக்கதாக இருதயத்திலிருந்து நாடுகின்றவர்களாய்க் காணப்படுவார்கள்! வேறுயாருமல்ல பரிசுத்தவான்களே, வேறுயாருமல்ல "தெரிந்துகொள்ளப்பட்டவர்களே" தங்கள் பரம பிதாவினுடைய அன்பின் பிரமாணத்தினுடைய ஆவிக்கும், சாரத்திற்கும் இசைவான இருதய நிலைமையில் காணப்படுவார்கள்.

மற்றவர்களிடத்தில் அளவு மீறின தயாளம் காட்டியும், தங்கள் விஷயத்தில் போதுமாய் ஜாக்கிரதையாய் இல்லாமலும் இருப்பதன் வாயிலாகக் கர்த்தருடைய ஜனங்களில் சிலர் இந்தப் பிரமாணத்தினைத் தவறாயும், தங்களுக்குப் பாதகமான நிலைமையிலும் பயன்படுத்திவிடும் அபாயமும் உள்ளது; ஆனால் இம்மாதிரியான சம்பவங்கள் மிகவும் அபூர்வமாகவே காணப்படும், ஏனெனில் நம்முடைய ஒட்டுமொத்த சந்ததியார் விஷயத்திலும், விழுகையானது அன்பையும், தயாளத்தினையும் இல்லாமலாக்கிப்போட்டு, நம்மைச் சுயநலத்தினால் நிரப்பிப்போட்டது. இப்படியாகச் சூழ்நிலையாகிப் போனதாலேயே, "சுயத்தைப் பாதுகாப்பதே வாழ்க்கையின் முதல் சட்டமாகும்" எனும் பழமொழி உலகத்தில் காணப்படுகின்றது; சுயம் எப்போதும் முதலாவதாகக் காணப்பட வேண்டும் என்றும், மற்றவர்களைக் குறித்துக் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னதாக, நம்மைக் குறித்தே நாம் அக்கறைக்கொள்ள வேண்டும் என்றும் கருத்துக் காணப்படுகின்றது.

பரிசுத்த ஆவியினால் புதுச்சிருஷ்டிகளென நாம் ஜெநிப்பிக்கப்பட்ட பிற்பாடும்கூட, நம்முடைய மனங்கள் புதிதாகத் தொடங்கின பிற்பாடும்கூட, பழைய சுபாவத்தினுடைய சுயநலத் தன்மையானது, மிகவும் ஆழமாய் விதைக்கப்பட்டுக் காணப்படுகின்றபடியால், அது நம் ஜீவிதத்தின் முடிவுபரியந்தமும் நம்மீதான அதன் பிடியினைக் கொண்டிருக்கின்றது என்பதை அனுபவத்தின் வாயிலாக நாம் அனைவருமே அறிந்திருப்போம். கர்த்தருடைய சித்தத்திற்கு முழு இசைவுடன் காணப்பட வேண்டும் என்ற வாஞ்சையில் சிலர் இந்தப் பொன்னான பிரமாணத்தினை மிதமிஞ்சின கண்ணோட்டத்தில் எடுத்துக்கொண்டு, "உன் அயலான், அவனுக்கு நீ என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகின்றானோ, அதையே நீ உந்தன் அயலானுக்குச் செய்வாயாக" என்று பொன்னான பிரமாணம் தெரிவிப்பதாக எடுத்துக்கொள்கின்றனர்; மேலும் இப்படியாகப் பிரமாணத்தினை எடுத்துக்கொள்வது என்பது முற்றிலும் வேறுபட்ட பிரமாணமாய் இருக்கும் என்பதையும், எல்லா விதத்திலும் பாதகமாகவே காணப்படக்கூடும் என்பதையும் கவனிக்கத் தவறிவிடுகின்றனர். இப்படியாகச் சிலர்தான் தவறு செய்யும் அபாயம் இருப்பினும், அநேகர் இக்காரியத்தினை இக்கண்ணோட்டத்தில் சிந்தித்தவர்களாகப் பின்வருமாறு கூறுகின்றனர்: "இந்தப் பொன்னான பிரமாணத்தினை ஜீவியத்தின் அன்றாட காரியங்களில் எங்களால் கடைப்பிடித்திட முடியாது; உதாரணத்திற்கு என் அயலான் எனக்கு என்ன செய்ய நான் விரும்புவேனோ, அதையே நானும் என் அயலானுக்குச் செய்ய வேண்டுமெனில் . . . அப்படியானால் ஐந்து டாலர் மதிப்புள்ள ஒரு ஜோடி செருப்பினை நான் அயலானுக்கு ஒரு டாலருக்குக் கொடுக்க வேண்டியிருக்கும் . . . அல்லது இருபது டாலர் மதிப்புள்ள உடைகளை, ஐந்து டாலருக்குக் கொடுக்க வேண்டியிருக்கும் . . . அல்லது கோதுமையை அல்லது ஓட்ஸை பாதி விலைக்குக் கொடுக்க வேண்டியிருக்கும். ஒருவேளை இப்படியான ஒரு பிரமாணத்தை நான் ஒருவர் விஷயத்தில் கடைப்பிடித்தேனாகில், நான் அனைவருக்குமே அதைக்

கடைப்பிடிக்க வேண்டியிருக்கும் மற்றும் இப்படியே தொடர்ந்தால் சீக்கிரத்தில் என்னுடைய தொழிலானது நஷ்டத்தைச் சந்திக்கும்; ஆகையால் பொன்னான பிரமாணமானது தற்காலத்தில் மனுஷன் சம்பந்தப்பட்ட காரியங்களில் கடைப்பிடிக்கப்படவே முடியாது.”

ஆனால் இது பொன்னான பிரமாணம் குறித்த தவறான கண்ணோட்டமாயிருக்கின்றது என்றும், இதைக் குறித்து நிதானித்துப் பார்த்தாலே ஒருவனுடைய சொந்த இருதயத்தில் காணப்படும் சுயநலமே பிரச்சனை என்பதைக் கண்டுகொள்ளலாம் என்றும் நாங்கள் பதிலளிக்கின்றோம். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களைத் தெரிவித்து இருப்பவர், தனது அயலான் தன்னிடம் வாங்கும் பொருட்களை அதற்கேயுரியதான விலைக்குக் குறைவான விலையில் அவருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று தன்னிடம் எதிர்ப்பார்ப்பான், காரணம் தானும் தன்னுடைய அயலானிடம் பொருட்களை வாங்கும்போது அதற்கேயுரிய விலைக்குக் குறைவான விலையில் தனக்குத் தரப்பட வேண்டும் என்ற எதிர்ப்பார்ப்பைக் கொண்டிருப்பார் என்ற சிந்தனை உடையவராய் இருக்கின்றார். பொன்னான பிரமாணத்தைக் கடைப்பிடிக்கும் காரியமானது இவருக்கு, இவரது பிரச்சனையைச் சுட்டிக்காண்பித்திடும்; இவர் செருப்பு வாங்கும்படியாக தனது அயலானிடம் செல்கையில், தனது அயலான் இவருக்கு என்ன செய்ய வேண்டும் என்று இவர் விரும்புவாரோ அதையே இவரும் அயலானுக்குச் செய்திட வேண்டும் என்றும், செருப்புகளுக்காக அயலானுக்கு நியாயமானதொரு விலையினை, ஜீவிப்பதற்கு நியாயமானதொரு இலாபத்தினை, தான் செலுத்திட வேண்டும் என்றும் உள்ள படிப்பினையைக் கற்றுக்கொடுத்திடும். மேலும் இப்படியே எல்லாப் பரிவர்த்தனைகளிலும் செய்திட வேண்டும். ஒருவேளை நாம் உற்பத்தியாளராய் இருந்து, பொருள்களை விற்கையில், நமக்கு என்னச் செய்யப்பட வேண்டுமென்று விரும்புவோமோ அப்படிபோலவே - விவசாயினுடைய விளைச்சலுக்கு உரிய விலையைச் செலுத்திடுவதற்கும், உற்பத்தியாளருடைய பொருட்களுக்குரிய விலையினைச் செலுத்திடுவதற்கும் நாம் விருப்பம் உள்ளவர்களாய் இருக்க வேண்டுமென்று பொன்னான பிரமாணமானது நமக்குக் கற்றுத் தருகின்றதாய் இருக்கின்றது. இதுபோலவே ஒருவேளை நாம் விற்கிறவர்களாய் இருக்கையில் நம்முடைய வாடிக்கையாளர்களிடமிருந்து அதிக இலாபம் ஈட்டும் விதத்தில் விலை சொல்வதற்கு நாம் எண்ணிவிடக்கூடாது, அதாவது அவர்கள் ஒருவேளை விற்கிறவர்களாகவும், நாம் வாடிக்கையாளர்களாகவும் இருக்கும் பட்சத்தில் அவர்களிடம் நாம் எதிர்ப்பார்ப்பதையே நாமும் அவர்களுக்குச் செய்திட வேண்டும். ஆகையால் கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் யாரெல்லாம் ஜீவியத்தின் காரியங்கள் அனைத்திலும் இந்தப் பொன்னான பிரமாணத்தைப் பயன்படுத்துவதில் நன்கு பழக்கமடைந்திருப்பார்களோ அவர்கள் நீதி, நியாயம், நேர்மை பற்றின தங்களது புரிந்துகொள்ளுதலானது இதினிமித்தம் அதிகமடைந்திருப்பதைக் கண்டுகொள்வார்கள்; மேலும் தேவனுக்கொத்த இந்தச் சாயல்களானது - அதாவது அவர்கள் ஆண்டவருடைய பொன்னான பிரமாணத்திற்கு இசைந்திருப்பதின் காரணத்திற்காக மாத்திரம் அல்லாமல், அவற்றின் உண்மையான அழகையும், பிரமாண்டத்தையும் அவர்கள் அடையாளம் கண்டுகொள்ளும் காரணத்தினாலும், அவற்றோடு அவர்களின் இருதயங்கள் இசைந்திருப்பதின் காரணத்தினாலும், அவற்றிற்கு அவர்கள் கீழ்ப்படியும் நிலையை அடைவது வரையிலும் தேவனுக்கொத்த இந்தச் சாயல்களானது - அவர்களது குணலட்சணங்களில் ஒரு பாகமென அவர்களில் அதிகமதிகமாய் வளர்ச்சியடையும்.

நீதியை மனதில் ஆழப் பதியவைத்திடும் இந்தப் பிரமாணமானது, இதையும் தாண்டி கருணையையும்கூட மனதில் பதியவைக்கின்றது; அதாவது நாம் ஒருவேளை தேவையில் இருப்பவர்களாகக் காணப்படும் பட்சத்தில், மற்றவர்களிடத்தில் நாம் எதிர்ப்பார்த்திடும் கருணையினை நம் மனதில் பதியச் செய்திடும். ஓ! கர்த்தருடைய உண்மையான பரிசுத்தவான்கள் இந்தப் பொன்னான பிரமாணத்தினுடைய செல்வாக்கின் கீழ் வருகையில் அவர்கள் ஆவிக்குரிய குணலட்சணத்தில்

எத்துணை முழுமையடைந்தவர்களாக இருப்பார்கள்! இது ஜீவியத்தின் கிரியைகளை மாற்றி அவர்கள் அவர்களோடு கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டிருக்கும் அனைவரிடத்திலும் நீதியோடு காணப்படச் செய்து, பின்னர் அவர்களது உதவிக்கான தேவையில் காணப்படுபவர்கள் யாவருக்கும், தங்களால் முடிந்த உதவியினை யாருக்கும் பாதகமில்லாமல் செய்யத்தக்கதான கருணையுடையவராகவும் இருக்கச் செய்திடும் - மேலும் இது அவர்களிடத்திலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தைகளின் விஷயங்களிலும்கூட அதன் தாக்கத்தைக் கொண்டிருக்கும். இந்தப் பொன்னான அளவுகோலினுடைய வழிநடத்துதலின் கீழ், கசப்பான அல்லது கோபமான அல்லது பழித்தூற்றுதலான வார்த்தைகள் குறைந்துவிடும்; ஏனெனில் இம்மாதிரியாகத் தங்களிடத்தில் கோபமாகவும், கசப்பாகவும் மற்றும் குரோதமாகவும் உள்ள வார்த்தைகள் பேசப்படுவதையோ அல்லது தங்களைக் குறித்துப் புறங்கூறப்படுவதையோ யாரும் விரும்புவதில்லை. கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டிருப்பவர்கள் கோபம், பகைமை, குரோதம், வாக்குவாதம், பொறாமை, தூஷணங்கள் முதலானவைகளைக் களைந்துபோட வேண்டும் என்று அப்போஸ்தலன் நம்மிடத்தில் கூறியதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இன்னுமாக இந்தப் பொன்னான பிரமாணமானது அன்பான வார்த்தைகளை, கனிவான செயல்பாடுகளை, தாழ்மையான நடக்கையைக் கொண்டிருப்பதற்கும்கூட நம்மை வழிநடத்தும்; ஏனெனில் யார்தான் இப்படியெல்லாம் தனது அயலான் நடக்கக்கூடாது என்று எண்ணம்கொள்வார்கள்? அப்போஸ்தலர் மறுபடியும் சொல்வது போன்று சாந்தம், பொறுமை, தயவு, நீடியபொறுமை, சகோதர சிநேகம், அன்பு முதலான கிறிஸ்தவ குணங்களை நாம் தரித்துக்கொள்ள வேண்டும் (கொலோசெயர் 3:8-10, 12-15).

வெளியரங்கமான கிரியைகளின் விஷயத்தில் துவங்கி, பின்னர் நம்முடைய வார்த்தைகளின் விஷயங்களையும் தாக்கத்திற்குள்ளாக்கும் இந்தப் பொன்னான பிரமாணமானது சீக்கிரமாய் நம்முடைய எண்ணங்கள் விஷயங்களிலும்கூட அதன் தாக்கத்தைக் கொண்டிருக்கும்; மற்றவர்கள் நம்மைக் குறித்து அற்பமாய் எண்ணுவதையோ, நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு கிரியைகளைக் குறித்தும் தவறாகக் கற்பனை பண்ணிக்கொள்வதையோ நாம் விரும்புவதில்லை. மாறாக நம்முடைய வார்த்தைகளையும், நம்முடைய கிரியைகளையும், அன்போடும், இரக்கத்தோடும் கண்ணோக்க நாம் விரும்புவோம்; ஆகையால் இந்தப் பொன்னான பிரமாணத்தினுடைய செல்வாக்கின் கீழ் மற்றவர்களைக் குறித்த நமது எண்ணங்கள் மிகவும் கருணையோடும், மிகவும் பரந்த மனப்பான்மையோடும், சந்தேகிக்கும் தன்மை இல்லாமலும் காணப்படும்.

இந்தப் பொன்னான பிரமாணமே, நம்முடைய அருமை மீட்பர் வேறொரு தருணத்தின்போது, "உன்னை நீ அன்புகூருவதுபோல உன் அயலானையும் அன்புகூருவாயாக" என்று கூறி வேறு வார்த்தைகளில் வெளிப்படுத்திட்ட திவ்விய பிரமாணமாகும் என்பதில் உறுதியே. ஆகையால் ஒரு பிரமாணமானது, மற்றப் பிரமாணத்தினை விளக்குகின்றது என்றும், நாம் நம்மை அன்புகூருவதுபோன்று நம் அயலானை அன்புகூருவது என்பது, நம் அயலான் எவ்விதம் நம்மை அன்புகூரவும், நமக்கு எவற்றைச் செய்யவும் நாம் விரும்புகின்றோமோ, அவ்விதமே நாமும் நம் அயலானை அன்புகூர வேண்டும் மற்றும் அயலானுக்காய் நாம் காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதைக் குறிக்கின்றதாய் இருக்கும் என்றும் நாம் எடுத்துக்கொள்ளலாம். இதைவிட மேலான அர்த்தம் இருக்கும் என்று நாம் எடுத்துக்கொள்ள முடியாது. சட்ட ரீதியாகவோ அல்லது இரத்தபந்தத்தின் வாயிலாகவோ நாம் பொறுப்பைப் பெற்றிருப்பவர்களுக்காகவும் - நமது குடும்பத்தினர், நமது உறவினர்களுக்காகவும் மற்றும் நமக்காகவும் உள்ள நியாயமான தேவைகளைச் சந்திக்கும்படி தேவன் நம்மிடம் எதிர்பார்க்கின்றார் என்று அப்போஸ்தலன் கூறியுள்ளார் -" ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்." (1 தீமோத்தேயு 5:8)

ஆகையால் நம்முடைய அயலாருக்கு நாம் எதையாகிலும் செய்வதற்கு முன்பதாக, நமது சொந்த வீட்டாரைக் குறித்தே நாம் முதலாவதாக அக்கறைக் கொள்ள வேண்டும், பொறுப்பேற்க வேண்டும் மற்றும் நியாயமான கவனம் செலுத்திட வேண்டும். இதினிமித்தம் நமது அயலாருக்கும், நமக்கும் இடையேயும், நமது அயலார் குடும்பத்திற்கும், நம்முடைய சொந்த குடும்பத்திற்கும் இடையேயும் வித்தியாசம் காணவேண்டும்; எனினும் இக்காரியமானது பொன்னான பிரமாணத்தினால் நன்கு சீர்ப்படுத்தப்படுகின்றது; நமது அயலான் தேவையின் சூழ்நிலையில் காணப்படுகையில் - நாம் ஒருவேளை அயலானின் சூழ்நிலைமையிலும், அவர் நம் நிலைமையிலும் காணப்பட்டால் அவர் நமக்கு என்ன செய்திட வேண்டும் என்று நாம் விரும்புவோமோ, அதையே நம்முடைய அயலான் தேவையின் சூழ்நிலையில் காணப்படுகையில் - நாம் அவருக்குச் செய்திட வேண்டும் என்று பொன்னான பிரமாணம் நம்மிடம் எதிர்ப்பார்க்கின்றது என்று பிரமாணம் குறித்துச் சரியாய்ப் புரிந்துகொள்ளப்பட்டால், நாம் தெரிந்து கொள்ளலாம். மேலும் நம்முடைய மனங்களானது, நீதியின் தளத்துடன் சமநிலையில் காணப்படுவதினால், நாம் பெருந்துயரத்தில் காணப்படுகையில், நம் அயலான் முதலாவதாக தன் சொந்தக் குடும்பத்திற்கு நியாயமான தேவைகளைப் பூர்த்திச் செய்ய வேண்டும் என்றும், அவரைச் சார்ந்திருப்பவர்களுக்கு எதுவும் இல்லாமல் போகத்தக்கதாக அல்லது அவர்களுக்குப் பாதகம் உண்டாக்கத்தக்கதாக நமக்குக் கொடுத்து உதவிடக்கூடாது என்றும் நாம் எண்ணம் கொண்டிட வேண்டும்.

## பொன்னான பிரமாணம் என்பது கடமையா?

சிலர் பின்வருமாறு கேட்கலாம்: "கிறிஸ்தவர்களாகிய நாம் இந்தப் பொன்னான பிரமாணத்தினை நம்முடைய அன்றாட ஜீவியத்தில் கைக்கொள்ள முயற்சித்திட வேண்டுமா? கிறிஸ்தவ ஜனங்கள் மத்தியில்கூட மிகச் சொற்பமானவர்களே இப்பிரமாணத்தினைப் புரிந்துகொண்டவர்களாயிருக்க அல்லது இப்பிரமாணத்தினைக் கொஞ்சமேனும் கடைபிடிக்க நாடுகின்றவர்களாக இருக்க, நாம் அதை மிகவும் நல்லதொரு பிரமாணம் என்றும், ஆனாலும் அது நம்மீது கடமையாகக் காணப்படுகிறதில்லை என்றும், நாம் நித்திய ஜீவனையும், பரலோக மகிமையும் அடையும் காரியமானது, இந்தப் பொன்னான பிரமாணத்தினைக் கைக்கொள்ளுகிற விஷயத்தைச் சார்ந்திருப்பதில்லை என்றும் எண்ணிக்கொள்ளலாமா? அதைப் பூரணப்பிரமாணத்திற்கான நல்லதொரு கொள்கையென/அளவுகோலென மனதில் பெற்றிருக்கலாம். ஆனாலும் அந்தக் கொள்கைக்கு ஏற்ப எந்தவிதத்திலும் வாழவேண்டாம் என்று நாம் எண்ணிக்கொள்ளலாமா?"

இந்தப் பொன்னான பிரமாணத்தினைக் கொண்டுதான் நமது அருமை மீட்பருடைய ஒவ்வொரு செயல்பாடுகளும் அளந்துபார்க்கப்பட்டது என்றும், அதற்கு இசைவாகத்தான் அவர் வாழ்ந்தார் என்றும், அதன்கீழ் அவர் நமக்காக தம் ஜீவனைக் கொடுத்தார் என்றும், அவரது சீஷர்களாக, அவரது பின்னடியார்களாகக் காணப்படுபவர்கள் யாவருக்கும் இப்பிரமாணம் அவசியமானது என்றும், இவர்கள்மீது கடமையாய் உள்ளது என்றும் நாம் பதிலளிக்கின்றோம். இராஜ்யத்தில் அவரது உடன்சுதந்தரர்களாக விரும்புவோர் யாவரும் அவர் வைத்துச்சென்ற மாதிரியின்படி, அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றிட வேண்டும் (1 பேதுரு 2:21); இன்னொரு அப்போஸ்தலன் கூறியுள்ளதுபோன்று, கிறிஸ்துவோடுகூட இராஜ்யத்தில் உடன்சுதந்தரர்களாய் இருக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சபை ஒன்றைத் தேவன் பெற்றிருக்க முன்தீர்மானித்துள்ளார் மற்றும் அதேபோல் தற்காலத்தில் தேவனுடைய அன்பான குமாரனாகிய நமது கர்த்தர் இயேசுவின் சாயலை அடைபவர்கள் மாத்திரமே இறுதியில் அந்த மகிமையடையும் சபையின் அங்கத்தினர்களென ஏற்றுக்கொள்ளப் படுவார்கள் என்றும் முன் தீர்மானித்துள்ளார்; மேலும் அவரைப் பின்பற்றுவது என்பது, அவரிலும், அவரது

நடத்தையிலும் மாதிரித்துவம் படுத்தப்பட்ட பொன்னான பிரமாணத்தினைப் பின்பற்றுவதாகும். ஆகையால் இராஜ்யத்தில் பங்கடைய விரும்புபவர்கள் யாவரும், குணலட்சணத்தின் வளர்ச்சிக்குக் கவனம் கொடுத்திட வேண்டும் மற்றும் இந்தப் பொன்னான பிரமாணமானது அத்தகைய குணலட்சண வளர்ச்சிக்கு அவசியமானதாகும் - இது நம்மில் நீதி அல்லது நியாயத்தின் கொள்கைகளை மாத்திரமல்லாமல், அன்பின் ஆவியினையும், சுயநலமில்லாமல் மற்றோருக்கு நன்மைச் செய்திடும் ஆவியினையும் வளர்த்துகின்றதாயிருக்கும் (உரோமர் 8:29).

## மனுஷீக பெலவீனத்தில், திவ்விய பலமானது பூரணமாய்ச் செயல்படுகின்றது

மீண்டும் எழும் கேள்வி என்னவெனில்: சுபாவத்தில் விழுந்துபோனவர்களாகவும், அபூரணர்களாகவும் மற்றும் முழுக்கச் சுயநலத்தினையும், கீழ்த்தரமான தன்மைகளையும் உடையவர்களாகவும் இருப்பவர்களால் எப்படி - பூரண மனுஷன் கீழ்ப்படியக்கூடியதும், நமது கர்த்தர் இயேசுவினால் அவரது சகல நற்கிரியைகள் மற்றும் பலிசெலுத்துதல் காரணமாய் நிறைவேற்றப்பட்டதுமான இந்தப் பொன்னான பிரமாணத்தினைக் கைக்கொள்ள முடியும்? புறம்பான நடக்கைகளை மாத்திரமல்லாமல், நம்முடைய இருதயங்களின் எண்ணங்களையும், சிந்தனைகளையும்கூட அறிய வல்லமையுள்ளவரின் பார்வையில் நாம் எங்ஙனம் இந்தப் பொன்னான பிரமாணத்தினைக் கைக்கொள்பவர்களாக அங்கீகரிப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்ப்பார்க்க முடியும்?

விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலாகிய இந்தச் சுவிசேஷயுகத்திற்கான தேனுடைய கிருபையுள்ள ஏற்பாடு நமக்கு உதவிபுரிய காணப்படுகின்றது என்று நாம் பதிலளிக்கின்றோம். நம்முடைய நீதிமானாக்கப்படுதலானது - "கடந்த காலத்தின் பாவங்களை" மூடுவது மாத்திரமல்லாமல், நாம் நம்மை அவரது பலிபீடத்தில் ஜீவனுள்ள பலிகளாக ஏறெடுக்கத்தக்கதாகக் கிறிஸ்துவுக்குள்ளாய் நம்மைத் தேவன் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவர்களாக்குகின்றது; மேலுமாக அது - ஜீவியத்தின் பிரயாணம் முழுவதிலும் நம்மோடுகூடக் காணப்படுகின்றது; மேலுமாக வேண்டுமென்றே செய்யப்படாத நம்முடைய குறைபாடுகள் அனைத்திற்காகவும் - அது கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய கிருபையின்படி ஈடு செய்திடும்; அப்போஸ்தலன் கூறுவதுபோன்று, "மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் (பொன்னான பிரமாணத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள) நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறுகிறது." (உரோமர் 8:4)

நாம் அனைவரும் ஒன்றுபோல் விழுந்தவர்களாய் இராதபடியினால், ஒன்றுபோல் சுயநலமில்லாதவர்களாய் இராதபடியினால், மற்றவர்களால் செய்ய முடிகிறதைக்காட்டிலும், சிலர் திவ்விய பிரமாணத்தினுடைய ஆவிக்கு அதிகம் ஒத்துநடப்பார்கள் மற்றும் பொன்னான பிரமாணத்தின் அளவில் அதிகம் அடைந்தவர்களாய் இருப்பார்கள்; எனினும் எந்த விழுந்துபோன சிருஷ்டியினாலும், மாம்சத்தின் பல்வேறு பலவீனங்களினால் முடமாயிருக்கும் காரணத்தினை முன்னிட்டு பொன்னான பிரமாணம் சொல்லுபவைகளின்படி முழுவதுமாய் நடக்க முடியாது; மேலும் கிறிஸ்துவுக்குள்ளான தேவ கிருபையானது நம்முடைய குறைவுகளையெல்லாம் மூடுகின்றது; முன்மாதிரியின்படி அதிகமாய்ப் பின்பற்றுகிறவர்களும்கூட, அதை முழுமையாய்ப் பின்பற்றுகிற காரியத்திற்கு இன்னும் தொலைவாகவே இருக்கின்றனர் மற்றும் இதன் காரணமாக அவர்களது குறைவுகளை ஈடுசெய்யப்படும் வண்ணமாகக் கிறிஸ்துவினுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தின் புண்ணியத்தினால் தரிப்பிக்கப்படுவது அவசியமாகுகின்றது; மேலும் அதிகம் விழுந்துபோனவர்களாகவும், மிகவும் சிறந்த பிரயாசம் எடுத்தும்கூடப் பொன்னான பிரமாணமாகிய மாபெரும் நியமத்தின் காரியங்களுக்கு வெகுதொலைவில்

காணப்படுபவர்களாகவும் இருப்பவர்கள், அவர்களது குறைவுகளை ஈடுசெய்யத்தக்கதாக அவ்வளவுக்கு அதிகமாய்த் தேவகிருபைக்கான தேவையில் காணப்படுவார்கள். ஆகையாலே பாவமும், அபூரணமும் அதிகம் பெருகின இடத்தில், தேவ கிருபை அதிகமாய்ப் பெருகும் என்று அப்போஸ்தலன் தெரிவித்துள்ளார்; கிறிஸ்துவுக்குள்ளாகக் காணப்பட்டு, அவரது அடிச்சுவடுகளில் நடக்க நாடி, தங்கள் இருதயங்களில் தங்களைப் பொன்னான பிரமாணத்தினைக் கொண்டு அளந்து பார்த்து, அது சொல்லுபவைகளுக்கு இசைவாகத் தங்களால் முடிந்தமட்டும் ஜீவிக்க நாடுபவர்கள், அவர்களது பிரயாசங்களில் ஜெயம் அடையும் காரியங்களில் வித்தியாசப்படலாம்; ஆனாலும் திவ்விய கண்ணோட்டத்தில், இவர்கள் அனைவரும், நமது அருமை மீட்பருடைய பலியினுடைய புண்ணியத்தினால் இவர்களது குறைவுகளை மூடப்பெற்றவர்களாகக் கருதப்படுகின்றனர் மற்றும் நியாயப்பிரமாணத்தின் நீதியானது, அதன் உண்மையான அர்த்தமானது, அதன் ஆவியானது, பொன்னான பிரமாணத்தின் உண்மையான முழுமையானது இவர்களில் பூரணமாய் - தெய்வீக அங்கீகரிப்பிற்குப் பாத்திரமாய் நிறைவேற்றப்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்றது.

ஒரு நாளிலோ அல்லது ஒரு வாரமாகவோ அல்லது ஒரு மாதமாகவோ இந்தப் பொன்னான பிரமாணமானது நம்மில் நிறைவேற்றப்பட்டதாக இப்படியாய்க் கருதப்படுவது மாத்திரம், நாம் "ஜெயங்கொண்டவர்களாக" எண்ணப்படுவதற்குப் போதாது; மாறாக நம்மால் முடிந்தமட்டும் நாம் கர்த்தருடைய அடிச்சுவடுகளில் அதிக கவனமாய் நடப்பதை உண்மையாய்த் தொடர வேண்டும் மற்றும் நம்மால் முடிந்த மட்டும் அவரது பொன்னான பிரமாணத்தினைப் பயன்படுத்துவதை உண்மையாய்த் தொடர்ந்திட வேண்டும்; மேலும் இப்படியாக நாளுக்குநாள், வருஷா வருஷம் தொடர்ந்து செய்ய வேண்டும், அதுவும் தொடர்ச்சியான மற்றும் அதிகரித்துக்கொண்டுவரும் வைராக்கியத்தோடு தொடர்ந்து செய்ய வேண்டும் - அதாவது நமது ஆண்டவர் குணலட்சணத்தினுடைய நம்முடைய வளர்ச்சியினைக் கவனித்து வருபவராக இருந்து: "போதும், குணலட்சணம் உறுதியடைந்துவிட்டது; நீதிக்கான அன்பு நிரந்தரமானதாகவும், முழுமையாய் வளர்ச்சியடைந்ததாகவும் உள்ளது; அன்பின் ஆவியானது நிலையானதாகத் தெரிகின்றது மற்றும் மாம்சத்தில் சுயநலத்தின் சில தடயங்கள் இன்னமும் காணப்பட்டாலும்கூட, உண்மையான இலக்குடன் ஒப்பிடும்போது, அவை மங்கலாகவே காணப்படுகின்றது; மாம்சத்தில் இல்லை, மாறாக இருதயத்தில், சித்தத்தில் ஜெயம் அடையப்பெற்றிருப்பதற்கான நல்ல சான்று விளங்குகின்றது" என்று சொல்லும்வரை மேல்கூறியபடி தொடர்ந்து செய்ய வேண்டும்.

"என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் " (மல்கியா 3:17).

## ஜீவியத்தின் விஷயங்களில், பொன்னான பிரமாணத்தினைச் செயல்படுத்தும் விஷயங்களில் சிலரால் செய்யப்படும் மிகக் கடுமையான தவறு

பொன்னான பிரமாணமானது அதன் தாக்கத்தினை உலக ஜனங்களிடத்திலும்கூடக் (பெயர்க் கிறிஸ்தவர்களிடத்திலும்கூடக்) கொஞ்சம் கொண்டிருக்கின்றது என்பதில் ஐயமில்லை; அதுவும் இவர்கள், தங்களது அன்றாட நடக்கையினை அளந்து பார்ப்பதற்கான அளவுகோலாக பொன்னான பிரமாணத்தினை அடையாளம் கண்டுகொள்ளவும், பயன்படுத்தவும், வைராக்கியமாய் நாடுகிறார்கள்; ஆனாலும் அதை ஒரு பிரமாணமெனக் கைக்கொள்ளாதவர்களாகவும் அல்லது கைக்கொள்வதாக அறிக்கைப்பண்ணிக் கொள்ளாதவர்களாகவும் காணப்படுகின்றனர். கர்த்தருக்கென்று தங்களை முழுவதுமாகக் கொடுத்திட்டவர்களும், திவ்விய சித்தத்தின் பிரமாண்டமான வெளிப்பாடு என இந்தப் பொன்னான பிரமாணத்தினை அடையாளம் கண்டுகொண்டுள்ளவர்களுமான கிறிஸ்தவர்கள்

மத்தியிலும்கூட, இந்தப் பொன்னான பிரமாணத்தினைச் சரியாய்ப் பயன்படுத்திடும் விஷயத்தில் கடுமையாய்த் தப்பெண்ணம் கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு, கர்த்தருடைய ஜனங்களில் உயர் பண்புகளுடையவர்களில் சிலர்: "வாருங்கள், நாம் சமுதாயத்தையும், உலக சந்தோஷங்களையும் விட்டுவிட்டு, விழுந்துபோயிருப்பவர்களுக்கான முன்னேற்றத்திற்காய் - சமுகம் மறுமலர்ச்சிக்காக, பொருளாதார மறுமலர்ச்சிக்காக, ஒழுக்கம் சார்ந்த மறுமலர்ச்சிக்காக, குடிக்காரர்களின் மறுமலர்ச்சி முதலியவற்றிற்காய் - நம் நேரங்களை அர்ப்பணிப்போம்" என்கிறார்கள். இன்னும் சிலர் இதே ஆவியினாலும், இந்தப் பொன்னான பிரமாணத்தினை நிறைவேற்ற வேண்டும் என்ற இதே வாஞ்சையினாலும் உந்தப்பட்டவர்களாக, "நாம் நமது குடும்பங்களையும், நண்பர்களையும் விட்டுப் பிரிந்து, ஊழியக்காரர்களென, அந்நிய மார்க்கத்தினருக்குக் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கத்தக்கதாக தூர தேசங்களுக்குப் புறப்பட்டுச் செல்லலாம் வாருங்கள்" என்கிறார்கள்.

இவர்கள் புரியும் இப்படியான வேலைகளுக்கான முறைமைகளை நாம் ஒத்துக்கொள்கிறோமா அல்லது இல்லையா என்பது ஒரு பக்கம் இருந்திட்டாலும், இத்தகைய உயரிய உணர்வுகளை மதிக்கும்படிக்கு நாம் கடமைப்பட்டிருக்கின்றோம். எல்லாத் தருணங்களிலும் இல்லாவிட்டாலும், அநேகமான சந்தர்ப்பங்களில் நேரம், செல்வாக்கு, சுகம் முதலியவற்றை இப்படித் தியாகம் செய்யும் காரியங்களுக்குக் கீழ் அடிப்படையாய்க் காணப்படும் உயரிய கொள்கைகளை நாம் விரும்பவே/பாராட்டவே செய்கின்றோம்; இது இந்த அருமையான நண்பர்களிடத்திலுள்ள பொன்னான பிரமாணத்தினுடைய நடப்பித்தலேயாகும்; இவர்கள் இவர்களிடத்திலும், மற்றவர்களிடத்திலும் கூறுவதாவது: "ஒருவேளை நாம் சேரிகளிலோ அல்லது அந்நிய மார்க்கச் சீரழிவுக்குள்ளாகவோ காணப்பட்டிருந்தால், தேவ பிள்ளைகளில் யாரேனும் நம்மிடமாய் வந்து, நம்மைச் சீர்த்தூக்கிவிட, நமக்கு வெளிச்சமூட்டிட நாம் விரும்புவோம்; ஆகையால் மற்றவர்கள் நமக்குச் செய்ய வேண்டும் என்று நாம் விரும்புபவற்றை, நாமும் மற்றவர்களுக்குச் செய்திட வேண்டும்" என்பதேயாகும்.

இது பொன்னான பிரமாணம் குறித்தத் தெளிவான சிந்தித்தலும், சரியாய்ப் பொருத்திப் பார்த்தலுமாகும்; எனினும் தவறானதாகும் என்றும் நாம் நம்புகின்றோம். கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் கிறிஸ்தவன் கற்றுக்கொள்ளும்படிக்கு அழைக்கப்படும் முதலாம் படிப்பினை, அவனது கணிப்புகள்/நிதானிப்புகள் குறைவுள்ளவைகள் என்பதும், விழுகையின் காரணமாய் நமது சரீர ஆற்றல்கள் மாத்திரம் சீரழிந்துபோகாமல் நமது மன ஆற்றல்களும் சீரழிந்து போயுள்ளது என்பதும், முழு உலகமும் சரீரத்தில் மாத்திரமல்லாமல், மனதிலும், நிதானிப்பிலும்கூட ஆரோக்கியமற்றுக் காணப்படுகின்றது என்பதுமாகும். நாம் ஞானத்தில் குறைவுள்ளவர்களாய் இருக்கின்றோம் என்றும், இதன் காரணமாகவே, "எல்லா மனுஷனும் தேறினவனாகும்படிக்கு" அவர் தம்முடைய புத்தகமாகிய வேதாகமத்தினை அருளியுள்ளார் என்றுமுள்ளவைகளே - தேவ பிள்ளைகள் கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் கற்க வேண்டிய அடிப்படைப் பாடங்களாய் இருக்கின்றன (2 தீமோத்தேயு 3:16, 17).

இரட்சிப்பின் வேலை என்பது மனுக்குலத்தினால் செய்ய முடியாத வேலையென்றும், ஆகையால் தேவன் அவ்வேலையினைக் கையில் எடுத்துள்ளார் என்றும் நமக்கு வேதாகமத்தில் கற்பிக்கப்பட்டுள்ளது; தேவன் அவ்வேலைக்கடுத்த காரியங்கள் தானாய் இயங்கும்படி விட்டுவிடவில்லை என்றும், நம்முடைய பூரணமற்றக் கணிப்புகள் மற்றும் அற்பமான பிரயாசங்கள் வசத்திலும் அவ்வேலைக்கடுத்த காரியங்களை அவர் விட்டுவிடவில்லையென்றும் நமக்குக் கற்பிக்கப்பட்டுள்ளது; உலகத்தோற்ற முதற்கொண்டே மாபெரும் இரட்சகர் (தேவன்) தமது வேலையினைத் திட்டமிட்டுள்ளார் என்றும், இப்படியிருந்த போதிலும் நான்காயிரம் வருடங்களுக்குப் பின்னரே அவ்வேலையை நிறைவேற்றும் விஷயத்தில் முதலாம் மாபெரும் நடவடிக்கையினை, அதாவது ஆதாம் மற்றும் அவரது சந்ததிக்கான மீட்கும் விலையாகத் தம்முடைய குமாரனைக் கொடுக்கும் காரியத்தினை மேற்கொண்டார் (1 பேதுரு 1:20) என்றும் நமக்குக்

கற்பிக்கப்பட்டுள்ளது. இரட்சிப்பின் இவ்வேலையினைத் துவங்கியுள்ள தேவன், அவ்வேலையினைக் கைவிட்டுவிடவில்லையென்றும், கைவிடுவதற்கு நோக்கம் கொண்டிருக்கவில்லையென்றும், இறுதியில் நியாயத்தைக்கொண்டுவருவார் என்றும், இறுதியில் மனுஷனுக்கான தம்முடைய ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு, திருப்தியாவார் என்றும், இறுதியில் கர்த்தரைப் பற்றின அறிவானது முழு உலகத்திலும் நிரம்பியிருந்து, சிறியோர் முதல் பெரியோர் வரை யாவரும் அவரை அறிந்திருப்பார்கள் என்றும் நமக்குக் கற்பிக்கப்பட்டுள்ளது; அவர் நீதியை வெளிப்படுத்துவார் என்றும், இறுதியில் பூமியின் குடிகள் அனைத்தும் தேவனுடைய கிருபை மற்றும் தயவு குறித்த அறிவினால் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள் மற்றும் பலனடைவதற்கான வாய்ப்பினாலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள் என்றும், நமக்குக் கற்பிக்கப்பட்டுள்ளது; மாபெரும் தீர்க்கத்தரிசியாகிய இராஜாவின் சொல் கேளாதவர்கள் ஜனத்திலிராதபடிக்கு இறுதியில் இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டுபோவார்கள் என்றும் நமக்குக் கற்பிக்கப்பட்டுள்ளது; இனிமேல் மரணம் இருப்பதில்லை, அழுகையிருப்பதில்லை, வலியிருப்பதில்லை; ஏனெனில் ஆதாமின் பாவமும், அதன் தண்டனையும், அதனால் உண்டான சீர்க்குலைவுமாகிய முந்தினவைகள் ஒழிந்துபோயிருக்கும். ஏசாயா 14:24, 27; 55:11; மத்தேயு 12:20; ஏசாயா 53:11; 11:9; எரேமியா 31:34; அப்போஸ்தலர் 3:19-23; வெளிப்படுத்தல் 21:3, 4.

ஆனால் கர்த்தருடைய அருமையான ஜனங்களில் அநேகர் இந்தக் கிருபையான ஏற்பாடுகளையும், அவரது வார்த்தையிலுள்ள வாக்குத்தத்தங்களையும் பார்க்கத்தவறினவர்களாகவும், அன்பின் ஆவியினைக் கொஞ்சம் கொண்டவர்களாகவும் காணப்பட்டு, தங்களுடைய ஞானத்தைக் காட்டிலும், தேவனுடைய ஞானம் பெரியதாய் இருப்பதுபோன்று தங்களுடைய அன்பைக்காட்டிலும் தேவனுடைய அன்பு பெரியது என்பதை மறந்துபோய்விடுகின்றனர்; ஆகையால் முழு இரட்சிப்பின் திட்டமும் தேவனுடையதே என்பதும், அதை அவர் மற்றவர்கள் வசத்தில் தள்ளிவிடவில்லை என்பதும், அதை அவர் தாமே தமது ஏற்றவேளையில் நிறைவேற்றி முடிப்பார் என்பதுமான உண்மைகளைக் கவனிக்கத்தவறிவிடுகின்றனர். இதை மறந்துவிடுகிறபடியாலேயே, அவர்கள் பொறுப்பினுடைய பாரப்பளுவினால் கஷ்டப்படுகின்றனர் மற்றும் உலகத்தினுடைய இரட்சிப்பானது ஏதோ தங்கள் தோள்கள் மீது காணப்படுவதாக எண்ணுகின்றனர் மற்றும் தங்களை முக்கியமானவர்களாகக் கருதுவதினாலும், தேவ வார்த்தைகளை மறந்துபோவதினாலும் இவர்கள் சுவிசேஷம் பரப்பும் ஊழியத்திற்கும், சேரிப்பகுதிகளில் ஊழியத்திற்கும், அந்நிய மார்க்கத்தினர் மத்தியில் ஊழியத்திற்கும் என்று புறப்பட்டுச் செல்கின்றனர்.

---

R3803 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## பொன்னான சட்டம்

"காயமடைந்த மனுஷனுக்கு இரக்கம் பாராட்டின சமாரியன், உண்மையில் அம்மனுஷனுக்கு அயலானாய் இருக்கின்றான்; ஆனால் அம்மனுஷனுக்கு இரக்கம் காட்டிட மறுத்த ஆசாரியனும், லேவியனும் அம்மனுஷனுடைய அயலானாகக் கருதப்படக்கூடாது; ஆகவே, அம்மனுஷன் காயம் ஆறின பிற்பாடு, தனக்கு உதவின சமாரியனுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ள வேண்டும். சமாரியனுக்கு ஊழியம் புரிவதில், தன்னுடைய ஜீவனை ஒப்புக்கொடுத்திடவும் விரும்பி காணப்பட்டிட வேண்டும். ஆனால் அயலான் போன்று செயல்படாத மற்ற இருவரையும் அம்மனுஷன் தன் அயலானாகக் கருதக்கூடாது மற்றும் தன்னில் அன்புகூருவது போன்று அவர்களையும் அன்புகூர முற்படக்கூடாது" என்று கர்த்தருடைய ஜனங்களில் சிலர் கூறி, மேற்கூறப்பட்டுள்ள நியாயப்பிரமாணத்தின் இந்தக்

கோரிக்கையிலும், இதற்கான கர்த்தருடைய உவமையிலுள்ள விளக்கத்திலும் காணப்படும் முக்கியத்துவத்தை/அழுத்தத்தைத் தட்டிக்கழித்துவிடுகின்றனர்.

இப்படியாகக் கூறுவது என்பது நமது கர்த்தருடைய வார்த்தைகளைத் திரித்துக் கூறுவதாக இருக்கும் என்று நாம் பதிலளிக்கின்றோம். உண்மையில் யூதர்கள் மத்தியில் பரவலாய் இருந்த இந்த ஓர் எண்ணத்தை எதிர்க்கவே கர்த்தர் நாடினார்; ஏனெனில் அயலார்களுக்கு நேர்மையாய் இருக்க வேண்டும் என்றும், சத்துருக்களிடம் வெறுப்புடன் காணப்பட வேண்டும் என்றும்தான், யூதர்கள் மத்தியில் பழமொழியாகக் காணப்பட்டது. அயலான் என்னும் வார்த்தையானது அருகாமையில் காணப்படுபவர்களைக் குறிப்பதினால் அன்பிலும், உணர்விலும், விசுவாசத்திலும், சமய பிரிவிலும் அருகாமையில்/நெருக்கமானவர்களாகக் காணப்படுபவர்கள்தான் அயலான் எனப் பொருத்திப் பார்க்கும் பழக்கத்தில் வேதபாரகரும், பரிசேயரும் காணப்பட்டனர். ஆகையால் பரிசேயன் ஒருவன் இன்னொரு பரிசேயனையும், வேதபாரகன் ஒருவன் இன்னொரு வேதபாரகனையும், ஒரே குலம் எனும் சுயநலமான ஆவியில் ஒருவரையொருவர் அயலான் என்று கருதி, மகிழ்ச்சியுடன் ஊழியம் புரிவான்; இன்னுமாக வேறு வகுப்பாரிலுள்ள மற்றவர்களை ஏறக்குறைய எதிரிகளாகக் கருதிக்கொண்டு, ஒன்றில் அவர்களை அன்பு செய்யாமல் கடந்து செல்வான் அல்லது ஒருவேளை அவர்கள் தன்னை எதிர்க்கும் பட்சத்தில், அவர்களைப் பகைப்பவனாய்க் காணப்படுவான்.

இதைக் காட்டிலும் மேலான ஒரு கண்ணோட்டத்தைக் கிறிஸ்தவர்களாகிய நாம் கொண்டிருக்க வேண்டும். மேற்கூறிய இக்கருத்தை எதிர்க்கும் நமது கர்த்தருடைய வார்த்தைகளை நாம் நினைவுகூருகின்றோம். "உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்கிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராய் இருப்பீர்கள்" (மத்தேயு 5:43-45). நண்பர்களிடத்தில் மாத்திரமல்லாமல், சத்துருக்களிடத்திலும் இந்த ஓர் அன்பின் அளவுகோலை எட்டாத/அடையாத எவரும், தேவனால் அவருடைய பிள்ளைகளெனக் கருதப்பட முடியாது.

நமது கர்த்தருடைய சீஷர்களாய் இருக்கும் அனைவரையும் ஆளவேண்டிய தெய்வீகச் சித்தத்தின் முழு விவரமாகிய பொன்னான சட்டத்தை நமது கர்த்தர் உருவாக்கினார். நமக்கு இரக்கம் பாராட்டியுள்ளவர்களையே நாம் சகோதர சகோதிரிகளென அன்புகூர வேண்டுமெனப் பொன்னான பிரமாணம் கூறவில்லை. நமது கர்த்தர், "உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் தங்களைச் சிநேகிக்கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே" என்று கூறினதன் மூலமாக இம்மாதிரியான சுயநலமான அன்பைக் கண்டித்தார் (லூக்கா 6:32). நமக்காகத் தங்களுடைய ஜீவியங்களை ஆபத்துக்குள்ளாக்கியவர்களை, நாம் நமது அயலார்களென அன்புகூர வேண்டும் என்று இந்த உவமை போதிப்பதாக விளக்கம் அளிப்பது என்பது, நம்முடைய ஆண்டவருடைய போதனைகளைவிட மிகவும், மதிப்பு இறங்கின விளக்கமாய் இருக்கும் மற்றும் இப்படி எண்ணுவது என்பது பாவிகளுடைய பொதுவான எண்ணங்களுக்கு ஒத்ததாக இருக்கும் என்று ஆண்டவர் கூறியுள்ளார்.

மீட்பருடைய பின்னடியார்களாய் இருக்கும் நாம், மிகவும் உயர்வான (கொள்கை) அளவுகோலைக் கொண்டிருக்க வேண்டும்; கஷ்டமான நிலைமையிலும், நமது உதவி தேவைப்படும் நிலைமையிலும் இருக்கும் ஒவ்வொருவரையும், நம்முடைய அயலானாக நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்; அதாவது ஒருவேளை நாம் இப்படியாக ஒரு கஷ்டமான நிலைமையில் காணப்படும்போது அவன்/அவள் நமக்குச் செய்திட, நாம் எதையெல்லாம் விரும்புகின்றோமோ, அவற்றை நாமும் அவனுக்கு/அவளுக்குச்

செய்யத்தக்கதாக ஆயத்தமாய் இருக்கும் அளவுக்கு அவன்/அவள் மீது அனுதாபத்துடன்கூடிய/ இரக்கத்துடன் கூடிய அன்புகொண்டிருக்க வேண்டும். எந்தளவுக்கு அன்பின், இரக்கத்தின், ஒத்துழைப்பின், பெருந்தன்மையின், இரக்க உணர்வின் இந்த உயர்வான கொள்கையானது, நமது இருதயங்களைக் கட்டுப்படுத்தி, நம்முடைய நடத்தைகளை ஆளுகின்றதோ, அவ்வளவாய் நாமும் நிச்சயமாய்த் தேவனைப்போன்று அதிகமாயும், கிறிஸ்துவைப்போன்று அதிகமாயும் காணப்படுவோம்; காரணம் நன்றியற்றவர்கள் மீதும் கூடத் தேவன் இரக்கமுள்ளவராக இருக்கின்றார் என நமது அருமை மீட்பர் குறிப்பிட்டுள்ளார்.

---

R5528 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

அப்போஸ்தலனுடைய கட்டளையானது மிகவும் திட்டவட்டமாயுள்ளது; நாம் யாரைக்குறித்தும் தீமைபேசிடக்கூடாது. அப்படியானால், பரிசுத்த பவுல் இங்கு என்ன அர்த்தத்தில் பேசியுள்ளார்? எம்மனுஷனுக்கும் எதிராக தீமையான நோக்கத்தில், நாம் எதையும் பேசிடக்கூடாது என்ற அர்த்தத்தில் கூறுகின்றாரா? அல்லது நோக்கம் என்னவாக இருப்பினும் சரி, தீமை பேசாதே எனும் அர்த்தத்தில் கூறுகின்றாரா? என்ற கேள்விகள் எழும்புகின்றன. தவறான நோக்கத்தோடு, தவறான எண்ணத்தோடு தீமை பேசுதல் என்பது, மிகக் கொடிதான குற்றமாக, விசேஷமாகத் தேவனுடைய பிள்ளைக்கு இருக்குமென நாம் நிச்சயமாய் அறிவோம் என்று நாம் பதிலளிக்கின்றோம். ஆனாலும் உங்களது நோக்கம் என்னவாக இருப்பினும் சரி, யாரைக்குறித்தும் தீமை பேசாதிருங்கள் எனும் அர்த்தத்திலேயே அப்போஸ்தலன் கூறியுள்ளார் என்று நாம் எண்ணுகின்றோம். ஒருவேளை இதுதான் அப்போஸ்தலனின் கருத்தாக இருக்குமானால் மற்றும் இதுதான் கருத்து என்பது மறுக்கப்பட முடியாது என்றும், அக்கருத்தானது கர்த்தருடைய ஜனங்கள் அனைவர்மேலும் மிகவும் கண்டிப்பான கட்டளையை வைக்கின்றதாய் இருக்கின்றது என்றும் நாம் நம்புகின்றோம். தீமை பேசுவதற்கான நோக்கம் தீயதாக இருக்குமானால், காரியம் மிக மோசமானதாய் இருக்கும்; ஆனால் நல்லதோ, தீயதோ, "ஒருவனையும் குறித்துத் தீமை பேசாதிருங்கள்." இப்பொழுது தீமை பேசுதல் என்றால் என்ன? என்ற வேறொரு கேள்வியும் எழும்புகின்றது. இவ்விஷயத்திற்கு அநேகம் பாகங்கள் இருக்கின்றன என்று நாம் பதிலளிக்கின்றோம். தீமை பேசுதல் என்பது, கெடுதல் உண்டாக்குகிறதைப் பேசுகிறதாய் இருக்கும்; ஆகையால் எந்த மனுஷனுக்கும் கெடுதல் உண்டாக்கும் எதையும் ஒருவன் பேசிடக்கூடாது. நாம் பொன்னான பிரமாணத்தைப் பொருத்திப் பார்ப்போமானால் இக்கட்டளையினுடைய நீதியும், நியாயமும் மிக எளிமையாகப் புரிந்துகொள்ளப்படலாம். யாரேனும் நமக்குத் தீமை செய்திட நாம் விரும்புவோமா? யாராவது - நம்மை மரியாதைக் குறைவாகப் பேசுவதை, நம்முடைய தவறுகள் குறித்து விமர்சிப்பதை அல்லது பேசுபவர் நம்மிடத்திலுள்ள தவறு என்று கருதிடும் காரியங்கள் குறித்து அவரால் விமர்சிக்கப்படுவதை மற்றும் இப்படியாக மற்றவர்களுடைய பார்வையில் நம்மை இழிவுப்படுத்திடுவதை - நாம் விரும்புவோமா? கர்த்தருடைய ஜனங்கள் பொன்னான பிரமாணத்தினை ஜீவியத்தின் ஒவ்வொரு காரியங்களிலும் செயல்படுத்திட கற்றுக்கொள்வார்களானால், அது நிச்சயமாய் மிகவும் உதவிகரமாயிருக்கும். இந்த விஷயத்தில் மிகுந்த கடமை உணர்சியுள்ள கிறிஸ்தவர்கள் சிலருக்குச் சிரமம் காணப்படுகின்றது. தீமை பேசுதல் எனும் இக்காரியத்தைச் சிந்திக்கையில், என்னுடைய நோக்கம் சரியானதா? என்று சிலர் சிந்திக்கின்றவர்களாய் இருக்கின்றனர். அப்போஸ்தலனுடைய கட்டளைக்கும், மற்றவர்களை இழிவாய்ப் பேசுவதிலுள்ள தங்களது

நோக்கத்திற்கும் எச்சம்பந்தமும் இல்லை என்பதை இவர்கள் மறந்துவிடுகின்றனர். நோக்கம் என்னவாக இருப்பினும், நாம் தீமை பேசிடக்கூடாது. எனக்கு நல்ல நோக்கம் காணப்படுகின்றதா அல்லது கெட்ட நோக்கம் காணப்படுகின்றதா? என்பது கேள்வியல்ல; மாறாக நான் தீமை பேசுகின்றேனா? பொன்னான பிரமாணத்திற்கு முரணாக - அதாவது என்னைக்குறித்துப் பேசப்படுவதை நான் விரும்பிடாத - மற்றவர்களைக் குறித்த எதாவது காரியங்களை நான் பேசுகின்றேனா? என்பதுதான் கேள்வி. இக்கட்டுரையினை வாசிக்கும் ஒவ்வொரு வாசகனுடைய இருதயங்களிலும், மனங்களிலும் இக்கருத்தினைப் படிப்படியாகப் பதியவைத்திட நாம் விரும்புகின்றோம்.

---

R5425 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

## சீஷத்துவத்திற்கான விலை

“கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்” என்று இயேசு இறுதியாகக் கூறினார். அவருடைய பின்னடியார்கள் அனைவரும் இந்த வார்த்தைகளுக்குச் செவிக்கொடுக்க வேண்டும். இவ்வார்த்தைகளை அசட்டைப் பண்ணுகிறவன், இவ்வார்த்தைகளைக் கொடுத்திட்டவரை அசட்டைப் பண்ணுகிறவனாய் இருந்து, நிச்சயமாய்க் கிடைக்கப்பெறும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளத் தவறுகிறவனாய் இருப்பான். ஆனால் உலகத்தாரைப் பொறுத்தமட்டில், “அவர்கள் காதுகளிருந்தும் கேளாதவர்களாகவும், கண்ணிருந்தும், காணாதவர்களாகவும்” இருப்பார்கள். நம்மையும், இயேசுவின் பின்னடியார்கள் அனைவரையும் அளப்பதற்கான அதே கொள்கைகளின் அடிப்படையில் நாம் உலகத்தாரைக் கணிக்கக்கூடாது. உலகத்திற்கான உயர்ந்த அளவுகோல்/கொள்கை பொன்னான சட்டமாக இருக்கின்றது. கிறிஸ்தவனுக்கான உயர்ந்த அளவுகோல்/கொள்கை சுயத்தைப் பலிச் செலுத்தி, எல்லாம் இழந்து, தேவ சித்தம் செய்வதாகும்.

---

R5368 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

I.B.S.A-இன் அன்புக்குரிய நண்பர்கள் சபையாருக்காக மூப்பர்களை மற்றும் உதவிக்காரர்களைத் தாங்கள் தேர்ந்தெடுப்பது தொடர்புடைய விஷயத்திலும் மற்றும் கர்த்தருடைய நாமத்தில் தாங்கள் செய்யும் அனைத்துக் காரியங்கள் தொடர்புடைய விஷயத்திலும் பொறுப்புணர்வினை முறையாகக் கொண்டவர்களாக இருக்கின்றனர். அநேகமாகப் பாராளுமன்ற பிரமாணங்களைக் குறித்து வெகு சிலரே நன்கு அறிந்தவர்களாய் இருப்பதினால், சபைகூட்டங்கள் தொடர்புடைய விஷயத்தில் பாராளுமன்ற பிரமாணங்களை நடைமுறைப்படுத்துவது என்பது அன்பற்றதாகவும், ஞானமற்றதாகவும் காணப்படும் என்று ஏற்கெனவே நாம் கருத்துத் தெரிவித்திருந்தோம். பாராளுமன்ற பிரமாணங்களானது உண்மையில் நல்லவைகளாகவும், ஞானமானவைகளாகவும் மற்றும் பொதுவாய் நன்மை பயக்கிறதாகவும் காணப்படுகின்றது. பாராளுமன்ற பிரமாணங்களின் ஆவியானது, எல்லாவிடத்திலும் பொருந்தக் கூடியதாகும்; காரணம் அவைகள் அனைவருடைய நலனுக்கடுத்தவைகளைப் பாதுகாத்தல் எனும் பொன்னான பிரமாணத்தின் அடிப்படையிலும் மற்றும் குறைந்தபட்ச பிணக்குடனும், தாமதத்துடனும் காரியங்களைச் செய்யும் விதத்திலும் இயற்றப்பட்டவைகளாகும். கர்த்தருடைய ஜனங்களைப்

பொறுத்தமட்டில், அன்பானது எப்போதுமே முதன்மையான இடத்தினைப் பெற்றிருக்க வேண்டும். அன்பானது எப்போதுமே பொன்னான பிரமாணத்திற்கு இசைவாக இருப்பினும், அது நேர்மையான நீதிக்கும் மேலாகச் செய்திடுவதற்கு எப்போதும் சுயாதீனம் உடையதாய் இருக்கின்றது. ஆகையால் கர்த்தருடைய சகோதரர்கள் யாவரும் கொள்கை உட்படாத விஷயத்தில், மற்றவருடைய நலனுக்காகத் தங்கள் சிறு விருப்பங்களை விட்டுக்கொடுத்துவிடுவதற்கு முற்றிலும் விருப்பமுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும். அன்பும், சந்தோஷமும், சமாதானமும் ஒவ்வொரு சபையிலும் மேலோங்கிக் காணப்பட வேண்டும். இவைகள் சார்புடைய யாவும் மற்றும் தேவனுக்கும், அவரது வார்த்தைகளுக்கும் உண்மையாய் இருத்தலுக்கு முழு இசைவுடன் காணப்படும் யாவும் ஆதரிக்கப்பட வேண்டும்.

---

R5430 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# நீதி – நியாயம் – கிறிஸ்தவ குணலட்சணத்தின் அஸ்திபாரம்

"பலியிடுவதைப்பார்க்கிலும், நீதியும் நியாயமும் செய்வதே கர்த்தருக்குப் பிரியம்." "அதற்குச் சாமுயேல்: கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்."
(நீதிமொழிகள் 21:3; 1 சாமுயேல் 15:22)

இந்த வார்த்தைகளானவை தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களாகிய யூதர்களிடம் பேசப்பட்டவையாகும். இஸ்ரயேல் ஜாதியார் தேவனுடன் ஒரு விசேஷித்த உறவுக்குள்ளாக வந்துள்ளனர். சீனாய் மலையில் இவர்கள் தேவனுடன் ஓர் உடன்படிக்கைக்குள் பிரவேசித்தவர்களாக, நீதியையும், நியாயத்தையும் செய்வதாகத் தங்களை ஒப்புக்கொடுத்திருந்தனர். இதுவே தேவனுடைய எதிர்ப்பார்ப்பாகும். ஆனால் பலிகள் கர்த்தருக்கு விசேஷமாய்ப் பிரியமானவைகள் என்று எண்ணிவிடும் தன்மையும் நிலவினது. சிலர் தாங்கள் எவ்வளவுதான் அநீதியானவர்களாய்க் காணப்பட்டாலும், தங்களால் பலியினை ஏறெடுத்து, அதைச் சரிச்செய்துவிட முடியும் என்ற எண்ணம் கொண்டிருந்தனர். ஆனால் இப்படியாக இல்லை என்று தேவன் சுட்டிக்காண்பித்துள்ளார். அவரது நியாயப்பிரமாணங்கள் கோரிக்கையாய்க் காணப்பட்டது மற்றும் இதுவே அனைத்திற்கும் முன்பாகக் கடந்துவர வேண்டும்; ஆனால் வெற்றி முதலானவைகளுக்கான நன்றியறிதலாகச் செலுத்தப்படும் இந்த விசேஷித்த பலிகளானது சிலாக்கியங்களாகவும், தானாய் மனமுவந்து ஏறெடுக்கப்படும் காணிக்கைகளாகவும் இருக்கின்றது. நியாயப்பிரமாணமானது தேவனுக்கு முழுவதும் உண்மையாய் இருத்தலைக் கேட்கின்றதாய் இருக்கின்றது.

இஸ்ரயேல் தேவனோடு, அவரது ஜனங்களெனக் கொண்டிருந்த உறவானது, நியாயப்பிரமாணத்தின் அடிப்படையினாலானதாகும். இந்த நியாயப்பிரமாணம் நீதியையும், நியாயத்தையும் உள்ளடக்கிக் காணப்பட்டது. இதன் கட்டளைகளுக்கு ஏற்ப இஸ்ரயேலர்கள் முதலாவதாகத் தேவனுக்கும், பின்னர் மனுஷருக்கும் காரியங்களைச் செய்திட வேண்டும். அவர்கள் களவு செய்யக்கூடாது, கொலை செய்யக்கூடாது, பிறர் பொருட்களை இச்சிக்கக்கூடாது. இதில் பொன்னான பிரமாணத்தின் சாரமும், பொருளும் உள்ளடங்குகின்றது.

நீதி செய்வது என்பது சரியானதை, நீதியானதை, நேர்மையானதைச் செய்வதாகும்; நியாயம் செய்வது என்பது மனதில் நீதியான (கணிப்புகளை) தீர்மானங்களை வழங்குதலாகும். நீதியாய்த் (கணிப்பதாகும்) தீர்மானிப்பதாகும். ஒருவன் தன் சக மனிதனுடனான தனது தொழில் ரீதியிலான நடவடிக்கைகளில் மிகவும் நீதியோடு செயல்படுகிறவனாய்க் காணப்படலாம். அவன் ஒரு ரூபாயிலும்கூட யாரையும் ஏமாற்றிவிடக்கூடாது என்பதில் மிகவும் ஜாக்கிரதையுள்ளவனாய் இருக்கக்கூடும்; எனினும் அவன் தன் மனதில் மற்றவர்களைக் குறித்த மிகவும் இரக்கமற்ற, அன்பற்ற கண்ணோட்டங்களைக் கொண்டிருக்கக்கூடும்; மேலும் மற்றவர்களைக் குறித்து மிகவும் அநீதியான விஷயங்களைச் சொல்லக்கூடும். ஞானியினுடைய இந்த ஆலோசனை என்பது அநீதி செய்வதற்கு எதிராக மாத்திரமல்லாமல், தவறான எண்ணங்களைக் கொண்டிருத்தலுக்கும் எதிராக எச்சரிக்கின்றதாய் இருக்கின்றது. நம்முடைய மனங்களுடைய (கணிப்புகளும்) தீர்மானங்களும், நம்முடைய கிரியைகளும், நீதியின் கொள்கைகளுக்கு இசைவாகக் காணப்பட வேண்டும்.

## மற்றவர்களை நாம் நியாயந்தீர்த்திட முடியாது

உறுதியான நிரூபணங்கள் இல்லாமல், யாரையும் குறித்துப் பாதகமான விதத்தில் நாம் கணித்திட, நியாயந்தீர்த்திட, தீர்மானித்திடக்கூடாது. அவர்கள் சரியானதையே செய்ய முயன்றுகொண்டிருப்பதாகக் கூறுவார்களானால், நாம் முடிகிற மட்டும் அவர்களது உண்மையினை அங்கீகரித்திட வேண்டும். நாம் அவர்களை மாய்மாலக்காரர்கள் என்று அழைத்திடக்கூடாது; ஏனெனில் நம்மால் அவர்களது இருதயங்களைக் கணித்திட/நியாயந்தீர்த்திட முடியாது. நமது கர்த்தர் அவரது நாட்களில் சிலரை மாய்மாலக்காரர்கள் என்று அழைத்தார்; அவருக்கு இருதயங்களை அறியக்கூடிய மேலான வல்லமை உண்டு மற்றும் நமக்கு அந்த வல்லமை கிடையாது. நாம் மற்றவர்களது நோக்கங்களை நியாயந்தீர்த்திடக்கூடாது. அவர்கள் அறிக்கையிடும் காரியங்களுக்கு அப்பாற்பட்டு நாம் சென்றுவிடக்கூடாது, ஏனெனில் அப்படிச் செய்ய நாம் இயலாதவர்களாவோம்.

புறம்பான கிரியைகளைச் சிலசமயம் தவறானது அல்லது சரியற்றது என்று நாம் நியாயம் தீர்ப்பது உண்டு; ஆனால் நாம் இருதயங்களை நியாயந்தீர்க்க முற்படக்கூடாது; இதில் கணிப்புத் தவறுவதற்கு வாய்ப்புள்ளது. நம்முடைய ஒவ்வொரு கிரியையிலும், வார்த்தையிலும், எண்ணங்களிலும் பொன்னான பிரமாணத்தினைக் கைக்கொள்ளுவதற்கு நாடும்படிக்கு நாம் நம்மையே ஒப்புக்கொடுத்துள்ளோம் மற்றும் ஒருவேளை நாம் பலிசெலுத்தும் விஷயத்தில் மிகவும் அதிகமான வைராக்கியத்தினை வெளிப்படுத்தினவர்களாகவும், அதேசமயம் நீதியின் பிரமாணத்தினை மீறுகிறவர்களாகவும் இருக்கும் நிலைமையைவிட, ஒருவேளை நாம் பலிசெலுத்தாதவர்களாகக் காணப்பட்டு, பொன்னான பிரமாணத்துடன் நம் உறவைத் தக்கவைத்துக் கொண்டவர்களாக மாத்திரம் இருக்கும் நிலைமையிலேயே - தேவன் மிகவும் பிரியப்படுவார் என்பதை நாம் நினைவில் வைப்போமாக. இப்பிரமாணமானது நாம் நம்மை அன்புகூருவதுபோன்றே நம் அயலார்களை அன்புகூர வேண்டும் என்று கோரிக்கை வைக்கின்றதாய் இருக்கின்றது. "எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம்பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை" என்று அப்போஸ்தலன் 1 கொரிந்தியர் 13-ஆம் அதிகாரத்தில் அன்பைக்குறித்து நமக்கு நினைப்பூட்டுகின்றார்.

கிறிஸ்துவின் சீஷர்களாகிய நமக்கான சரியான காரியம், நம் நடக்கையில் பொன்னான பிரமாணத்தினை நாம் கைக்கொள்வதும், நம் எண்ணங்கள் மற்றும் நம் உதடுகள் குறித்துக் கவனம் கொண்டிருப்பதுமாகும்; மேலும் நாம் பெற்றிருக்கும் யாவற்றையும் தொடர்ந்து கர்த்தருக்குப் பலியாக ஏறெடுக்க வேண்டும். ஆனால் கீழ்ப்படிதல், நீதி முதலாவதாக வரவேண்டும்; ஏனெனில் இதையே

தேவனுடைய நியாயப்பிரமாணம் எதிர்ப்பார்க்கின்றதாய் இருக்கின்றது. தியாகமான அன்பினை வளர்த்திடும் விஷயத்தில் முன்னேறுவதற்கு முன்னதாக, நாம் நீதி, நியாயத்திற்கான ஓர் அன்பினைப் பெற்றிருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். ஒருவன் தயாளனாய் இருப்பதற்கு முன்னதாக, அவன் நீதியுள்ளவனாக இருக்க வேண்டும் என்ற பழமொழி காணப்படுகின்றது. இது புதுச்சிருஷ்டியின் அங்கத்தினர்களென யாவரிடத்திலும் கண்டிப்பான நீதியினைக் கைக்கொள்ளும் காரியம் தொடர்பான இப்பாடத்தினைக் கற்றுக்கொள்வதற்கும், தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமெனில் முற்றிலும் அவசியமானதாய்க் காணப்படும் இப்பண்பினை அவர்கள் அன்றாடம் நடைமுறைப்படுத்துவதற்கும் - தேவனுடைய பிள்ளைகளை ஏவுகின்றதாயிருக்கின்றது; ஏனெனில் இப்பண்பே கிறிஸ்தவ குணலட்சணம் அனைத்தின் அஸ்திபாரமாய்க் காணப்படுகின்றது.

கண்டிப்பான நீதியின் இப்பிரமாணத்தினைக் கிரியையிலும், வார்த்தையிலும், சிந்தையிலும் பூரணமாய்க் கைக்கொள்வது என்பது விழுந்துபோன மாம்சத்தில் நம்மால் முடியாததேயாகும். ஆனால் அப்படி முடிந்தமட்டிலுமாகச் செய்ய நாம் ஜெபத்தோடு பிரயாசம் எடுக்க வேண்டும். வேண்டுமென்றே இல்லாத மற்றும் தவிர்க்க இயலாத குறைவுகளையெல்லாம், கிறிஸ்துவின் புண்ணியமானது ஈடு செய்திடும். குணலட்சணத்தின் இந்த அஸ்திபாரத்தினை நன்கு போட்டவர்களாய் இருப்பவர்கள் மாத்திரமே சரியாய் முன்னேறுகிறவர்களாய் இருப்பார்கள். நீதிக்குறித்த தவறான கருத்துக்கள் எனும் அஸ்திபாரத்தின் அல்லது அநீதியின் மீது கட்டப்பட்ட அன்பானது ஏமாற்றுத்தனமானதாகும் மற்றும் அது கர்த்தருடைய வார்த்தைக் குறிப்பிடுகிறதும், உண்மையான சீஷத்துவத்திற்கான நிரூபணமாக அவரால் எதிர்ப்பார்க்கப்படுகிறதுமான அன்பல்ல. தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்பது கிரியையிலும், வார்த்தையிலும், சிந்தையிலும் நீதியாய்க் காணப்படுவதற்கு முயல்வதாகும்.

---

R5571 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## விவேகி ஆபத்தைக்கண்டு மறைந்துகொள்ளுகிறான்

பூமியைச் சூழ்ந்து மூடிக்கொண்டுவரும் மகா உபத்திரவக் காலத்தின் சோதனைகளிலிருந்தும், இன்னல்களிலிருந்தும் தப்பித்துக்கொள்ளலாம் என்று ஒருவரும் எண்ணிக்கொள்ள வேண்டாம். "முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமாயும், இணக்கமுள்ளதாயும், இரக்கத்தாலும், நற்கனிகளாலும் நிறைந்ததாயும்" பரத்திலிருந்து வரும் ஞானம் என்று அப்போஸ்தலனால் தெரிவிக்கப்படும் ஞானத்தினைப் பயன்படுத்துவதன் வாயிலாக, சூழ்நிலைகளை நல்லதாக்க முற்படுவதே சிறந்த வழியாகும். ஒருவன் எந்தளவுக்குப் பரம ஞானத்தின் இந்தப் பரிந்துரைகளைக் கைக்கொள்கின்றானோ, அவ்வளவாய் அவன் தேவ தயவைப் பெற்றுக்கொள்வான் என்பதில் நமக்கு நிச்சயமே. அந்தத் தயவானது, அவனுக்குச் "சகலமும் நன்மைக்கு ஏதுவாய் நடக்கும்" என்று உறுதிபடுத்துகின்றதாய் இருக்கின்றது.

தன் வழிகாட்டுதலுக்குக் கீழ்க்காணப்படுபவர்களுக்கு எந்தவொரு பெற்றோராலும் அல்லது ஆலோசகராலும் கொடுக்க முடியும் மிகவும் விலையேறப்பெற்றப் படிப்பினைகள் - முதலாவதாகப் பொன்னான பிரமாணமாக இருக்கும் - முற்றும் முழுமையான நீதியினை மனதில் ஆழப்பதிய வைப்பதாகும் - இதற்குக் குறைவான எதையுமல்ல; இரண்டாவதாகப் பொன்னான பிரமாணத்தினால் அடையாளப்படுத்தப்படும் நீதியோடுகூட, இரக்கம், மனதுருக்கம், அனுதாபம், உதவிபுரியும் ஆவி தொடர்பான படிப்பினைகளாகும். இது விஷயத்தில் மூன்றாம் பாடம் சாந்தம், தயவு, பொறுமை, நீடிய

பொறுமை தொடர்பாக இருக்க வேண்டும். நான்காம் பாடம் அனைத்திலும் சிக்கனமாய் இருத்தல் ஆகும் - வீணாக்குவதைத் தவிர்ப்பதாகும் - தனக்கு அவசியப்படாத ஒன்று வேறொருவருக்கு அவசியப்படலாம் என்ற உணர்ந்துகொள்ளுதலாகும்.

இப்படிப்பினைகளைக்குறித்துக் குறிப்பிடுகையில், நமது வாசகர்கள்கூட ஆவிக்குரிய, பரம உணவு காணப்படும் கர்த்தருடைய பந்தியில் போஷிக்கும் தேவப் பிள்ளைகளாகக் காணப்படுகின்றனர் என்று நாம் கூறுகின்றோம். மேலும் இவர்கள் தங்கள் குடும்பங்களைக் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு இசைவாகப் பயிற்றுவிப்பதன் மூலம் தங்கள் குடும்பங்களை ஆசீர்வதிக்க நாடுகின்றவர்களாய் இருக்கின்றனர்.

பொன்னான பிரமாணம் என்பது கர்த்தருடைய ஜனங்களினால் அங்கீகரிக்கப்படும் மிகவும் lowest standard/கீழ்த்தள நியமமே/அடிப்படையான நியமமே என்பதையும் மற்றும் இது எவ்வகையான அன்பிற்கும் முன்னதாகவே வருகின்றது என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

---

R5323 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# ஒருவரையொருவர் கவனித்து
## உரோமர் 14:7-21

உண்மைதான் இவ்வார்த்தைகளும், புதிய ஏற்பாடு முழுவதையும் போல, கிறிஸ்தவர்களுக்கென்று மாத்திரமே பேசப்பட்டுள்ளது. எனினும் இயேசுவின் பின்னடியார்களாகிடாத அநேகர்கூட இங்கு இடம்பெறும் கருத்தினை உணர்ந்துகொள்கின்றனர் மற்றும் அப்படியானவர்களுக்கு இது உயரிய கிறிஸ்தவ கொள்கைகளின் அடிப்படையில் இல்லாமல், பொன்னான பிரமாணத்தின் அடிப்படையில் மனதைக் கவர்கின்றதாயிருக்கின்றது.

மனுக்குலம் யாவற்றிற்குமான அங்கீகரிக்கப்பட்ட நியமமாகிய பொன்னான பிரமாணத்திற்கும், கிறிஸ்தவனுக்கான ஜீவியத்திற்கடுத்த பிரமாணத்திற்குமிடையில் வேறுபடுத்தி வேறுபாடு காட்டுவது என்பது அநேகரால் வித்தியாசம் ஏதும் இல்லாத வேறுபடுத்திக் காட்டுதலாகக் கருதப்படுகின்றது. ஆனால் இது உண்மையல்ல. தனக்குச் செய்யப்பட வேண்டுமென விரும்புபவற்றை மற்றவர்களுக்குச் செய்திட வேண்டும் என்பதான பொன்னான பிரமாணமானது, நீதியின் பிரமாணமாய்க் காணப்படுகின்றது. அனைவருமே இதை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். அனைவரும் இதைப் பின்பற்ற வேண்டும்; யாரும் இதற்கு மறுப்புச் சொல்ல இடமில்லை.

ஆண்டவரால் போதிக்கப்பட்டதும், அவரில் மாதிரியாக்கப்பட்டதுமான கிறிஸ்தவ ஜீவியத்திற்கான பிரமாணமானது, அனைத்து மனுஷருக்கும் பொருந்தும் பொன்னான பிரமாணத்தினைக்காட்டிலும் மிகவும் இம்மியும் பிசகாத ஒன்றாகும். கிறிஸ்துவின் பின்னடியார்களாகுபவர்கள் நிச்சயமாகவே பொன்னான பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களே; எனினும் அவர்கள் தங்களையே இன்னும் மிகக் கண்டிப்பான பிரமாணத்தின் கீழ்த் தானாய் முன்வந்து நிறுத்திக்கொள்கின்றனர். அவருடைய சித்தத்தை - நீதியைச் செய்வதில், எல்லாவற்றையும், பலிசெலுத்திட, ஜீவனையும்கூடப் பலிசெலுத்திட அவர்கள் ஆயத்தமாய் இருக்கின்றார்கள் என்பதே கர்த்தருடனான அவர்களது உடன்படிக்கையாய் இருக்கின்றது. இதையே "கிறிஸ்து தம்மையே பிரியப்படுத்திட நாடாமல்" என்று அப்போஸ்தலன் கூறுகையில், தெரிவித்த வரானார். அவரது சித்தம் பூரணமான ஒன்றாய் இருப்பினும், அவர் நமது சந்ததி தொடர்புடைய பரமபிதா வின் மகிமையான நோக்கங்களை நிறைவேற்றும்படிக்கான அஸ்திபாரத்தினைப் போடுவதற்கும், மனுக்குலத்திற்கு ஊழியம் புரிவதற்கும் என்று தமது உரிமைகளை, சிலாக்கியங்களை, சுயாதீனங்களைத் துறந்தார்.

சபையினுடைய தற்கால அழைப்பானது, "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையை" உடையவர்களுக்கேயாகும். அது பலிசெலுத்துபவர்களுக்கான அழைப்பாகும். "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" (உரோமர் 12:1).

---

R5722 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## நீதியாகிய பொன்னான பிரமாணம்

அதிகாரி என்பவன் தனது ஜனங்களுடைய ஊழியக்காரனாய்க் காணப்பட வேண்டும் என்றும், இப்படி அதிகாரி உண்மையாய்ச் செயல்பட்டால், அவனது இராஜ்யபாரம் நீடித்திருக்கும் மற்றும் அவரது ஜனங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள் என்றுமுள்ள விதத்தில் ஞானிகள் இராஜாவாகிய ரெகோபெயாமுக்கு வழங்கிட்ட ஆலோசனைகளை அனைவருமே ஒத்துக்கொள்வோம். இராஜா பொன்னான பிரமாணத்தினைக் கைக்கொள்ள வேண்டும் என்பதை - அதாவது ஒருவேளை ஸ்தானம் மாற்றப்பட்டிருப்பின் - ஜனங்கள் தன் ஸ்தானத்திலும், தான் ஜனங்களுடைய ஸ்தானத்திலும் காணப்பட்டிருந்தால், அவர்கள் தனக்கு என்ன செய்திருக்க வேண்டும் என்று அவர் எதிர்ப்பார்ப்பாரோ, அதையே அவரும் இப்பொழுது இராஜாவாக அவர்களுக்குச் செய்திட வேண்டும் என்பதை அவர்களது ஆலோசனை சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. கிறிஸ்தவ மார்க்கத்தின் மகா தலையானவரினால் கொடுக்கப்பட்டதான பொன்னான பிரமாணமானது, கடைபிடிக்க முடியாத ஒன்று எனப் புறக்கணிக்கப்பட்டு, தள்ளப்பட்டது; ஆனால் அது கடைபிடிக்க முயற்சிக்கவேபடவில்லை என்றுதான் நாங்கள் சொல்லுவோம். அதிகாரமுடையோர் ஜனங்களைக் கையாளும் விஷயத்தில் பொன்னான பிரமாணத்தினைச் செயல்படுத்துவதற்கு எப்போதுமே அஞ்சினவர்களாய்க் காணப்படுகின்றனர். பொன்னான பிரமாணத்திற்கு ஒத்த ஏதோ சிலவற்றைச் செய்வதாக அரசியல் கட்சிகள் பறைச்சாற்றுகின்றனர், ஆனாலும் அதிகாரத்திற்கு வரும்போதும், வாய்ப்பைப் பெற்றிருந்தும், சூழ்நிலைகள் பொன்னான பிரமாணத்தினைக் கைக்கொள்ளும் காரியத்தினைச் சாத்தியமற்றதாக்குகிறது என்று சொல்லி, அப்பிரமாணத்தினைப் பயன்படுத்த மறுத்துவிடுகின்றனர்.

எனினும் சீக்கிரத்தில் பொன்னான பிரமாணமானது உலகளவில் பிரயோகிக்கப்படும் மற்றும் இந்த ஒரேயொரு பிரமாணத்தின் வாயிலாகத்தான் மனுஷஜாதிக்கான சந்தோஷம் அடையப்படக்கூடும் என்பது நிரூபிக்கப்படும். இதுவே வேதாகமத்தின் வாக்குத்தத்தமாய்க் காணப்படுகின்றது - அதாவது மேசியாவின் இராஜ்யமானது, உலகத்திற்குப் பொன்னான பிரமாணத்தின் அடிப்படையில் ஆயிரவருடங்களில் கட்டாயமாய்ப் பாடம் புகட்டுகின்றதாய் இருக்கும் என்று வேதாகமம் கூறுகின்றதாய் இருக்கின்றது. தீர்க்கத்தரிசிகள், அப்போஸ்தலர்கள் மற்றும் கர்த்தரும் பொன்னான பிரமாணம் கைக்கொள்ளப்படும் என்று சாட்சி பகருகின்றனர் - அது நித்தியமான நீதியினையும், சமாதானத்தையும், சந்தோஷத்தையும், ஆசீர்வாதத்தையும் கொண்டுவந்திடும்; மேலும் தேவனுடைய பிரமாணத்திற்கு இசைவாய் வருபவர்கள்மீது தேவ தயவு காணப்பட்டு, இறுதியில் அவர்கள் பாவம், வியாதி, வலி, மரணத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, ஒட்டுமொத்த உலகமும் மகிமையான மனுஷீக பூரணத்திற்குக் கொண்டுவரப்படுவார்கள்; பொன்னான பிரமாணத்தின்படி செயல்பட மறுப்பவர்கள் அழிக்கப்படுவார்கள்.

R4816 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

## பொன்னான பிரமாணம்

கர்த்தருடைய பிள்ளைகளில் சிலரால் பொன்னான பிரமாணமானது முழுமையாய்ப் புரிந்துகொள்ளப்படுகிறதில்லை; இப்பிரமாணம் அடையாளப்படுத்தும் நியாயப்பிரமாணத்தின் காரியத்திற்கு அப்பால் இவர்கள் சென்று, பலிசெலுத்தும்படிக்கு நாடுகின்றனர். பொன்னான பிரமாணம் என்பது சக மனுஷனிடத்தில் நீதியாய் நடந்துகொள்வதாகும்; நீங்கள் விரும்புவதும், உங்கள் உரிமையென நீங்கள் உரிமைபாராட்டுவதுமான அதே சுயாதீனத்தினைச் சக மனுஷர்களுக்கும் கொடுப்பதாகும். சக மனுஷர்கள் உங்களுக்கு எவ்விதத்திலெல்லாம் தடைவிதிக்கக்கூடாது என்று நீங்கள் விரும்புகின்றீர்களோ, அவ்விதத்திலெல்லாம் நீங்கள் அவர்களுக்கும் தடைப்பண்ணாதிருங்கள். இது வெறுமனே நீதியையே குறிக்கின்றதேயொழிய, பலிசெலுத்துதலை அல்ல என்பதைப் பரிசுத்தவான்கள் அனைவரும் நினைவில்கொள்ள வேண்டும். இது தேவனுடைய கட்டளையாகும் - அவரது சிங்காசனத்தின், அவரது ஆளுகையின் ஆதாரமாகும். இதைவிட வேறு எந்தப் பாடமும் சபைக்கு மிக அவசியமாய் அநேகமாய்க் காணப்படுவதில்லை. இப்பிரமாணம் இல்லத்திலும், சபையிலும் தொடர்ந்து மீறப்பட்டுக்கொண்டே இருக்கின்றது. தயவிற்கு முன்னதாக நீதி; பலிசெலுத்துவதற்கு முன்னதாகப் பொன்னான பிரமாணம் என்பதே நிச்சயமாய்த் தேவ ஒழுங்காய்க் காணப்படும் மற்றும் அவருக்குக் கீழ்ப்படிந்தவர்களாகவும், அவருக்குப் பிரியமானவர்களாகவும் காணப்படுபவர்கள் யாவரும் இவ்விஷயத்தில் தங்களைக் கவனித்துக்கொள்வதில் கவனமாய் இருப்பார்கள்.

R5770 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

தற்காலத்தில் நாம் எங்கு நோக்கினாலும் அனைத்துப் பாவங்களுக்கும் சுயநலமே ஊற்றாக இருக்கிறதைத் தெளிவாகக் காணலாம். பேராசைதான் சுயநலமாக, பாவமாக இருக்கிறது. அனைவரும் பாவிகளாயிருப்பதினால் இது எங்கும் பரவியிருக்கிறது. நமது சட்டங்கள், நமது நீதியான உரிமைகளில் நம்மைப் பாதுகாக்க நாடுகிறது; எனினும் பொன்னான பிரமாணத்தினை அநீதியாக மீறுகிறவர்களிடமிருந்து நம்மைப் தற்காப்பதிலும், நமது உரிமைகளைப் பத்திரப்படுத்துவதிலும் நாம் பெரும்பாலும் தோல்வியே அடைகிறோம். அனைவருக்கும் பாடம் என்னவென்றால், தேவனுடைய பிள்ளைகள் என்று கூறிக்கொள்ளுகிறவர்களிடமிருந்து பொன்னான பிரமாணத்திற்குக் குறைவானது எதுவும் தேவனுடைய பார்வையில் ஏற்புடையதல்ல என்பதாகும். அனைவருக்குமான காரியங்களில் நீதியின்படியும், பொன்னான பிரமாணத்தினுடைய கோரிக்கையின்படியும் நாம் கண்டிப்பாகச் செய்யவேண்டியவர்களாயிருக்க, நாம் மற்றவர்கள் எப்பொழுதும் நீதியையும், பொன்னான பிரமாணத்தினையும் செய்திடவேண்டுமென்று எதிர்ப்பார்க்கக்கூடாது என்பது இரண்டாவது பாடமாகும். தேவனுக்கும், அவரது ஆளுகைக்கும் புறம்பாய்க் காணப்படும் தேசங்கள் மற்றும் ஜனங்கள் மத்தியில் தேவனுடைய பிள்ளைகள் தங்களை அவருடைய பிரதிநிதிகளாகவும், ஸ்தானாபதிகளாகவும் கருதிக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் எப்பொழுதும்

நீதியுள்ளவர்களாயும், தயாள குணமுடையவர்களாயும், "அந்தகாரத்திலிருந்து தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கிறவர்களாயும்" இருக்க வேண்டும். அவர்களுடைய பரலோகப் பிதா தயாளமுள்ளவராகவும், நீதியுள்ளவராகவும் இருக்கிறதுபோல, அவருடைய பிள்ளைகளும் அவரது குணலட்சணத்தை உடையவர்களாகவும், நீதி சம்பந்தமான எல்லாவற்றிலும் உதவுகிறவர்களாகவும் இருக்க வேண்டும்.

---

R3993 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

பரிசுத்த ஆவியினால் மீண்டுமாக ஜெநிப்பிக்கப்பட்டவர்களும், சத்திய வார்த்தைகள் வாயிலாக அறிவூட்டப்பட்டவர்களும் மற்றும் கிறிஸ்துவினுடைய பள்ளிக்கூடத்தில் கற்பிக்கப்பட்டவர்களுமான கர்த்தருடைய ஜனங்கள் உலகத்தின் கண்ணோட்டத்தினைப் பெற்றிராமல், மாறாக தங்கள் காரியங்கள் அனைத்திலும் பொன்னான பிரமாணத்திற்கு இசைவாய்ச் செயல்பட வேண்டும். இப்படிச் செய்யும் பழக்கத்தினை இக்கட்டுரையினை வாசிக்கும் வாசகனில் யாரேனும் ஒருவன் முற்காலங்களில் கொண்டிராவிட்டால், உடனே அப்படிச் செய்யத் துவங்குவதற்கு நேரம் வந்துவிட்டது. காலம் குறைவாக உள்ளது - இதிலே இப்படியான சரியான கண்ணோட்டத்தினை நாம் வளர்த்திக்கொள்ள வேண்டும் மற்றும் இந்தப் பொன்னான பிரமாணத்தினைப் பயன்படுத்திடுவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். நம்மை நாம் அன்புகூருவதுபோன்று நமது அயலார்களையும் அன்புகூரும் இந்த அன்பின் அளவினை/ நிலைப்பாட்டினை நமது இருதயங்கள் அடையவில்லையெனில், தேவன் அங்கீகரிக்கும் விதத்திலுள்ள தேவனுக்கான அன்பு எதையேனும் நாம் பெற்றிருக்கின்றோமா என்று நாம் ஐயம் கொண்டிட வேண்டும் என்று அப்போஸ்தலன் நமக்கு உறுதிப்படுத்துகின்றார் (1 யோவான் 4:20). உண்மைதான் அநேகர் பார்வோனின் ஸ்தானத்தில் காணப்படுகிறதில்லை மற்றும் பார்வோனுடைய ஆலோசகர்கள் மற்றும் எகிப்து தேசத்தினுடைய மற்றச் செல்வாக்குள்ள மனிதர்கள் மத்தியில் நிலவின வேறே ஆவியின் காரணமாய்ப் பார்வோன் இஸ்ரயேலர்களைக் கையாளும் விஷயத்தில் பொன்னான பிரமாணத்தினைக் கைக்கொள்ள முடியாதவராக இருந்திருப்பார். இதுபோலவே நாமும்கூட நமது அயலார்கள், தொழிலாளிகள் முதலானவர்களைக் கையாளும் விஷயத்தில் பொன்னான பிரமாணத்திற்கு இசைவாக நம்மால் செய்யமுடிந்த மற்றும் செய்ய விரும்பும் யாவற்றையும் செய்யமுடியாதவர்களாய்க் காணப்படுவோம்; ஆனால் இந்த ஆவியினை நம் இருதயங்களில், நம் மனங்களில் நாம் வளர்த்தி, விருத்திச் செய்திட வேண்டும் மற்றும் தற்கால சூழ்நிலைகள் அனுமதிப்பதற்கேற்ப முடிந்தமட்டும் அப்பிரமாணத்திற்கு இசைவாய் ஜீவித்திட வேண்டும். நம்மால் நம்முடைய ஜீவியத்தின் காரியங்கள் அனைத்தையும் இந்த நியமத்திற்கு இசைவாய்க் கொண்டுவர முடிகிறதோ அல்லது இல்லையோ, நம் இருதயங்கள் இந்த ஓர் இலக்கினை அடைந்திருக்க வேண்டும். இல்லையேல் நிச்சயமாய் எதிர்ப்பார்க்கப்படும் அளவுகோல் நியமத்திற்கு நாம் குறைவுபட்டிருப்போம் மற்றும் இக்காரியத்தினை நாம் சரிசெய்துகொள்ளவில்லையெனில், நமக்கு இராஜ்யத்தில் பங்கிராது மற்றும் கர்த்தருடைய ஏற்பாட்டின்படி தங்கள் கர்த்தரும், தலையுமானவருடன் சீக்கிரத்தில் பூமியின் குடிகளை ஆசீர்வதிக்கவிருக்கும் இராஜாக்களும், ஆசாரியர்களும், நியாயாதிபதிகளுமான அந்த மகிமையான வகுப்பாரில் அங்கமாகிட முற்றிலும் தகுதியற்றவர்களாய் இருப்போம். (1 கொரிந்தியர் 6:2, 3)

---

**(Q286:3) பொன்னான பிரமாணம் - தவறான விளக்கம்.**

கேள்வி (1909)-3- ஒருவன் தனக்குத் தன் சகோதரன் என்ன செய்யக்கூடாது என்பானோ, அதையே அவன் தன் சகோதரனுக்குச் செய்யக்கூடாது என்பதாகப் பொன்னான பிரமாணத்திற்கு விளக்கம் கொடுக்கப்படலாமா?

பதில் - இல்லை. பொன்னான பிரமாணமானது எதிர்ப்பார்ப்பவைகளுக்கும் அதிகமாய்ச் செய்வதற்கு அது தடைவிதிக்கும் என்று நான் கருதுகிறதில்லை. ஒருவேளை தாங்கள் ஒரு கிறிஸ்தவன் என்றால், நீங்கள் அதிகமாகவே செய்ய வேண்டும். பொன்னான பிரமாணம் என்பது அனைவருக்கும் பொருந்தும், ஆனால் கிறிஸ்தவனுக்கு வேறொரு பிரமாணம் காணப்படுகின்றது. "புதிதான கட்டளையைக் கொடுக்கிறேன்" என்று இயேசு உலகத்தாரிடமோ, யூதர்களிடமோ சொல்லாமல், சீஷர்களிடமே சொன்னார்; "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்" என்று சீஷர்களிடமே சொன்னார். ஒருவேளை இயேசு நம்மைப் பொன்னான பிரமாணத்தினுடைய அடிப்படையில் மாத்திரம் அன்புகூர்ந்திருந்தாரானால், அவர் நமக்காக மரித்திருக்கவே மாட்டார்; ஆனால் அவர் அதிகமாகவே செய்திட்டார் மற்றும் அவரது பின்னடியார்களென நீங்களும், நானும் ஒருவர் இன்னொருவருக்காய் அதிகமாய்ச் செய்திட வேண்டும் என்று அவர் எதிர்ப்பார்க்கின்றார்.

**(Q429:1) இராஜ்யம் - இராஜ்யத்தின் சுதந்திரர்கள்.**

கேள்வி (1916)-1- இராஜ்யத்தின் சுதந்திரர்களாகப் போகிறவர்கள் எந்த மாபெரும் படிப்பினைகளைக் கற்றுக்கொள்ளும்படி எதிர்ப்பார்க்கப்படுகின்றனர்?

பதில் - (1) நீதியினைக் குறித்தச் சரியான, முழுமையான உணர்ந்துகொள்ளுதல் ஆகும் மற்றும் உங்களை அன்புகூருவதுபோன்று அயலார்களை அன்புகூருதலாகிய பொன்னான பிரமாணம் முன்வைக்கும் காரியங்களுக்கு இசைவாய் வர பிரயாசம் எடுப்பதன் வாயிலாக நீதியினைக் குறித்த அந்த உணர்ந்துகொள்ளுதலை வெளிப்படுத்துவதாகும். (2) மேலும் அன்பு, அனுதாபம், மனதுருக்கம், இரக்கம் குறித்த படிப்பினைகளாகும். நம்மைக் குறித்து, நமது எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் கிரியைகள் குறித்து நாம் எவ்வளவுதான் கடுமையாய், இம்மியும் பிசகாமல் காணப்பட்டாலும்கூட, நாம் மற்றவர்கள் விஷயத்தில் இம்மியும் பிசகாத எதிர்ப்பார்ப்பினைக் கொண்டிருக்கக்கூடாது; மாறாக நமது இரட்சகர் போன்று, அவர்கள் கொடுக்கப்பிரியப்படும் எதையும் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு விருப்பமுடையவர்களாய் நாம் காணப்பட வேண்டும். இது (3) கிறிஸ்துவோடு பாடுபடுவதை, அவரது பாடுகளில் ஐக்கியம் கொண்டிருத்தலைக் குறிக்கின்றதாயிருக்கும். இது நமது கர்த்தரோடுகூட, வரவிருக்கும் அவரது இராஜ்யத்தில் இராஜாக்களென, ஆசாரியர்களென, நியாயாதிபதிகளென, நாம் செய்யவிருக்கும் வேலைக்கு நம்மைப் பொருத்தமானவர்களாக மற்றும் தகுதியானவர்களாக்க விலையேறப்பெற்றப் படிப்பினைகளை நாம் கற்றுக்கொள்வதைக் குறிக்கின்றதாயிருக்கும்.

மகிமையின் சபையாக இருக்கப்போகின்றவர்கள் யாவரும், தேவனுடைய அன்பான குமாரனின் சாயலாக வேண்டுமென்று - தங்கள் இருதயங்களில் கிறிஸ்துவின் நிருபத்தினை எழுதப்பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்று தேவன் முன் குறித்துள்ளார் எனப் பரிசுத்த பவுல் அடிகளார் எழுதிட்டபோது, இவர் கிறிஸ்துவின் குணலட்சணங்கள் நம் இருதயங்களில் பதியப்பெற்றிருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தினை வலியுறுதினவரானார் (உரோமர் 8:28-30). இவர்களது சரீரங்களானது எவ்வளவுதான் பூரணமற்றவைகளாக இருப்பினும், இவர்கள் தங்கள் கொள்கைகளுக்கு ஏற்ப காணப்படும் விஷயங்களில் எவ்வளவு பூரணமற்றவர்களாக இருப்பினும், அந்தக் கொள்கைகள் திவ்விய நியமங்களின்படியானவைகளாகக் காணப்பட வேண்டும். கொள்கைகளை நிறைவேற்றும் விஷயத்தில் பாடுபடுவதில் மகிழத்தக்கதாக, அந்தக் கொள்கைகளுடன் நாம் இணக்கமாய்க் காணப்பட வேண்டும்.

**SM 349**

## அன்றாட ஜீவியத்தில் அச்சுறுத்தும் ஒரு குறைவு

"நீங்கள் பாவஞ்செய்யாமல், நீதிக்கேற்க விழித்துக்கொண்டு, தெளிந்தவர்களாயிருங்கள்; சிலர் தேவனைப்பற்றி அறிவில்லாதிருக்கிறார்களே; உங்களுக்கு வெட்கமுண்டாக இதைச் சொல்லுகிறேன்." (1 கொரிந்தியர் 15:34)

அப்போஸ்தலனின் எல்லா எழுத்துக்களைப்போன்று, இந்தப் புத்திமதியும் பாவிகளின் உலகத்தாருக்காய் இராமல், மாறாகக் கிறிஸ்தவர்களுக்கே கொடுக்கப்பட்டுள்ளது. ஒருவேளை இவ்வசனத்தில் இடம்பெறும் அப்போஸ்தலனின் கருத்தானது, நாம் சற்று வேறு வார்த்தைகளில் மொழிப்பெயர்த்து வழங்கினால் நன்கு விளங்கும் . . . "நீதியைப்பற்றின சரியான புரிந்துகொள்ளுதலுக்கு விழித்துக்கொள்ளுங்கள். உங்கள் ஜீவியங்களில் நீதிக்கு எதிராய்ப் பாவம் செய்யாதிருங்கள்; ஏனெனில் சிலர் நீதி குறித்த, நீதியின் கொள்கைக் குறித்த தேவ அறிவு இல்லாதிருக்கிறார்கள். உங்களுக்கு வெட்கம் உண்டாகத்தக்கதாக இதைச் சொல்லுகிறேன்" என்பதாகும்.

கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் காணப்படும் நாம், எதிர்க்காலத்தின் மாபெரும் வேலைக்கென்று நமக்குக் கற்பித்துக்கொண்டிருக்கின்றார் என்றும், நம்மை ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கின்றார் என்றும் அடையாளம் கண்டுகொள்கின்றோம். வரவிருக்கின்ற யுகத்தில் சபையின் வேலையானது வேதாகமத்தின்படி, மேசியாவின் இராஜ்யத்தில் இராஜாக்களாக, ஆசாரியர்களாக, நியாயாதிபதிகளாக, தேவனுடைய பிரதிநிதிகளாக இருப்பதாகும். இராஜாக்களென அவர்கள் நமது கர்த்தர் இயேசுவோடுகூட உலகத்தின் ஆளுகையில் பங்குகொள்பவர்களாய் இருப்பார்கள். ஆசாரியர்களென அவர்கள் உலகை சொஸ்தப்படுத்தும், கற்பித்துக்கொடுக்கும், உலகத்திடம் அனுதாபம் காட்டும் வேலையில் பங்கெடுப்பார்கள். நியாயாதிபதிகளென அவர்கள் நீதி வழங்குவார்கள், மேசியாவின் ஆளுகையாகிய ஆயிரவருடங்களின் போது மனுக்குலத்திற்கு அடிகள் அல்லது வெகுமானங்கள் கொடுப்பவர்களாய் இருப்பார்கள். ஆகையால் இராஜாக்களாகுவதற்கு, ஆசாரியர்களாகுவதற்கு மற்றும் நியாயாதிபதிகளாகுவதற்கு நம்பிக்கைக்கொண்டிருக்கும் யார் ஒருவரும் தன்னை அவ்வேலைக்குத் தகுதியாக்கிடும் இருதயம் மற்றும் மனதின் தகுதிகளை இப்பொழுது அடைந்தாக வேண்டும்; ஏனெனில் முறையாய்த் தகுதி பெறாத யார் ஒருவரையும் தேவன் நியமிக்கமாட்டார் என்பதில் நமக்கு நிச்சயமே.

இந்தக் காரணத்திற்காகவே தேவன் தம்முடைய சபையைக் கடந்த 19 நூற்றாண்டுகளாக உலகத்திலிருந்து அழைத்துக்கொண்டிருக்கின்றார் மற்றும் நமது கர்த்தர் இயேசுவின், அப்போஸ்தலர்களின், நியாயப்பிரமாணத்தின் மற்றும் தீர்க்கத்தரிசிகளின் மகிமையான அறிவுரைகளை நமக்குத் தந்துகொண்டிருக்கின்றார். இவைகள் அனைத்தும் தேவன் நம்மை அழைத்துள்ளதான மாபெரும் ஊழியத்திற்கு நம்மைத் தகுதியாக்கிடும் இருதயம் மற்றும் மனதின் அந்தப் பண்புகளில் நம்மைக் கட்டியெழுப்புவதற்கேயாகும்.

ஆனால் தேவன் தம்முடைய பிள்ளைகளை அவர்களது பூரணமற்ற சரீரங்களின் அடிப்படையில் பரீட்சித்துப்பார்க்கிறதில்லை; ஏனெனில் நாம் செய்ய வேண்டுமென்று விரும்புபவைகளைச் செய்ய முடியாதவர்களாய் இருக்கின்றோம் என்பதை அவர் அறிவார். அவர் நம் சிந்தைகளுடன், நம்முடைய மனங்களுடன் தம் கையாளுதலைக் கொண்டிருக்கின்றார். அவரது வார்த்தைகளினுடைய மறுரூபமாக்கும் வல்லமையினால், அவர் நமக்குப் புதிய மனதைக் கொடுத்துக்கொண்டிருக்கின்றார் மற்றும் இந்தப் புதிய மனதையே அவர் தமது குடும்பத்திற்குள்ளாக ஏற்றுக்கொள்கின்றார். அதுவே

புதுச்சிருஷ்டியாகிறது (உரோமர் 12:1, 2; 2 கொரிந்தியர் 5:17). நம்முடைய சொந்த சித்தங்களுக்குப் பதிலாக நாம் புதிய சித்தத்தை, தேவனுடைய சித்தத்தை ஏற்றுக்கொள்கின்றோம் மற்றும் நம்முடைய சொந்த திட்டங்கள் மற்றும் நோக்கங்களுக்குப் பதிலாக, திவ்விய ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்கின்றோம். இப்படியாக விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் வாயிலாக நாம் கடந்துவந்துள்ள இந்தப் புதிய உறவின் அடிப்படையில் தேவன் நம்மை அவரது பிள்ளைகளெனக் கையாளுகின்றார் மற்றும் நமது கர்த்தராகிய கிறிஸ்து வாயிலாக, நாம் தேவனுடைய பார்வையில் பூரணர்களாய் எண்ணப்படுகின்றோம்.

## தேவ சித்தம் குறித்த அறிவு

நமது சரீரங்கள் அபூரணமானவைகளாக இருக்க, எப்படிச் சித்தங்களில் நாம் பூரணமாய் இருக்க முடியும்? அப்போஸ்தலர் போன்று நாமும்: "நன்மை செய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்தில் இருக்கிறது, நன்மை செய்வதோ என்னிடத்திலில்லை" என்றே பதிலளிக்கின்றோம் (உரோமர் 7:18). நீதியைச் செய்வதற்கான தன்னுடைய சித்தத்தில் அப்போஸ்தலன் எல்லா நேரங்களிலும் வெற்றிக் காணவில்லை. இப்படியாகவே இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்க நாடிடும் ஒவ்வொருவரின் விஷயத்திலும் காணப்படுகின்றது. நீதி செய்ய வேண்டும் என்ற சித்தம், விருப்பம் நம் அனைவருக்கும் உள்ளது, ஆனால் நீதியை எப்படிச் செய்வது என்பதுதான் பிரச்சனை.

நம்முடைய மாம்சத்தின் அபூரணங்களின் அடிப்படையில் தேவன் நம்மை நியாயந்தீர்க்கிறதில்லை என்று நாம் படிப்படியாகக் கற்றுக்கொள்கின்றோம்; நாம் உண்மையுள்ளவர்களாகக் காணப்படுவது வரையிலும், இந்தக் குறைவுகளானது கிறிஸ்துவால் தரிப்பிக்கப்படும் நீதியின் வஸ்திரத்தினால் மூடப்படுகின்றது. ஆகையால் சரியானவைகளை நமது ஒவ்வொரு கிரியையிலும், வார்த்தையிலும், சிந்தையிலும் நடப்பிப்பதற்கு நாம் கடுமையாய் முயன்றுகொண்டிருக்கின்றோம் என்பதை நமது பரம பிதாவுக்குக் காண்பிக்கத்தக்கதாக நம்மால் முடிந்ததை நாம் செய்கின்றோம். மேலும் தமது குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினனும் பூரண சித்தம் கொண்டிருக்க வேண்டும் என்று அவர் எதிர்ப்பார்க்கின்றபடியால், நமக்கான தேவ சித்தம் யாது? என்ற தனிப்பட்ட ஒரு கேள்வி எழும்புகின்றது. ஆகையால், "தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக" நாம் கவனமாய் நாடுகின்றோம் (உரோமர் 12:1, 2).

தேவனுடைய சித்தம் இன்னதென்று பகுத்தறிய முயல்வது என்பது, அவரது சித்தம் குறித்த அறிவிற்குள்ளாக வருவதாகும், அதை நமக்கு நாம் விவரித்துக்கொள்வதாகும். நாம் உண்மையுள்ளவர்களாக இருப்போமானால் நாம் இதில் நாட்கள் செல்ல செல்ல முன்னேறுகிறவர்களாக இருப்போம். முதலில் நாம் கொஞ்சம் அறிவினைப் பெற்றிருந்தோம் மற்றும் அதை நாம் நடைமுறைப்படுத்தினோம். நாம் கிருபையிலும், அறிவிலும் வளருகையில், தேவ சித்தத்தினை நாம் அதிகம் அறிய வருகிறோம், மேலும் அதிகரித்திடும் இந்த அறிவையும்கூட நடைமுறையில் செயல்படுத்துவது நமக்கான காரியமாய் இருக்கின்றது. தேவ சித்தத்தினைக் குறித்த இந்த அறிவினை நாம் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் அடையாமல், மாறாக வேதாகமத்தை ஆராய்வதன் மூலமே அடைகின்றோம் (2 தீமோத்தேயு 2:15).

தேவனுடைய குடும்பத்திற்குள்ளாக வரும் ஒருவன் தன் சொந்த சித்தத்தை விட்டுவிட்டு, அதற்குப்பதிலாக தேவ சித்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளான். கர்த்தருக்கென்று தன் சொந்த சித்தத்தை விட்டுவிடாதவன், அவருடைய பிள்ளை இல்லை. அப்போஸ்தலன் கூறுவது போன்று, "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" (உரோமர் 8:9). கிறிஸ்துவின் ஆவி என்பது, பிதாவின்

சித்தத்திற்கு முழுமையாய்க் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுக்கும் ஆவியாய் இருக்கின்றது; மேலும் இந்த ஒரு நிலைமைக்கு நாம் வரும்போது, நாம் நம் சொந்த சித்தங்களை விட்டுவிட்டு, இதற்குப்பதிலாக தெய்வீகச் சித்தத்தை ஏற்றுக்கொள்கிறவர்களாய் இருப்போம். இப்படி நாம் செய்வதற்கான காரணம் - இதுவே நமது மீட்பரின் அடிச்சுவடுகளில் பின்தொடர விரும்புகிற யாவருக்குமான தகுதியான நடக்கையாய் இருக்கின்றது என்பதினாலாகும்; நமது சொந்த சித்தங்களும் நமக்குத் திருப்தி தராதவைகளாய் இருக்கின்றது என்பதினாலாகும். நமது மனங்களும், நமது சரீரங்களும் மிகவும் அபூரணமானவைகளாக இருக்கின்றபடியால், நமது சொந்த சித்தத்தின்படி செய்வதன் மூலம் நாம் அடிக்கடி இன்னலுக்குள்ளாகுகின்றோம். ஆகையால் தேவ சித்தமானது, மிகவும் கிருபையான ஒரு சித்தமாக இருக்கின்றதென நாம் காண்கின்ற காரணத்தினால், தேவ சித்தத்தை அறிவதிலும், அதைச் செய்வதிலும் நாம் மகிழ்கின்றோம்.

## நீதி முதலாவது, பின்னரே அன்பு

தம்முடைய பிள்ளைகள் சோதனைகளையும், இன்னல்களையும் மற்றும் மெருகூட்டுதல்களையும் பெற்றிருக்க வேண்டும் என்றும், இந்த அனுபவங்கள் மூலம் நம்மில் தேவனுக்கொத்த குணலட்சணத்தை வளர்க்க, குணலட்சணத்தை உறுதியடையப் பண்ண வேண்டும் என்றும் தேவ சித்தம் காணப்படுகின்றது; இப்படியாகத் தேவன், கர்த்தர் இயேசுவினிடத்தில் ஒப்புவித்ததான மாபெரும் வேலையில், தேவனால் நாம் பயன்படுத்தப்படுவதற்கு நம்மைப் பாத்திரவான்களாக்கிட வேண்டுமென்று அவர் இருக்கின்றார்; இப்படியாகப் பூமியின் குடிகளை ஆசீர்வதிப்பதற்காகப் பிதாவினால் திட்டமிடப்பட்டுள்ளதான பரலோகராஜ்யத்தில் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு உடன் சுதந்திரர்களாக நம்மை ஆக்கிட வேண்டுமென்று தேவன் இருக்கின்றார்.

சிலசமயங்கள் கிறிஸ்தவ ஜனங்கள் வேதாகமத்தில் அன்பு குறித்த உபதேசத்தைக் கண்ணோக்குகின்றனர்; ஆனால் அன்பிற்கு முன்னதாக இன்னொரு பாடம் இருக்கின்றது என்பதை மறந்துபோய் விடுகின்றனர். அந்த அடிப்படையான பாடத்தைக்குறித்தே இன்று உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகின்றோம். அது நீதி பற்றின பாடமாகும். "நீதிக்கு விழித்தெழுங்கள்!" என்றே நம் ஆதார வசனம் உண்மையில் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. தவறிலிருந்து, சரியானவற்றை நாம் வேறுபடுத்திப் பார்த்திடவும் மற்றும் நீதியானவற்றை, சரியானவற்றை நடைமுறைப்படுத்திடவும் நாம் அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டும். நீதியானவைகளே சரியானவைகளாக இருக்கின்றது.

நீதி என்றால் என்ன என்று காண்பித்துக்கொடுக்கும்படியாகத் தேவனுடைய நியாயப்பிரணமானது, சீனாய் மலையில் வைத்து இஸ்ரயேலர்களுக்குக் கொடுக்கப்பட்டது. நீதிக்கும் அதிகமான எதையும் செய்யும்படிக்கு அவர்கள் கேட்டுக்கொள்ளப்படவில்லை. "கொலைச் செய்யாதிருப்பாயாக" என்று நியாயப்பிரமாணம் கூறினது; ஏனெனில் தேவனுடைய சொந்த நியாயப்பிரமாணமானது ஜீவனைக் கேட்டாலொழிய மற்றபடி, ஒருவரின் ஜீவனை எடுத்துப்போடுவது என்பது தவறானதாகும். "களவுச் செய்யாதிருப்பாயாக;" இப்படிச் செய்வது தவறாகும், அநீதியாகும். "பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக;" இப்படிச் செய்வது அநீதியாயிருக்கும் (யாத்திராகமம் 20:2-17).

ஆகையால் இஸ்ரயேல் ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்ட தேவனுடைய பிரமாணத்தினுடைய சாரம் "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக" (மத்தேயு 22:37) என்பதாகக் காணப்பட்டது. மற்றவர்களை நடத்திடும் விஷயத்தில் யூதர்களுக்குக் கற்பிக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தினுடைய சாரம்: உங்கள் அயலார் உங்களுக்கு நீதி செய்திடவேண்டுமென்று நீங்கள் விரும்புவதுபோன்று, நீங்களும் உங்கள் அயலாருக்கு நீதி செய்யுங்கள் என்பதேயாகும் (மத்தேயு 7:12).

## நடைமுறையில் நீதியினைச் செயல்படுத்துதல்

தேவன் இதே பிரமாணத்தினைச் சபைக்குக் கொடுத்திட்டாரா? ஆம்! அது நியாயப்பிரமாணத்தின் ஆவியினுடைய காரியமாகும். தேவனுடைய பிரமாணமானது, அவரது சிருஷ்டிகள் யாவற்றின் மீதும் காணப்படுகின்றது. ஆனால் நியாயப்பிரமாண காலக்கட்டத்தில், தேவன் மாம்சீக இஸ்ரயேலருடன் ஒரு விசேஷித்த நியாயப்பிரமாண உடன்படிக்கையினைப் பண்ணியிருந்தார். வேறுயாருமே அந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ்க் காணப்பட்டிருக்கவில்லை. அந்த நியாயப்பிரமாணத்தினைப் பூரணமாய்க் கைக்கொள்ள முடிகின்ற யூதனால், என்றென்றுமாய் ஜீவிக்க முடியும் மற்றும் நித்திய ஜீவனைத் தன் வசத்தில் பெற்றிருப்பதினால், அவனால் பூமியின் குடிகளை ஆசீர்வதிக்கப்போகின்ற அந்த மாபெரும் நிஜமான ஆவிக்குரிய இஸ்ரயேலில் அங்கம் வகிக்கும் வாய்ப்பினையும் பெற்றுக்கொள்ள முடியும். இதைத்தான் நமது கர்த்தர் இயேசு செய்திட்டார். ஆவிக்குரிய இஸ்ரயேலுக்கான திவ்விய பிரமாணத்தைக் குறித்துப் பேசுகையில், அவர் அதன் கோரிக்கைகள் எவ்வளவு விசாலமானவையாகவும், பிரமாண்டமானதாகவும் இருக்கின்றது என்பதை வெளிப்படுத்துவதன் வாயிலாய், அவர் "தம் திருச்சட்டத்தைச் சிறப்பித்து மேன்மைபடுத்தியுள்ளார்" (ஏசாயா 42:21, திருவிவிலியம்).

உலகத்திலுள்ள ஒவ்வொருவரையும் நீதியாய்க் கையாளுவது தகுதியான காரியமே என்கிற விஷயத்தில் எந்த அறிவுள்ள மனுஷனும் கேள்வி எழுப்புவதில்லை. இப்பாடமானது நமது அன்றாட ஜீவியத்தின் காரியங்கள் அனைத்திலும் அநேகம் உட்பிரிவுகளைக் கொண்டிருக்கின்றதாய் இருக்கின்றது. நீதியின் கொள்கையானது ஒவ்வொரு நடவடிக்கைகளிலும், மிகவும் சாதாரணமான விஷயங்களிலும்கூடத் தலையிடுகின்றதாயிருக்கும். இது உலகத்திலுள்ளவர்களைக் கையாளும் விஷயத்தில் மாத்திரமல்லாமல், நம்முடைய சொந்த குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினர்கள் விஷயத்திலும்கூடப் பொருந்துகின்றதாயிருக்கும். நம் சொந்த விஷயத்திலும், மற்றவர்கள் விஷயத்திலும் நீதியின் கொள்கையானது அடையாளம் கண்டுகொள்ளப்பட வேண்டும். பொன்னான பிரமாணம் குறித்த இச்சிந்தனையை அனைவருமே ஒருவேளை தங்கள் மனங்களில் உறுதியாய்ப் பதியப் பெற்றுக்கொள்வார்களானால், ஒவ்வொருவரும் நீதிக்கு, நியாயத்திற்கு விழித்தெழுவார்களானால், ஒட்டுமொத்த உலகமும் மறுமலர்ச்சியடைந்து விடும்.

ஒருவேளை நீதியின் இக்கொள்கையானது அடையாளம் கண்டுகொள்ளப்பட்டு, கைக்கொள்ளப் பட்டால் ஐரோப்பாவில் இன்று மனுஷர்கள் ஒருவரையொருவர் சுட்டுக்கொன்று கொண்டிருக்க மாட்டார்கள். மாறாகச் சிறப்பான ஏதோ சிலவற்றைச் செய்துகொண்டிருப்பார்கள், அதாவது மற்றவர்கள் தங்களுக்குச் செய்ய வேண்டுமென்று இவர்கள் விரும்பும் ஏதோ சில நன்மைகளை ஒருவருக்கொருவர் செய்து கொண்டிருப்பார்கள். ஆனால் மனுஷர்கள் நீதியின், நியாயத்தின் இந்த நியமனத்திற்கு ஏற்றபடி வாழ்ந்து கொண்டிருக்கவில்லை. இக்கொள்கையானது அரசாங்கங்களினாலும், தனிமனிதர்களாலும் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. பொன்னான பிரமாணத்தினை மீறுகிறதற்கு வழங்கப்படும் பொதுவான சாக்குப்போக்கு: "நமக்குச் செய்யப்படும்படிக்கு நாம் எதிர்ப்பார்ப்பவைகளை, மற்றவர்களுக்கு நாம் செய்வது ஒருபோதும் சரியாய் இருக்காது; ஏனெனில் மற்றவர்கள் இதைச் சாதகமாய்ப் பயன்படுத்திக்கொள்வார்கள்; அவர்கள் தங்கள் பங்கைச் செய்ய மாட்டார்கள்; அவர்கள் பிரதி உபகாரம் செய்ய மாட்டார்கள்" என்பதேயாகும். பிரிட்டன் கூறுவதாவது: "ஜெர்மானியர்களுக்கு நாம் பொன்னான பிரமாணத்தினைச் செயல்படுத்தக்கூடாது; ஏனெனில் அவர்கள் நமக்கு என்ன செய்வார்கள் என்பதை நாம் அறியோம்." ஜெர்மானியர்களும் இதே மாதிரியே வாக்குவாதம் பண்ணுகின்றனர்.

இப்படி நடந்துகொள்வதற்கான காரணம், தேவனுக்கான பயமாயிராமல், மாறாக மனுஷனுக்கான பயமேயாகும்; தேவனுக்கான பயமில்லை. கிறிஸ்தவர்கள் மனுஷரையும், தேசங்களையும் குறித்தும், இவர்கள் என்ன செய்வார்களோ என்பது குறித்தும் பயப்படுவார்களானால், இவர்கள் மாம்சமானவர்களாகவும், மாம்சத்தின்படி ஜீவிப்பவர்களாகவும் இருந்து, அவிசுவாசியான உலகத்தாரைப் போன்று இருப்பார்கள் என்று தேவன் கூறுகின்றார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனுடன் உறவிற்குள்ளாக வந்தவர்களும், அவருக்கென்று நம்முடைய ஜீவியங்களை ஒப்புக்கொடுத்துள்ள வர்களுமான நாம் இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் எப்படி நடந்துகொள்வோம்? நம்முடைய ஜீவியங்களின் காரியங்களில் நீதியின் இக்கொள்கையின் மீது நம்பிக்கை வைக்க பயமாய் உள்ளது என்றும், நமது ஒவ்வொரு வார்த்தை, சிந்தை மற்றும் கிரியையின் விஷயத்தில் இக்கொள்கையினைக் கைக்கொள்ள துணிவில்லை என்றும் நாம் சொல்லுவோமா? தேவனை விசுவாசிப்பதற்கும், அவருக்குக் கீழ்ப்படிவதற்கும் நாம் அச்சம் கொண்டுள்ளோமா?

மற்றவர்கள் நம்மிடத்தில் பொன்னான பிரமாணத்தினைக் கைக்கொள்ளும்போது மாத்திரமே, நாமும் பொன்னான பிரமாணத்தினைக் கைக்கொள்ள வேண்டும் என்றும், மற்றவர்கள் நம் விஷயத்தில் அதைக் கைக்கொள்ளத் தவறும்போது, நாமும் அதைக் கைக்கொள்ளாமல் புறக்கணித்துவிடலாம் என்றும் தேவன் நம்மிடத்தில் சொல்லவில்லை. மாறாக எல்லாச் சந்தர்ப்பங்களிலும், மற்றவர்கள் செய்வதைப் பொருட்படுத்தாத நிலையில் நாம் அதை நடைமுறைப்படுத்திட வேண்டும். பின்னர் எல்லாக் காரியங்களும் நம்முடைய நன்மைக்கேதுவாய் நடக்கும் என்பதை நாம் அறிந்துகொள்வோம்; காரணம் நாம் தேவனுக்கும், அவரது ஏற்பாடுகளுக்கும் இசைவாகக் காணப்பட்டிருக்கின்றோம். ஜீவியத்தின் காரியங்கள் அனைத்தையும் நன்மைக்கேதுவாய் மாற்றிப்போடுவதற்கு அவர் வல்லமையுள்ளவராய் இருக்கின்றார். நாம் ஒருவருக்கொருவர் நீதியானவைகளைச் செய்திட வேண்டும் என்பது அடிப்படையான காரியமாய் இருக்கின்றது மற்றும் இப்படிச் செய்வது என்பது, நமது சொந்த குணலட்சணங்களுடைய விஷயத்தில் மகா ஆசீர்வாதத்தினைக் கொண்டுவருகின்றதாய் இருக்கும்.

தன் குடும்பத்தில் அல்லது கிறிஸ்துவின் சபையில் நீதியின் கொள்கையினை, பொன்னான பிரமாணத்தினை மீறியிருப்பவன், ஒருவேளை கிறிஸ்தவனாய் இருப்பானானால், இக்காரியத்தினைக் கவனத்தோடும், ஜெபத்தோடும் கண்ணோக்கி, "நீதிக்கு விழித்தெழுவானாக மற்றும் பாவம் செய்யாதிருப்பானாக." இப்படியாக நீதியை மீறுவது என்பது பாவமாகும் மற்றும் நாங்கள் அறிந்திருக்கிறவரை, இந்தப் பாவம் எங்கும் நிலவியுள்ளது. இந்த உண்மையினைக் குறித்த ஒரு சரியான புரிந்துகொள்ளுதல் அநேகருக்கில்லை. இவர்கள் நீதியே அனைத்துக் குணலட்சணங்களுக்கும், சரியான ஜீவியத்திற்குமான அஸ்திபாரமாய்க் காணப்படுகின்றது என்று காண்கிறதில்லை. அது தேவனுடைய சிங்காசனத்தின் ஆதாரமாய் இருக்கின்றது (சங்கீதம் 89:14). ஒருவன் தன் சக சிருஷ்டியின் விஷயத்தில் நீதியின் கொள்கையினை மீறிக்கொண்டிருக்கிற அதேவேளையில், அந்தச் சக சிருஷ்டியினிடத்தில் அல்லது தேவனிடத்தில் அன்பு பாராட்டிக்கொண்டிருப்பானானால், அது விருதாவே. நாம் நீதியைச் செய்த பிற்பாடே, ஒருவர் இன்னொருவரிடத்தில் அன்பினை நடைமுறைப்படுத்துவதற்கான உரிமையினை உடையவர்களாய் இருப்போம். பின்னர் நம்மால் முடிந்தமட்டும் அன்பின் அடிப்படையில் காரியங்களைச் செய்திடலாம். முதலாவது நீதி, பின்பே அன்பு என்பதே மற்றவர்கள் விஷயத்திலுள்ள நமது கையாளுதல்கள் அனைத்தையும் நிர்வகிக்கும் விதியாய் இருக்க வேண்டும்.

## தேவ ஜனங்களின் பொறுப்பு

தேவனுடைய பிள்ளைகளாக இருப்பவர்கள், சீக்கிரத்தில் உலகத்தினுடைய நியாயாதிபதிகளாக்கப்படுவதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றனர். "பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா?" (1 கொரிந்தியர் 6:2,3) என்று அப்போஸ்தலன் கூறுவது போன்றதாகும். மேலும் நம்முடைய இருதயங்களிலும், ஜீவியங்களிலும், நம்முடைய குணலட்சணங்களிலும், அவர் விரும்புகின்றதான அந்தக் கொள்கைகளை வளர்த்திடுவதற்குத் தேவன் இப்பொழுது நாடிக்கொண்டிருக்கின்றார். ஆகையால் நாம் நம்முடைய இருதயங்களில் நீதியாய்க் காணப்படவில்லையெனில், நீதியின் இக்கொள்கையினை மதித்து, அதை நடைமுறைப்படுத்துவதில் சந்தோஷம் கொள்ளவில்லையெனில், நாம் இராஜ்யத்திற்குத் தகுதியடைய மாட்டோம். மிருக ஜீவன்களிடம்கூட நாம் அநீதியாய் நடக்கக்கூடாது. ஒவ்வொரு சிருஷ்டிக்கும் அதன் உரிமைகள் காணப்படுகின்றன; மற்றும் ஒவ்வொரு சிருஷ்டிக்கும், அதற்கே உரிய உரிமைகளை நாம் கொடுத்திட வேண்டும். விளைவுகள் தேவனிடத்தில் இருக்கின்றது. இப்படிச் செயல்பட்டு தேவன் தமது உண்மையுள்ள பிள்ளைகளுக்கு வைத்துவைத்துள்ளதான அந்த மகிமையான நிலைமைக்கு நம் மனங்களையும், நமது இருதயங்களையும் ஆயத்தப்படுத்த வேண்டாமோ?

இரக்கத்தின் அல்லது தயவின் அடிப்படையில் தேவனுடைய இராஜ்யமானது கொடுக்கப்படும் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. பரலோக வெகுமானத்தை அருளும் விஷயத்தில் இரக்கமோ அல்லது தயவோ பாராட்டப்படுகிறதில்லை. நம்முடைய பாவங்களின் விஷயத்திலும், நாம் எதிர்த்துப்போராடிக்கொண்டிருக்கின்றதான பெலவீனங்களின் விஷயத்திலும் தேவன் இரக்கம் பாராட்டுகின்றார்; ஆனாலும் பொருத்தமான குணலட்சணம் இல்லாத எந்தவொரு நபரையும் அந்த இராஜ்யத்தில் அவர் அனுமதிப்பதில்லை. நமது கர்த்தராகிய இயேசுவோடுகூட உடன்சுதந்திரர்களாகவும், ஆளுபவர்களாகவும் இருப்பதற்குத் தேவனால் அங்கீகரிக்கப்படுபவர்கள், நீதியின் கொள்கைகளைக் கொண்டவர்களாகவும், அந்தக் கொள்கைகளை இப்பொழுது எப்படிச் செயல்படுத்துவது என்பதை அறிந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும். அநீதியானவைகளைச் செய்வதைப்பார்க்கிலும், இழப்புகளைச் சந்திக்க விருப்பமுள்ளவர்களாக இருக்கும் அளவுக்கு நீதி செய்ய விரும்பாதவர்கள் இராஜ்யத்தில் பங்கினைப் பெற்றுக்கொள்ளமாட்டார்கள்.

தேவனை, நீதிக்கான மாபெரும் பிரதிநிதியென வேதாகமம் சுட்டிக்காட்டுகின்றதாயிருக்கின்றது. நாம் இராஜ்யத்தில் ஓர் இடத்தினைப் பெற்றுக்கொள்வோமானால், அது கிரியைகளின் அடிப்படையிலும், கிருபை மற்றும் அறிவின் விஷயத்திலும், நமது கர்த்தர் இயேசுவுக்கொத்த குணலட்சணத்திலுமுள்ள நமது வளர்ச்சியின் அடிப்படையிலுமே கொடுக்கப்படுகின்றதாயிருக்கும். இயேசுவின் இரத்தத்தின் மீதான விசுவாசத்தினால் நாம் நீதிமானாக்கப்பட்டிருந்தால், தேவனோடு ஓர் உடன்படிக்கையினைப் பண்ணி, அவரது பரிசுத்த ஆவியினால் நாம் ஜெநிப்பிக்கப்பட்டிருந்தால், நாம் புதுச்சிருஷ்டிகளெனப் பூரணத்தினை நோக்கிச் செல்வதை அவர் காண விரும்புகின்றார். நமது பரம தந்தை நம்மிடத்தில் அக்கறையற்று இருக்கின்றார் என்றும், அவர் நம்மை இரக்கமற்ற விதத்தில், அக்கறையற்ற விதத்தில் நியாயந்தீர்ப்பார் என்றும் எண்ணக்கூடாது. மாறாக பிதா தாமே உங்களை நேசிக்கிறார்" என்ற நமது கர்த்தருடைய வாக்குறுதியை நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

இறுதியாக, நாம் தேவனுக்கு உண்மையான, நேர்மையான பிள்ளைகளாக இருந்து, நம்முடைய குறைவுகளைக் கிறிஸ்துவினுடைய நீதியின் வஸ்திரத்தினால் மூடப்பெற்றிருப்போமானால் - நீதி எனும் இம்மாபெரும் விஷயத்தில், அதாவது அனைத்தையும் பொன்னான பிரமாணத்தினுடைய அடிப்படையில் கையாளும் விஷயத்தில் நம்மால் முடிந்ததை நம் முழுப்பெலத்துடன் செய்வோமானால் -

இக்கொள்கையானது, பிதாவினுடைய ஆளுகையின் அஸ்திபாரமாய் இருக்கின்றதாக நாம் உணர்ந்திருக்கும் காரியத்தினைப் பிதாவுக்கு வெளிப்படுத்துபவர்களாக இருப்போம் என்பதை நினைவில்கொள்வோமாக. இந்த உறுதியான அஸ்திபாரத்தின்மீதே அன்பின் கட்டிடத்தை நாம் கட்டியெழுப்ப முடியும். இப்படியாக நாம் இராஜ்யத்திற்கு ஆயத்தமாக்கப்படுவோம்.

## SM 259

இந்தத் தையல் வேலையில், இந்தச் சித்திர தையல் வேலையில் எவை உள்ளடங்குகின்றது என்பது தொடர்புடைய விஷயத்தில் நாம் தவறு செய்யாதிருப்போமாக. அது அறிவல்ல; தையலைச் சரியாய்த் தைப்பதற்கு அறிவு மிகவும் தேவை என்றாலும், அது அறிவல்ல. அது நம் திறமைகளுமல்ல; தையல் விஷயத்தில் திறமைகள் பயன்படுத்தப்பட்டாலும், அது திறமைகளல்ல. அது நம் கடுமையான உழைப்பை மாத்திரம் குறிக்கிறதில்லை; உழைப்பு மிகவும் ஏற்றவையாகவும், ஒருவேளை சூழ்நிலைகள் சாதகமாய் இருக்கும் பட்சத்தில் அவசியமானவையாகவும் இருப்பினும், அது உழைப்புகளல்ல. இந்தச் சித்திரத் தையல் அன்பைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; ஏனெனில் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறை வேறுதலாய் இருக்கின்றது. (உரோமர் 13:10) இது நமது கர்த்தரினால் கொடுக்கப்பட்ட புதிய கட்டளையாயிருக்கின்றது. "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" (யோவான் 13:34). "என்னையும், என் வார்த்தைகளையும்" என்று சொல்லுகையில், கர்த்தர் அவருக்கான மற்றும் அவரது சத்தியத்திற்கான அன்பினைச் சமநிலையில் வைக்கின்றார். நமது கர்த்தருக்கும், அவரது வார்த்தைகளுக்கும் நாம் எல்லாச் சூழ்நிலைகளிலும் உண்மையாய்க் காணப்பட வேண்டும். பின்னர்ச் சகோதரருக்கான அன்பு கடந்துவருகின்றது - ஏனெனில் அவர்கள் அவருடையவர்களாய் இருக்கின்றனர் - ஏனெனில் அவரது ஆவியினை அவர்கள் உடையவர்களாய் இருக்கின்றனர் - ஏனெனில் அவரது அடிச்சுவடுகளில் நடப்பதற்கு அவர்கள் நாடுகின்றனர். "தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?" (1 யோவான் 4:20) இது அப்போஸ்தலனுடைய பலமான வார்த்தைகளாய் இருக்கின்றன. அன்பானது அயலார்களிடத்திற்கு, நண்பர்களிடத்திற்கு, ஆம் சத்துருக்களிடத்திற்குக் கடந்து தொடர்ந்து வரவேண்டும்; வஸ்திரங்களில் முழுமையான சித்திரத்தைப் பெற்றிருக்க வேண்டுமெனில், மேற்கூறப்பட்டுள்ள இவர்கள் அனைவருக்குமான ஓர் உண்மையான, மெய்யான, உறுதியான அன்பானது குணலட்சணத்தில் காணப்பட வேண்டும். மேலும் ஒருவேளை சத்துரு, சகோதரன் ஒருவனாகக் காணப்படுவானானால், அன்பிற்கான சோதனை மிகவும் கடுமையாய்க் காணப்படும். ஆனால் சித்திரத் தையலின் இவ்வம்சமானது தைக்கப்பட வேண்டும் என்பது நமது கர்த்தரின் எதிர்ப்பார்ப்பாய் இருக்கின்றது. தன் சத்துருக்களைக்கூட அன்புகூராதவன், வேறு எந்தக் காரியங்களுக்கும் தகுதியானவனாய்க் காணப்பட்டாலும், இராஜ்யத்திற்குத் தகுதியானவனாய் இருப்பதில்லை; சகோதர சிநேகம் உள்ளவர்களாய் இருங்கள், இரக்கம் கொள்ளுங்கள், அனுதாபம் கொண்டிருங்கள், தயவு பாராட்டுங்கள், உதவுங்கள், சுயத்தைப் பலிசெலுத்துங்கள், மற்றவர்கள் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகின்றீர்களோ, அதை நீங்களும் மற்றவர்களுக்குச் செய்யுங்கள். பொன்னான பிரமாணமானது, உங்களது எண்ணங்களை, வார்த்தைகளை மற்றும் கிரியைகளை அளப்பதாக - உங்கள் சித்திர தையலின் நீளங்களை அளந்துபார்த்து, அவை நல்ல சித்திர தையலென உங்களுக்கு உறுதியளித்திடுவதாக.

**OVERLAND MONTHLY**

**OV 229** [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# பொன்னான பிரமாணம்

"ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும், தீர்க்கத்தரிசனங்களுமாம்." (மத்தேயு 7:12)

தேவனைப் பற்றியதான நம்முடைய புரிந்துகொள்ளுதலானது, நம்முடைய உயர்ந்த கொள்கைகளையும், கோட்பாடுகளையும் படம்பிடித்துத் தருகின்றதாயிருக்கும். சர்வ வல்லவரைக் குறித்துக் கீழான அல்லது அரைக்குறையான புரிந்துகொள்ளுதலைக்கொண்டிருக்கும் யார் ஒருவனும், அவனது ஜீவயத்தின் நடத்தைகளில் ஏறக்குறைய கீழ்த்தரமானவனாகவும் மற்றும் கவனக்குறைவானவனாகவுந்தான் காணப்படுவான்; ஏனெனில் ஒவ்வொரு மனுஷி அல்லது மனுஷன் தனது சொந்த கொள்கைகளையே பின்பற்றுகிறவனாகக் கொஞ்சம் காணப்படுவான். மேலும் இது "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவைப்போன்று பூரணசற்குணராயிருக்கக்கடவீர்கள்" என்ற நமது மீட்பருடைய வார்த்தையினால் உறுதிப்படுத்தவும் பட்டுள்ளது. இருண்ட யுகங்களில் வாழ்ந்திட்டதான நம்முடைய முன்னோர்கள் ஒருவரையொருவர் கழுமரத்தில் கட்டி எரித்தார்கள் மற்றும் ஒருவரையொருவர் சித்திரவதைப் பண்ணினார்கள்; காரணம் தேவனுடைய குணலட்சணம் குறித்த அவர்களது தவறான புரிந்துகொள்ளுதலேயாகும். காரணம் அவர்களது கொள்கை மிகவும் கீழ்த்தரமானதாய்க் காணப்பட்டது. அவர்கள் உருவாக்கி, நமக்கும் கையளித்ததான விசுவாசப் பிரமாணங்களை உண்மையிலேயே நம்பினவர்களாக அவர்கள் காணப்பட்டனர்; அதாவது தற்காலத்தில் பரலோக நிலைக்கென்று கொஞ்சம் பரிசுத்தவான்களை மனுஷர் மத்தியிலிருந்து தேவன் கூட்டிச் சேர்த்துக்கொண்டிருக்கிறார் என்றும், மீதமானவர்களை - அதாவது ஆவியின்படி நடவாமல், மாம்சத்தின்படி நடக்கின்ற யாவரையும் - பேய்களின் கரங்களில் நித்திய காலத்திற்குமான சித்திரவதைக்கென்று தேவன் ஒப்புக்கொடுத்துவிடுவார் என்றும் அவர்கள் உண்மையிலேயே நம்பினவர்களாகக் காணப்பட்டனர்.

வேதாகமப் போதனைகளின் விஷயங்களில் இத்தகைய தவறான கருத்துக்களைத் தங்கள் மனதுக்கு முன்பாகக் கொண்டிருந்து, அந்தத் தவறான கருத்துக்களை அப்படியே பின்பற்றினவர்களாக மாத்திரம் காணப்பட்டனர். இருண்ட யுகங்களின் நியமங்களுக்கு அப்பால், நாகரிகமடைந்துள்ள மனிதர்கள் கடந்துவந்துள்ளார்கள் என்பது பாராட்டத்தகுந்த காரியமேயாகும். எனினும் தப்பறையினின்றுள்ள அவர்களது விடுதலையானது, அது கொண்டுவர வேண்டியதான ஆசீர்வாதங்கள் அனைத்தையும் அவர்களுக்குக் கொண்டுவரவில்லை என்பது வருத்தம் தரும் காரியமாகவே உள்ளது. இவர்கள் - வேதாகமத்தைப் புறக்கணிப்பதன் மூலமும், அதன் தவறிழைக்காத் தன்மையினை மறுதலிப்பதன் மூலமும், வேதாகமப் போதனைகளுக்கு முரண்பாடாய் உள்ள தங்கள் சொந்த கணிப்புகளையும், கருத்துக்களையும் ஏற்றுக்கொள்வதன் மூலமும் - உயர் நிலைகளைப் பெருமளவில் எட்டியுள்ளனர். வேதாகமம் திவ்விய ஏவுதலின்படியான தேவனுடைய வெளிப்படுத்தல் என்பதை இன்றுள்ள கிறிஸ்தவ மண்டலத்தின் உயர் சிந்தையுள்ள பெரும்பான்மையானவர்கள் மறுத்து, வேதாகமம் அறியாமையில் காணப்பட்ட நல்ல நோக்கமுடைய புருஷர்களின் படைப்பு மாத்திரமே என்று அவர்கள் கருதுவதும், வேதத்தை எழுதினவர்களைக்காட்டிலும் இன்றைய காலத்தின் இறையியல் வல்லுனர்கள் எல்லாவிதத்திலும் வல்லவர்களாகவும், வேதாகமத்தைவிட மேலான காரியங்களைத் தங்கள் சொந்தத்திலிருந்து எழுத வல்லவர்களாகவும் இருக்கின்றனர் என்று அவர்கள் கருதுவதும் எத்துணை வருத்தமான காரியமாக உள்ளது.

## தேவனுடைய சிங்காசனத்தின் ஆதாரம்

தேவனுடைய இராஜ்யத்திற்கு அல்லது சிங்காசனத்திற்கு நீதி ஆதாரமாய்க் காணப்படுகின்றது என்ற வேதாகமத்தின் கருத்தானது, தேவனுடைய குணலட்சணங்களின் ஒவ்வொரு அம்சத்திற்கும், நீதியுடன்கூடத் தொடர்பு இருக்கின்றது எனும் விதத்தில், நீதியின் முக்கியத்துவத்தினைக் குறித்த ஒரு புரிந்துகொள்ளுதலை மனதிற்குக் கொடுக்கின்றதாயிருக்கின்றது. "தயாளமாய் இருக்கிறதற்கு முன்னே முதலாவதாக நீதியாயிரு" என்பது மனுஷர் மத்தியில் காணப்படும் பழமொழியாகக் காணப்படுகின்றது மற்றும் இது தேவனுடைய குணலட்சணம் குறித்து வேதவாக்கியங்கள் தெரிவிக்கும் காரியங்களுக்கு முழு இசைவாகவே காணப்படுகின்றது. அவர் முதலாவது நீதியுள்ளவராகக் காணப்படுகின்றார் - நீதியில் குறைவுப்பட்ட நிலைமையில் அவர் எதிலும் காணப்படுகிறதில்லை. அவரது ஞானம், அவரது வல்லமை, அவரது அன்பு யாவும், நீதி எனும் இப்பண்புடன் இணங்கி மற்றும் இதனை ஆதாரமாய்க் கொண்டுசெயல்பட வேண்டும். இப்படியாகவே இந்தக் குணலட்சணத்தினைப் பின்பற்றுகிற யாவருடைய விஷயத்திலும் காணப்பட வேண்டும். அவர்களும் முதலாவதாக நீதியுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும். நீதி எனும் இந்த அம்சத்தினை எவ்வளவேனும் புறந்தள்ளின நிலையில், எந்தவொரு அஸ்திபாரத்தின் மீதும் கட்டியெழுப்பப்படுகின்றதான குணலட்சணமானது, தவறானதாக, தகாததாக, பாவமானதாகக் காணப்படும். தேவனுடைய சாயலிலும், ரூபத்திலும் படைக்கப்பட்ட முதல் மனுஷன் நீதியைத் தனது குணலட்சணத்திற்கான அஸ்திபாரமாகப் பெற்றிருந்திருக்க வேண்டும். முதல் மனிதனின் சந்ததியினர் யாவரும் இப்பண்பினைப் பல்வேறு அளவுகளில் பெற்றிருப்பினும், இன்னமும் அதைப் பெற்றிருக்கவே செய்கின்றனர். அதைத்தான் நாம் மனசாட்சியென்றும், நீதி நியாயம் என்றும் அழைப்பதுண்டு. சிலரிடம் இப்பண்பானது மிகவும் பலன்குன்றிக் காணப்படுவதினால் பாராட்டு விரும்புதல், முதலான மனதின் பலமான பண்புகளினால் எளிதில் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் காரணமாகத்தான் மனித மனங்களின் பலமான பண்புகள் யாவும் கட்டுப்படுத்தப்படுவதற்கும், அவர்களது மனசாட்சியினையும், நீதி நியாயம் குறித்த அவர்களது உணர்வுகளையும் ஊக்குவிப்பதற்கும் என்று சிறைச்சாலைகள் அவசியமாய் இருக்கின்றன. நீதியின் இந்தக் கொள்கைகளானது, ஆரம்பம் துவங்கி திவ்விய கொள்கைகளாகக் கருதப்பட்டும், மதிக்கப்பட்டும் வருகின்றன மற்றும் நாத்திகர்களைத் தவிர மற்றவர்களால் இதுவரையிலும் அப்படியாகவே கருதப்பட்டும் வருகின்றன.

## பொன்னான பிரமாணம் சபைக்கானதாகும்

பொன்னான பிரமாணம் அல்லது வேதவாக்கியங்களின் ஏதேனும் செய்தியானது மனுக்குலத்தின் உலகத்திற்காகக் கொடுக்கப்பட்டவை என்று அனுமானிப்பவர்கள் மாபெரும் தவறு செய்தவர்களாய் இருக்கின்றனர். இல்லை; அவை சபைக்கு மாத்திரமே உரியனவாகும் மற்றும் இதற்கான ஆதாரமானது நமது கர்த்தருடைய வார்த்தைகள் அவருடைய சீஷர்களுக்குப் பேசப்பட்டவையாய் இருக்கின்றன என்பதில் விளங்குகின்றன; இதுவுமல்லாமல் அப்போஸ்தலர்களின் நிருபங்கள்கூடப் பரிசுத்தவான்களுக்கென்றும், விசுவாச வீட்டாருக்கும் என்றும்தான் எழுதப்பட்டிருக்கின்றன எனும் காரியத்திலும் விளங்குகின்றன. மற்றவர்களால் அவற்றைச் சரியாகப் பார்க்க, புரிந்துகொள்ள, உணர்ந்துகொள்ள முடியாது. உலகப்பிரகாரமான மனதினால் "நேர்மையே சிறந்த கொள்கை" எனும் கூற்றினைப் புரிந்துகொள்ள முடியும் மற்றும் புரிந்துகொண்டிருக்கின்றனர். அதுவும் பல மாற்றங்களுக்குப் பிற்பாடே இப்படியாக இறுதியில் புரிந்திருக்கின்றனர்; ஆனாலும் இக்கூற்றினை ஒரு கொள்கையெனவும், ஜீவியத்திற்கான சட்டம் எனவும் ஏற்றுக்கொள்வதற்கு விரும்பும்விதத்தில், நம்முடைய ஆதார வசனத்தின் காரியத்தினை அவர்களால் புரிந்துகொள்ள முடியாது.

இந்தக் கருத்துக்கு இசைவாக நம்முடைய ஆதார வசனத்தின் முக்கியத்துவத்தினை - பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களுக்கு, கிறிஸ்து இயேசுவுக்குள் இழுக்கப்பட்டு, அழைக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்கு மற்றும் திவ்விய குணலட்சணத்தின் ஆதாரமாய் நீதி காணப்படுகின்றது என்று ஓரளவிற்குப் பார்த்தவர்களுக்கு மாத்திரமே வலியுறுத்த விரும்புகின்றோம். பொன்னான பிரமாணம் என்பது, கிறிஸ்தவனுடைய கடமை அனைத்தையும் உள்ளடக்கினதல்ல; இப்பிரமாணத்தினுடைய காரியங்களையும் தாண்டி அவன் நடத்தையிலும், குணலட்சணத்தின் வளர்ச்சியிலும் வளரவேண்டும் என்று அவனிடத்தில் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. அவன் இப்படிக் கூடுதலாய் வளர்ந்து முன்னேறுவது என்பது அன்பிலுள்ள அவனது வளர்ச்சியினைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். பொன்னான பிரமாணம் என்பது அளவுகோலில், அடிப்படையான/கீழ்த்தள/lowest standard அளவாகும் மற்றும் இது சபையிலும் உலகத்திலுமுள்ள மற்றவர்களுடனான நம்முடைய கையாளுதலுக்கான - நீதிக்கான அளவுகோலாகும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில், நம்முடைய ஆதார வசனமானது, மனுஷர்களுடைய சாதாரண காரியங்களுக்கு அப்பாற்பட்டதாயினும், அது கிறிஸ்துவினுடைய ஒவ்வொரு பின்னடியாராலும் ஒவ்வொரு நாளும் மற்றும் ஒவ்வொரு மணி நேரமும் பயன்படுத்தப்பட வேண்டும். "மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்." இந்தவொரு பிரமாணத்தினை நமது கர்த்தர் ஒரு சுவிசேஷநியமமாக மற்றும் அன்பின் நியமமாகக் கொடுக்கவில்லை என்பது, இதைக் கூறியதோடுகூட அவர், "இதுவே நியாயப்பிரமாணமும், தீர்க்கத்தரிசனங்களுமாம்" என்று கூறின வார்த்தைகளில் விளங்குகின்றது; அதாவது இதுவே நீதியினைச் செய்திட நாடிடும் யாவரிடமும் - நியாயப்பிரமாணமும், தீர்க்கத்தரிசனங்களும் எதிர்ப்பார்க்கின்றன என்ற விதத்தில் கூறினார்.

பொன்னான பிரமாணம் எனும் அளவுகோலைத் தாண்டி, மேலாய் நாம் அன்பில் அடையும் எந்தவொரு வளர்ச்சியும்தான், கிறிஸ்துவில் புதுச்சிருஷ்டிகளென உள்ள நம்முடைய வளர்ச்சியாய்க் காணப்படும். மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று நாம் எண்ணுகிறோமோ, அதையே நாமும் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டும் என்று நீதியானது எதிர்ப்பார்க்கின்றதாய் இருக்கின்றது. அன்போ: "நான் எந்தக் கோரிக்கையும் வைக்கிறதில்லை; ஆனால் திவ்விய அன்பின் நீளங்களையும், உயரங்களையும், ஆழங்களையும் உனக்குக் காண்பித்துத் தந்து, அதை நீ உணர்ந்துகொள்வதைக் காண்பதற்கும் மற்றும் உங்களுக்காகத் தம் ஜீவனையே தந்தவரான தேவனுடைய அன்பின் குமாரனுடைய சாயலாகிடுவதற்கு எப்படி நீ நாடுகின்றாய் என்பதைக் காண்பதற்கும் காத்திருப்பேன்" என்று கூறுகின்றதாய் இருக்கின்றது. சீஷனாய் இருப்பதற்கென்றும், கர்த்தருடைய அடிச்சுவடுகளில் நடப்பதற்கென்றும் அர்ப்பணம் பண்ணினவர்களிடம், "இயேசுவின் மாதிரிக்கேற்ப - நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாய் இருக்கிறோம்" என்று பரிசுத்த பவுல் அடிகளார் கூறுகின்றார்.

## அன்பானது பொல்லாங்குச் செய்யாது

கர்த்தருடைய ஜனங்கள் யாவரும் அவரையும், சகோதரர்களையும், தங்கள் சத்துருக்களையும்கூட அன்புகூர்ந்திட வேண்டும். எனினும் தற்போது அன்பைக்குறித்துப் பார்ப்பதை இத்தோடு நிறுத்திவிட்டு, நம்முடைய நடவடிக்கைகளின் விஷயத்தில் பொன்னான பிரமாணத்தின் எளிமையான நீதியானது எப்படிக் காணப்பட வேண்டும் என்பதை மாத்திரம் பார்த்திடலாம். முற்றிலும் அன்பிற்கு அப்பாற்பட்டதும், முற்றிலும் நீதி சம்பந்தப்பட்டதுமான இந்தப் பொன்னான பிரமாணத்திற்கு இசைவாக நம்முடைய அன்றாட ஜீவியங்கள் எப்படிக் காணப்படுகின்றன? ஒருவேளை நீங்கள் எஜமானராக இருப்பீர்களானால், இந்தப் பிரமாணத்திற்கு இசைவாக உங்களின் கீழ் வேலை

பார்ப்பவனை நடத்துகின்றீர்களா மற்றும் ஒருவேளை நீங்கள் வேலைக்காரனாகவும், அவன் எஜமானாகவும் இருந்திருந்தானானால், அவன் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்களோ, அதைத்தான் இப்போது நீங்கள் எஜமானாய் இருக்கையில், அவனுக்குச் செய்கின்றீர்களா?

நீங்கள் எஜமானாய்க் காணப்படுவீர்களானால், பின்வருமாறு உங்களிடத்திலேயே கேட்டுக்கொள்ளுங்கள்: "ஒருவேளை எங்கள் ஸ்தானம் மாறியிருந்து நான் வேலைக்காரனாகவும், அவன் எஜமானாகவும் இருந்திருந்தால், அவன் என்னையும், என் காரியத்தையும் எப்படிக் கையாள வேண்டும் என்று விரும்பியிருந்திருப்பேனோ, அப்படித்தான் நான் என் வேலைக்காரரையும், அவன் காரியங்களையும் கையாளுகின்றேனா? ஒருவேளை உங்கள் ஸ்தானங்கள் மாறியிருந்து, எப்படி உங்கள் கறிக்கடைக்காரனும், உங்கள் ரொட்டிக்கடைக்காரனும், உங்கள் காய்கறிக்கடைக்காரனும் உங்களைக் கையாள வேண்டும் என்று விரும்பியிருந்திருப்பீர்களோ, அப்படித்தான் உங்கள் கறிக்கடைக்காரனையும், உங்கள் ரொட்டிக்கடைக்காரனையும், உங்கள் காய்கறிக்கடைக்காரனையும் தாங்கள் கையாளுகின்றீர்களா? அவர்களிடத்தில் தாங்கள் மரியாதையாய் நடந்துகொள்ளுகின்றீர்களா மற்றும் அவர்களுக்குத் தேவையற்ற பிரச்சனை கொடுக்க விருப்பமற்றவர்களாய் இருக்கின்றீர்களா? அவர்களுக்கான பணத்தினை உடனடியாகக் கட்டிவிடுகின்றீர்களா? அல்லது தாங்கள் ஒருவேளை வாடிக்கையாளர் நிலைமையில் காணப்பட்டிருந்தால், உங்களை வியாபாரி எப்படி நடத்த வேண்டும் என்று விரும்புவீர்களோ, அப்படித்தான் நீங்கள் வியாபாரியாகக் காணப்படுகையில், உங்கள் வாடிக்கையாளர்களை நடத்துகின்றீர்களா?

அவர்களிடத்தில் நியாயமான விலையினைத்தான் தெரிவிக்கின்றீர்களா? அவர்களுக்குப் பொருட்களைச் சரியான எடை அளவில்தான் கொடுக்கின்றீர்களா? உங்களுக்கு நல்ல பொருட்கள் கொடுக்கப்பட வேண்டும் என்று நீங்கள் விரும்புவதுபோன்று, நீங்களும் உங்கள் வாடிக்கையாளர்களுக்கு நல்ல பொருட்களைக் கொடுக்கின்றீர்களா? நீங்கள் நல்ல ஓர் அயலானாய் இருக்கின்றீர்களா? உங்கள் பிள்ளைகள் மற்றவர்களுக்குத் தொந்தரவாய் இராதபடிக்குப் பார்த்துக் கொள்கின்றீர்களா? உங்கள் வீட்டுக் கோழிகள் உங்கள் அயலார்களின் தோட்டங்களை நாசமாக்காதபடிக்குப் பார்த்துக்கொள்கின்றீர்களா? உங்கள் வீட்டு நாய் ஆக்ரோஷமானதாய் இல்லாமலும், அதன் குரைப்புச் சத்தத்தினால் அயலார்களின் தூக்கத்திற்கு இடைஞ்சல் இல்லாமலும் பார்த்துக்கொள்கின்றீர்களா? சுருக்கமாய்ச் சொல்ல வேண்டுமெனில் பொன்னான பிரமாணத்தின்படி நீதியாய் உங்கள் அயலானை நடத்துகின்றீர்களா? அதாவது உங்கள் அயலான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புவீர்களோ, அதைத்தான் நீங்களும் உங்கள் அயலானுக்குச் செய்கின்றீர்களா? அடிக்கடி இக்கேள்வியினை உங்களிடத்தில் கேட்டுக்கொள்ளுங்கள்.

இப்பொழுது நாம் வீட்டின் காரியங்களுக்குத் திரும்பி, அவைகளைப் பொன்னான பிரமாணத்தின்படி அளவிட்டுப் பார்க்கலாம். புருஷர்களாகிய நீங்கள், உங்கள் மனைவிகளை எப்படி நடத்துகின்றீர்கள்? மனைவிகளாகிய நீங்கள், உங்கள் புருஷர்களை எப்படி நடத்துகின்றீர்கள்? ஒருவருக்கொருவர் உங்கள் வார்த்தைகளில், உங்கள் நடத்தைகளில், உங்கள் எதிர்ப்பார்ப்புகளில் பொன்னான பிரமாணத்தினைச் செயல்படுத்துகின்றீர்களா? இல்லையேல் மற்றவர் சகித்திருக்கும் மட்டும் அற்பத்தனமாய், சுயநலமாய் நடந்து, வாய்ப்பை உங்களுக்குச் சாதகமாய்ப் பயன்படுத்திக்கொள்கின்றீர்களா? பொன்னான பிரமாணத்தின்படித்தான் உங்கள் குழந்தைகளைக் கையாளுகின்றீர்களா? பெற்றோராய்ப் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமை குறித்ததான உங்களது மேலான கொள்கையின்படி செயல்பட்டு, ஒரு முன்மாதிரியான பெற்றோராய் நடந்துகொள்கின்றீர்களா? அவர்களைப் பயிற்றுவிக்கும் விஷயத்தில் உங்களுக்குப் பொறுப்புக்

காணப்படுகின்றது என்றும், சூழ்நிலைகள் அனுமதிப்பதற்கேற்ப, அவர்களுக்கு நல்ல சூழ்நிலைகளையும், மகிழ்ச்சியையும், கல்வியறிவையும் கொடுப்பதிலும், நல்வாழ்க்கையை அடைய ஆயத்தப்படுத்துவதிலும் உங்களுக்குப் பொறுப்புக் காணப்படுகின்றது என்றும் உங்களுக்கு ஞாபகம் இருக்கின்றதா? அல்லது அவர்களது நலனுக்கடுத்தவைகளில் தாங்கள் அலட்சியமானவர்களாய்க் காணப்படுகின்றீர்களா? உங்கள் பொறுப்புகளைக் குறித்து அலட்சியமாய்க் காணப்படுகின்றீர்களா? உங்கள் பிள்ளைகளுக்கு சில உரிமைகள் காணப்படுகின்றது என்றும், அவர்கள் முதிர்ச்சியடைகையில்/வளர்கையில் அவ்வுரிமைகளும் அதிகரிக்கின்றது என்றும் நீங்கள் கண்டுகொண்டுள்ளீர்களா? அல்லது இவைகளைக் குறித்து மறந்தவர்களாகவும், பிள்ளைகளைக் குழந்தைப் பருவத்தில் வைத்திருந்தது போன்று கட்டுப்பாட்டில் வைப்பதற்கு முற்பட்டு, அவர்கள் தங்களுக்கு அநீதி செய்யப்படுகின்றது என்று கோபம் கொண்டு, குடும்பப்பிரச்சனை உண்டாகும் அளவுக்கு அவர்களது பண்புகளைக் கடுகடுப்பானவைகளாக்கி, அவர்களை மகிழ்ச்சியற்றவர்களாக்குகின்றீர்களா? ஒருவேளை நீங்கள் பிள்ளைகளானால், நீங்கள் உங்கள் பெற்றோரைக் குறித்தும், அவர்களுடைய நலனுக்கடுத்தவைகளைக் குறித்தும், அவர்களுடைய விருப்பங்கள் குறித்தும், அவர்களது மகிழ்ச்சிக் குறித்தும் சிந்திக்கின்றீகளா? உங்கள் பிள்ளைகள் உங்களிடத்தில் கரிசனையாய் இருக்க வேண்டும் என்று விரும்புவதுபோன்று, உங்கள் பெற்றோர்கள் விஷயத்தில் கரிசனையாய் இருக்கின்றீர்களா? நீங்கள் சிறுபிள்ளையாய் இருக்கையில், உங்களுக்காக உங்கள் பெற்றோர்கள் பாடுபட்ட, கஷ்டபட்ட, பெலவீனப்பட்ட அந்த மணி நேரங்களையும், வாரங்களையும் நினைவில் வைத்திருக்கின்றீர்களா? மேலும் அந்த அன்பிற்குக் கைமாறு செய்ய நாடிக்கொண்டிருக்கின்றீர்களா? மற்றும் அவர்களது கடைசி நாட்களை, அவர்களது ஜீவியங்களிலேயே உள்ள சந்தோஷமான நாட்களாக்குகின்றீர்களா? உங்கள் பெற்றோர்கள் விஷயத்தில் பொன்னான பிரமாணத்தினைக் கடைப்பிடிக்கின்றீர்களா? உங்கள் உடன்பிறந்த சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் விஷயத்தில் அதைக் கடைபிடிக்கின்றீர்களா? அவர்கள் உங்கள் பொருள்களைக் கடனாக வாங்கிச் சென்று திருப்பித்தராதபோது, நீங்கள் அவர்களது பொருட்களைக் கடனாக வாங்கிச் சென்று திருப்பிக்கொடுக்காமல் பழித்தீர்த்துக்கொண்டு, குடும்பத்தில் தொடர்ந்து, அமைதியின்மையினை உண்டுபண்ணிக்கொண்டிருக்கின்றீர்களா? அல்லது நீங்கள் நீதியின் பொன்னான பிரமாணத்தினைக் கடைப்பிடித்து, உங்களுக்கோ அல்லது உங்கள் உடைமைகளுக்கோ எவைகள் செய்யப்படக்கூடாது என்று நீங்கள் விரும்புகின்றீர்களோ, அதை நீங்கள் உங்கள் உடன்பிறந்த சகோதரனுக்கும், சகோதரிக்கும் அல்லது அவர்களது உடைமைகளுக்கும் செய்யாமல் இருக்கின்றீர்களா?

## சபையில் பொன்னான பிரமாணம்

சபையின் தலையானவரால் கொடுக்கப்பட்ட பொன்னான பிரமாணத்தினை, சபையில் நிச்சயமாகவே நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். ஒருவேளை நீங்கள் உங்கள் சொந்தக் குடும்பத்தாரிடத்திலும், உங்கள் தொழிலில் கூடவேலைபார்ப்பவர்களிடத்திலும் அநீதியாய் நடந்துகொள்வீர்களானால், "கிறிஸ்துவின் சரீரமாகிய சபையாரிடத்திலுமான" உங்களது நடக்கைகளிலும்கூட நீங்கள் அநீதி செய்பவர்களாகவே காணப்படுவீர்கள். சிறிய காரியங்களில் அநீதியாய்ச் செயல்படுபவன், பெரிய காரியங்களிலும் அநீதியாகவே செயல்படுவான். சிறிய காரியங்களில் உண்மையுடன் காணப்படுபவன், பெரிய காரியங்களிலும் உண்மையுடன் காணப்படுவான். தன்னோடு தொடர்புக்குள் வருபவர்களிடத்தில் வாரத்தின் ஆறு நாட்களிலும் பொன்னான பிரமாணத்தினைக் கடைப்பிடிப்பவன், நிச்சயமாகவே ஏழாம் நாளிலும் உண்மையுடன் காணப்படுவான்; ஆனாலும் வாரத்தில் ஒருநாள் மாத்திரம் பொன்னான பிரமாணத்திற்கு உண்மையாய் இருப்பவன், ஒருபோதும் திவ்விய அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்ளமாட்டான்.

ஒருவகையான விசுவாசப் பிரமாணத்தினைப் பெற்றிருக்கும் சபையின் பெயரை நான் எனக்குத் தரித்திருக்கிறேனெனில், நான் உண்மையிலேயே அந்த விசுவாசப்பிரமாணத்தினை நம்புகின்றேனா மற்றும் அதை ஒப்புக்கொள்கின்றேனா மற்றும் அதை ஆதரிக்கின்றேனா? அல்லது ஏதேனும் விதத்தில் அதற்கு முரண்பாடாய் ஜீவிக்கின்றேனா? அது என்னைத் தவறாய் அடையாளம் காண்பிக்கின்றதா அல்லது நான் அதைத் தவறாய் அடையாளம் காண்பிக்கின்றேனா? என் உடன் சகோதரர்களும், சபையின் தலையாகிய கர்த்தரும் எனக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புவேனோ, அதைத்தான் அவர்களுக்கும் நான் செய்கின்றேனா? ஒருவேளை இப்படி இல்லையெனில் என்னுடைய நடக்கைகளை, நான் பொன்னான பிரமாணத்திற்கு இசைவாக்கிட வேண்டும். நான் கர்த்தருக்கும், என் சகோதரருக்கும், எனக்கும் உண்மையாய்க் காணப்பட வேண்டும் மற்றும் எந்த மாய்மாலமும் பண்ணிடக்கூடாது. சகோதர சகோதரிகள் யாவரையும் நான் அப்போஸ்தலன் கூறுவதுபோன்று "மாய்மாலமில்லாமலும், பட்சபாதமில்லாமலும்" நடத்துகின்றேனா? அல்லது சிலரை மாத்திரம் விசேஷமாய்க் கவனித்தும், ஏழைகளாகவும், அதிகம் கல்வியறிவு இல்லாதவர்களாகவும், என்னுடைய உதவி அதிகமாய்த் தேவைப்படும் நிலையிலுள்ளவர்களாகவும் காணப்படுபவர்களில் சிலரைப் புறக்கணிக்கின்றேனா? சகோதர சகோதரிகள் எனக்கு என்ன செய்ய வேண்டும் என்று நான் விரும்புவதை, அவர்களுக்கும் ஒரு சகோதரனாக நான் செய்கின்றேனா? ஒரு மேய்ப்பனாக நான் சகோதர சகோதரிகளுடைய நலனுக்கடுத்த காரியங்களில் கவனம் செலுத்துகின்றேனா? நான் அவர்களுடைய சுயாதீனங்களுக்காய்க் கவனம் கொடுக்கின்றேனா? நான் பெற்றுக்கொள்ளும் சத்திய அறிவு யாவற்றையும் இலவசமாய் அவர்களுக்கும் பகிர்ந்தளிக்க நாடுகின்றேனா அல்லது அவர்களை ஏமாற்றவும், அவர்களை அறியாமையிலேயே வைக்கவும், அவர்களை அடக்கிவைக்கவும் முயற்சிக்கின்றேனா? சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில் ஒருவேளை ஓர் உடன் மேய்ப்பனின் கீழ்க் காணப்படும் கர்த்தருடைய ஆடுகளில் ஒருவனாக நான் காணப்பட்டிருந்தால், அந்த உடன்மேய்ப்பன் எனக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புவேனோ, அதைத்தான் நான் ஓர் உடன் மேய்ப்பனாகக் காணப்படுகையில், கர்த்தருடைய ஆடுகளுக்குச் செய்கின்றேனா? அல்லது ஒருவேளை நான் மேய்ப்பனாக இருந்திருந்தால், கர்த்தருடைய ஜனங்கள் எனக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்பியிருப்பேனோ, அதைத்தான் நானும் கர்த்தருடைய ஆடுகளில் ஒருவனாகக் காணப்படுகையில், மேய்ப்பனுக்கு உதவவும், வார்த்தையிலும், கிரியையிலும் ஊக்குவிக்கவும் நாடுகின்றேனா?

**OV 369, 370**

கிறிஸ்தவ தொழிலதிபர் (business man) என்பவன், சிலவிதங்களில் அவனது அயலானால் கவனித்துப் பின்பற்றப்படுகின்றான். ஆனால் இது விஷயத்தில் அவன் பொறுப்பே மிகவும் கவனிக்கத்தக்கதாகும். ஒரு தொழிலதிபருக்கான கொள்கை, பொன்னான பிரமாணமாகும். "ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (மத்தேயு 7:12) என்பது அவன் வாங்குகிற காரியத்திற்கும், அவன் விற்கிற காரியத்திற்கும், அவனது தொழிலாளர்கள் மற்றும் அவனது வாடிக்கையாளர்களுடனான அவனது நடவடிக்கைக் காரியத்திற்கும் பொருந்தும். இது அவன் விளம்பரம் இடும் காரியங்களையும், தன் தொழிலாளர்கள் முன் அவன் வைக்கும் கொள்கை காரியங்களையும் உள்ளடக்கும்.

பொன்னான பிரமாணமானது பொது ஜனங்களால் அதிகமதிகமாய் உணரப்பட்டு வருகின்றது என்றும், அதைக் கைக்கொள்பவர்கள் அதிகமதிகமாய் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்றும் நாங்கள் நம்புகின்றோம். இது வேறு பிரமாணத்தைக் கைக்கொள்ளும் அவர்களது அயலார்களைக்காட்டிலும், அவர்களை ஐசுவரியவான்களாக்கிடும் என்று நாங்கள் சொல்லவில்லை. "உங்கள் அயலான் உங்களுக்கு என்ன செய்வான் என்று நீங்கள் நம்புகின்றீர்களோ, அதையே நீங்கள் உங்கள் அயலானுக்குச்

செய்யுங்கள்; ஆனால் அவன் செய்வதற்கு முன்னதாக நீங்கள் செய்யுங்கள்" என்பதே மற்றவர்களுடைய பிரமாணத்தின் வார்த்தைகளாய் இருக்கின்றது. ஆனால் பொன்னான பிரமாணத்தினைக் கைக்கொள்வதினால் ஐசுவரியம் வருகின்றதோ, இல்லையோ தனது இருதயத்தைக் கர்த்தருக்குக் கொடுத்துவிட்டு, தேவனுடைய புத்திரனாகியுள்ள தொழிலதிபர், பொன்னான பிரமாணத்தினைக் கைக்கொள்ள வேண்டும். அவன் இதற்கும் அதிகமாய் அன்பின் அடிப்படையில் செய்யச் சிலாக்கியம் பெற்றிருப்பினும், இதற்குக் குறைவாய் அவன் செய்யக்கூடாது.

இக்கொள்கையானது அவனது தொழில்முறைமையை மாத்திரமல்லாமல், அவன் விற்கும் பொருட்களின் அம்சத்தினையும்கூட உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது. கிறிஸ்தவ தொழிலதிபரின் கடையில் குப்பையான மற்றும் பாதகமான பொருட்கள் காணப்படக்கூடாது.

பொன்னான பிரமாணத்திற்குக் குறைவான எதையும், எந்தவொரு சந்தர்ப்பங்களிலும் செய்யக்கூடாது என்று உண்மை கிறிஸ்தவன் நினைவில்கொள்ள வேண்டும். தனது பிள்ளைகள், தனது கோழிகள், தனது நாய்கள் முதலானவைகள், தனது அயலானுக்குரிய உரிமைகளில் தலையிடாதபடிக்குப் பார்த்துக்கொள்ள வேண்டும். தான் ஒருவேளை கஷ்டத்திலிருந்தால், அப்போது தன் அயலான் தனக்குச் செய்வதை, தானும் கஷ்டத்திலிருக்கும் அயலானுக்குச் செய்திட வேண்டும் என்று அதே பொன்னான பிரமாணம் எதிர்ப்பார்க்கின்றதாய் இருக்கின்றது. "நன்மை செய்யுங்கள், கடன்கொடுங்கள் மற்றும் பிரதிபலன் எதிர்ப்பார்க்காதிருங்கள்" என்பது கிறிஸ்தவனில் மாதிரியாக்கப்பட வேண்டும்; அதுவும் தன் நாணயத்தைக் கெடுக்கிறதும், தன் சொந்தக் குடும்பத்திற்கான கடமைகளில் கடுமையாய்க் குறுக்கிடுகிறதுமான விதத்தில், தான் கடன்கொடுக்கக்கூடாது எனும் புரிந்துகொள்ளுதலுடன் செய்யப்பட வேண்டும். இன்னுமாகத் தேவையான சந்தர்ப்பங்களின்போதே கடன்கொடுக்கப்பட வேண்டும். அயலான் பிரதிபலன் செய்வான் என்பதற்காக ஒருவன் அயலானாய்ச் செயல்படாமல், மாறாக தேவனுடைய வார்த்தையிலிருந்து அயலானாய்ச் செயல்படுவதற்குரிய உயரிய கொள்கைகளைப் பெற்றிருப்பதினாலும், தெய்வீக எதிர்ப்பார்ப்பிற்கு இசைவாக ஜீவிப்பதற்கும், யாவருக்கும் நன்மை செய்யவும், விசேஷமாக விசுவாச வீட்டாருக்கு நன்மை செய்ய நாடுவதற்கும் விரும்புவதினாலும் ஒருவன் அயலானாய்ச் செயல்பட வேண்டும். நம் நாட்களில் பொதுவாய்க் காணப்படும் சமுக காரியங்களின் விஷயங்கள் சிலவற்றிற்குச் செலவழிப்பதற்கென்று கிறிஸ்தவனுக்கு நேரம் கிடையாது. அவன் இராஜாதி இராஜாவும், கர்த்தாதி கர்த்தருமானவருக்குப் பிரதிநிதியும், ஸ்தானாபதியும் ஆவான்.

---

## HARVEST GLEANINGS, VOL-2

**2HG 590**

என் அயலகத்தார்கள், நண்பர்கள் மற்றும் சபையிலுள்ள சகோதரர்கள் விஷயத்தில் என் நாவினையும், என் மூளையினையும் பயன்படுத்தும் காரணத்தினால், என் நாவு மற்றும் மூளையின் விஷயத்தில் நான் பொன்னான பிரமாணத்தினைப் பிரயோகிக்கின்றேனா? நான் மற்றவர்களைக் குறித்துக் கிருபையாக அல்லது அற்பமாகச் சிந்திக்கின்றேனா? அவர்கள் விஷயத்தில் அவர்கள் நேர்மையற்றவர்கள், கீழ்த்தரமானவர்கள் அல்லது தூய்மையற்றவர்கள் என்று நான் எப்போதும் கற்பனை பண்ணிக்கொள்கின்றேனா? அவர்களும் என்னைக் குறித்து இப்படியாகக் கற்பனை பண்ணுவதை நான் விரும்புவேனா? இப்படியாக கற்பனைபண்ணும் தன்மையினைக் கொண்டிருக்கும் ஒருவன், அவன் வேதவாக்கியங்களின்படி "தன் இருதயத்தில் அக்கிரமத்தை" குடிக்கொள்ளச் செய்திருக்கின்றான் என்று தெரிந்திருக்கக்கடவன். இத்தகைய எண்ணங்களானவை சீரிய மனங்களுக்குப் பாத்திரமற்றவைகளென எதிர்க்கப்பட வேண்டும் மற்றும் இவ்வெண்ணங்களுக்குப் பதிலாக மற்றவர்கள் விஷயத்தில் இரக்கமான,

தயவான, பெருந்தன்மையான உணர்வுகளை வளர்த்திட வேண்டும். நாவின் காரியம் எப்படியாக இருக்கின்றது? "ஒருவனையும் தூஷியாமலும்" எனும் வேதவாக்கிய விதியினை எப்போதும் கைக்கொள்ளுகிறோமா? அல்லது மற்றவர்கள் குறித்து நாம் அறிந்திருப்பவைகளை அல்லது மற்றவர்களின் மதிப்பைக் குறைத்துவிடும் விதத்தில் நாம் கேள்விப்பட்டவைகளை மற்றவர்களிடத்தில் புறங்கூறி திரிவதில் இன்பம் காணும் அற்பமான தன்மையினை உடையவர்களாக நம்மையே காண்கின்றோமா? இப்படியாக அல்லது பொன்னான பிரமாணத்திற்கு எதிராக இப்படி நமக்கு மற்றவர்கள் செய்ய நாம் விரும்புவோமா?

பேசும் காரியம் உண்மையாக இருப்பினும் அல்லது இல்லாவிட்டாலும், இரக்கமற்ற அல்லது தயவற்ற காரியங்கள் ஏதோ ஒன்றை நாம் பேசிடும் விஷயத்தில், அப்படிப் பேசுவதை நியாயப்படுத்த முற்படுபவர்களாக நம்மையே நாம் காண்கின்றோமா? இப்படிச் செய்துவருகிறோமானால், இது பொன்னான பிரமாணத்திற்கு முற்றிலும் எதிரானதென நாம் அடையாளம் கண்டுகொள்கின்றோமா? மேலும் பொன்னான பிரமாணத்திற்கு முரணானவைகளைச் செய்திருக்கிறோம் என்று நாம் அடையாளம் கண்டிருக்கும் விஷயங்களை நியாயப்படுத்திடுவதற்கான நம்முடைய பிரயாசம் என்பது, நம்மைநாம் வஞ்சித்துக்கொள்ள முற்படுவதாக மாத்திரமே இருக்கின்றது என்றும், நமது கர்த்தரை ஏமாற்றிட முடியாது என்றும் நாம் காண்கின்றோமா? "மோசம் போகாதிருங்கள், தேவன் நம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்." நீதியானவைகளைச் செய்கிறவன் நீதிமானாயிருக்கிறான். பொன்னான பிரமாணத்தினைக் கைக்கொள்ளுகிறவன் நீதிமானாவான். பாசாங்குப் பண்ணி பொன்னான பிரமாணத்தினை மீறுகிறவன், புறம்பே அவன் தன்னை நீதிமானாக என்னதான் அறிக்கைப் பண்ணியிருந்தாலும், அவன் இருதயத்தில் அநீதி இருப்பதை வெளிப்படுத்துகிறவனாய் இருப்பான்.

இது விஷயத்தில் "இருதயத்தின் நிறைவினாலே வாய்பேசும்" எனும் வேதவாக்கியத்தினை நாம் மறந்துவிட வேண்டாம். ஆகையால் ஒருவேளை புறங்கூறுகிறவர்களாக அல்லது ஏதேனும் விதத்தில் பாதகம் பண்ணுகிறவர்களாக அல்லது ஒருவருக்குப் பாதகம் பண்ணும் அல்லது அவரைக் குறித்துப் புறங்கூறும் காரியத்தில் நியாயப்படுத்த முற்படுபவர்களாக நம்மை நாம் காண்போமானால், இது இன்னலுக்கான அறிகுறியாக இருந்து, மனதின் சீர்க்கேட்டினை, அநீதியினை, அநியாயத்தினைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். மேற்கூறப்பட்டுள்ள விஷயங்கள் எவற்றிலாவது, நமது எண்ணங்கள் அல்லது வார்த்தைகள் அல்லது கிரியைகள் விஷயத்தில் அநீதி நம்மிடத்தில் காணப்படுமானால், இது ஆண்டவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும்படிக்கு வந்துள்ள, நாம் மனவேதனை அடைவதற்கு ஏதுவானவையாகும். இது அபாய மணியாகும்! இந்நிலைமையானது சரி செய்யப்படவில்லை எனில், இது இன்னும் மோசமான நிலைமைக்கு, இன்னும் அவபக்திக்கு நேராய் நம்மை வழிநடத்தி, சுபாவத்தின்படியோ அல்லது கிருபையின்படியோ நாம் பெற்றிருக்கும் எதுவும் மாசுப்பட்டு, மாறுபாடானதாகி சீரழிந்துபோய், மதிப்பற்றதாகிவிடும் மற்றும் "அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்தவும்" மற்றும் கிறிஸ்துவோடுகூட அவரது இராஜ்யத்தில் உடன்சுதந்தரராகும் நிலைக்கு வருகிறதற்கும் தவறிப்போகிறவர்களில் ஒருவராக நிச்சயமாய் நாம் ஆகிவிடுவோம்.

முன்குறிக்கப்பட்டவர்களாகிய தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் யாவரும் தேவனுடைய நேசகுமாரனுடைய குணலட்சணத்தின் சாயலில் ஒத்திருக்க வேண்டும் அல்லவா? நமது ஆண்டவர் யாவரிடத்திலும் நீதியோடு காணப்பட்டது மாத்திரமல்லாமல், அன்பானவராகவும், சுயத்தைப் பலிசெலுத்தினவராகவும் காணப்பட்டார் அல்லவா? ஆகையால் "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாபோன்று இருங்கள்" எனும் பொன்னான பிரமாணத்தினுடைய வார்த்தைகளை நாம் மறந்துவிட வேண்டாம். ஒருவேளை இந்தப் பிரம்மாண்டமான நியமத்திற்கு இசைவாய் முழுவதுமாய் நம்மால்

வாழமுடியாவிட்டாலும், அதை நம் இருதயங்களிலாகிலும் அங்கீகரித்து, முடிந்தமட்டும் சிந்தனையிலும், வார்த்தைகளிலும், கிரியைகளிலும் அதற்கு இசைவாய் நெருக்கமாகக் காணப்படுவோமாக!

**2HG 765**

நம்முடைய சக மனிதர்களை நாம் கையாளும் விஷயம் அனைத்திலும், நீதி அவசியமென்பது பகுத்தறிவுள்ள மனங்கள் யாவருக்கும் ஏற்புடையதாயிருக்கும். அது தேவனுடைய நியாயப்பிரமாணம் முழுவதையும் உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது. அந்த நியாயப்பிரமாணத்தின் சுருக்கமாய்க் காணப்பட்டு, நமது கர்த்தரின் அங்கீகரிப்பைப் பெற்ற அந்த வார்த்தைகள், "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச்சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" (லூக்கா 10:27) என்பதேயாகும். இந்த இரண்டு கோரிக்கைகளிலும் நியாயப்பிரமாணமும், தீர்க்கத்தரிசிகளும் முழுமையாய் உள்ளடங்குகிறது. முதலாவதாக நமது சிருஷ்டிகரை நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்; நமக்கு ஜீவனையும், அதன் ஆசீர்வாதங்கள் யாவையும் கொடுத்தவரை நாம் மகிமைப்படுத்திட வேண்டும்; நமக்கும், மற்றவர்களுக்கும் மகிழ்ச்சியினை உண்டுபண்ணும் அவரது நீதியான கோரிக்கைகளுக்கு நாம் கீழ்ப்படிதல் உள்ளவர்களாய் இருக்க வேண்டும். மற்றவர்கள் நம் உரிமைகளை அடையாளம் கண்டுகொள்ள வேண்டுமென நாம் விரும்புவது போன்று, நாம் மற்றவர்களுடைய உரிமைகளையும் அடையாளம் கண்டுகொள்வது சரியே. பொன்னான பிரமாணம் என்பது வெறும் நீதியே ஆகும். "நியாயஞ்செய்யுங்கள்" எனும் நமது ஆதார வசனத்தில் இடம்பெறும் வார்த்தை முன்வைக்கும் காரியங்களுக்குக் குறைவானதைச் செய்யும்படிக்கு நாம் கொஞ்சம்கூட அனுமதிக்கப்படுகிறதில்லை. வாருங்கள் சேர்ந்து காரியங்களை நிதானித்துப்பார்க்கலாம். நம்மில் எத்தனை பேர்கள் ஜீவியத்தின் காரியங்கள் அனைத்திலும், நமது தேவன் மற்றும் நமது அயலார்கள் விஷயத்தில் - நீதி செய்திருக்கின்றோம்?

குடும்பத்திலிருந்து துவங்கலாம். ஒவ்வொருவனும் தன் பெற்றோர்களிடத்தில், தன் குழந்தைகளிடத்தில், தன் சகோதரரிடத்தில், தன் சகோதரிகளிடத்தில், தன் கணவனிடத்தில், தன் மனைவியினிடத்தில் தன்னால் பேசப்பட்ட வார்த்தைகளையும், தன்னால் செய்யப்பட்ட கிரியைகளையும் ஆராய்ந்துபார்ப்பானாக. ஜீவியத்தில் நமது உறவுகள் அனைவரின் விஷயத்திலும், இப்படி நமக்கு மிக நெருக்கமானவர்களாகவும், மிக அருமையானவர்களாகவும் காணப்படுபவர்களை நாம் நீதியினுடைய கொள்கைகளுக்கு ஏற்ப, பொன்னான பிரமாணத்திற்கு ஏற்ப நடத்துகின்றோமா? அவர்கள் நமக்குச் செய்ய வேண்டுமென்று நாம் விரும்புபவைகளை, நாம் அவர்களுக்கும் செய்கின்றோமா? ஒருவேளை இல்லையெனில், கர்த்தரோடு உறவுகொள்ள துவங்கின பிற்பாடு, அவருக்குக் கனத்தைக் கொடுக்கவும், அவருக்குக் கீழ்ப்படியவும் நாடினபிற்பாடு, குடும்பத்திலும், ஜீவிதத்திலும் உள்ள ஒவ்வொரு வார்த்தைகளையும், ஒவ்வொரு கிரியைகளையும் நாம் கூர்ந்து கவனிப்போமாக மற்றும் எந்தளவுக்கு அவைகள் சரிசெய்யப்படலாம் மற்றும் நீதியாய்க் காணப்படத்தக்கதாகக் கொண்டுவரப்படலாம் என்று பார்ப்போமாக. பெரும்பான்மையான ஜனங்கள் மாம்ச உறவுகளில் மிகவும் நெருக்கமானவர்களிடத்திலும், அருமையானவர்களிடத்திலும் தாங்கள் எவ்வளவு அநீதியாய் நடந்திருக்கின்றனர் என்று கண்டுபிடிக்கும் போது அதிர்ச்சியடைவார்கள் என்பதில் உறுதியே.

இதோடுகூட உங்கள் அயலார்களின் விஷயங்களில், உங்கள் கூட்டாளிகளின் விஷயங்களில் அன்றாட ஜீவியத்தில் உங்கள் வார்த்தைகள் மற்றும் கிரியைகள் நீதியாய் அல்லது அநீதியாய் இருந்துள்ளதாவெனக் கவனியுங்கள். ஒருவேளை அவர்கள் உங்கள் ஸ்தானத்திலும், நீங்கள் அவர்கள் ஸ்தானத்திலும் இருந்திருந்தால், அவர்கள் பேசியிருப்பது சரி என்று ஒருவேளை உங்களால்

அங்கீகரிக்கப்படக்கூடிய அதே வார்த்தைகளை, அதே தொனியில் மற்றும் பாவனையில், நீங்கள் அவர்களிடம் பேசுகின்றீர்களா? தொழில் விஷயத்தில் மற்றவர்கள் உங்களிடம் செய்திட்ட எந்தளவுக்கான பேரம் நீதியானது என்று உங்களால் கருதப்படுமோ, அந்தப் பேரத்தைத்தான் நீங்கள் அவர்களிடம் பண்ணுகின்றீர்களா? இல்லையேல் ஒருவேளை நீங்கள் பொருள் வாங்குபவராகவும், அவர்கள் பொருள் விற்பவராகவும் இருந்தால், பொருட்கள் மற்றும் வேலைகளுக்குமான நீதியான கூலியென்று அவர்கள் கேட்க வேண்டுமென உங்களால் கருதப்படும் கூலியினைத்தான் நீங்கள் அவர்களிடத்தில் கேட்கின்றீர்களா அல்லது அதிகமான விலையினைச் சொல்கின்றீர்களா? ஒருவேளை உங்களுக்குத் தோட்டம் ஒன்றிந்தால், அதில் அயலானின் கோழி வந்து நாசம் செய்யாதபடிக்கு அவன் கவனமாயிருக்க வேண்டுமென்று நீங்கள் விரும்புவதுபோன்று, நீங்களும் உங்கள் கோழிகள் உங்கள் அயலானின் தோட்டத்தில் நாசம் செய்யாதபடிக்குக் கவனமாய்க் கவனித்துக்கொள்கின்றீர்களா? உங்கள் அயலான் உங்கள் முகத்தின் முன் புகையினை ஊதக்கூடாது என்று நீங்கள் விரும்புவது போன்று, நீங்களும் அயலானின் முகத்தில் புகை ஊதவே கூடாது என்றிருக்கின்றீர்களா? உங்கள் இல்லத்தில் அயலான் பிரவேசிக்கையில், அவன் காலைத் துடைத்துக்கொண்டு வரவேண்டும் என்று நீங்கள் விரும்புவது போன்று, நீங்களும் அயலானின் இல்லத்தில் பிரவேசிக்கையில் காலைத் துடைத்துக் கொண்டு செல்கின்றீர்களா? சகல மனுஷர்களையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும் மற்றும் விலங்குகளையும் அன்பாயும், கனிவாயும் நடத்துகின்றீர்களா? அதாவது அவர்கள் உங்கள் ஸ்தானத்திலும், நீங்கள் அவர்கள் ஸ்தானத்திலும் இருந்தால், அவர்கள் எப்படி உங்களை நடத்துவது நீதியாய், நியாயமாய் இருக்குமென நீங்கள் கருதிடும் தகுதியான விதங்களில், அவர்களை நீங்களும் நடத்துகின்றீர்களா? உங்கள் அயலான் உங்களைக் குறித்து இரக்கமாய்ப் பேசவேண்டும் என்று நீங்கள் விரும்புவது போன்று, நீங்களும் உங்கள் அயலானைக்குறித்து இரக்கமாய்ப் பேசுகின்றீர்களா? அல்லது உங்கள் குறைகளைக் குறித்து அயலான் ஏளனமாய்ப் பேசக்கூடாது என்று நீங்கள் விரும்புவது போன்று, நீங்களும் உங்கள் அயலானின் குறைவுகளைக் குறித்து ஏளனமாய்ப் பேசாமல் இருக்கின்றீர்களா? ஒருவேளை நீங்கள் உங்களது அயலானின் ஸ்தானத்திலும், அயலான் உங்கள் ஸ்தானத்திலும் காணப்பட்டிருந்தால், உங்களைக் குறித்து அயலான் எக்காரியங்களைப் பேசுவது தகுதியானது என்று நீங்கள் கருதுவீர்களோ, அக்காரியங்களையே உங்கள் அயலானின் விஷயத்திலும் நீங்கள் பேசத்தக்கதாக உங்கள் நாவுகளின் மீது கவனமாய் இருக்கின்றீர்களா?

---

## HARVEST GLEANINGS, VOL-3

### 3HG 661, 662

நாம் கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்திற்குள் வந்து, அவரால் கற்பிக்கப்பட வேண்டும் மற்றும் கீழ்ப்படிதலின் வாயிலாக அதிகமதிகமாய்த் தேவனுடைய அருமையான குமாரனின் சாயலை அடைய வேண்டும். உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்வீர்களாக. உள்ளதை உள்ளதென்று சொல்லுங்கள். தேவனை அல்லது மனுஷனை ஏமாற்றப்பார்க்காதீர்கள். உண்மையானவைகளையே பேசுங்கள். நாம் எப்படி நடந்துகொள்வது? பொன்னான பிரமாணத்தின்படியாகும். மற்றவர்கள் உங்களுக்குச் செய்ய வேண்டுமென்று விரும்புபவைகளை நீங்கள் மற்றவர்களுக்குச் செய்யுங்கள். கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள அநேகர் தங்களை இந்த விலையேறப்பெற்ற கற்களினால்/காரியங்களின் மீதாகக் கட்டியெழுப்பிக்கொள்ளவில்லை. பொன்னான பிரமாணத்திற்குப் பதிலாக உங்கள் கட்டிடத்தில் மரத்துண்டுகள் இருக்குமானால், அவை வெந்துபோகும். நம்முடைய

குடும்பங்களை, நமது அயலார்களை, இறைச்சி வெட்டுபவர்களை, ரொட்டி சுடுபவர்களை, அனைவரையும் கையாளும் விஷயத்தில் இந்தப் பொன்னான பிரமாணத்தினை நாம் பயன்படுத்திட வேண்டும். இப்பிரமாணத்தினை அனைத்து விஷயங்களிலும் பயன்படுத்திடுங்கள். ஜீவியத்தில் உங்கள் நடக்கையினை இப்பிரமாணம் கொண்டு அளந்து பாருங்கள். நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று நீங்கள் விரும்புவீர்களோ, அதற்கு மாறானதை அல்ல, மாறாக அதையே நீங்கள் எனக்குச் செய்யும்படிக்குப் பார்த்துக்கொள்ளுங்கள். நீங்கள் எனக்கல்ல, உங்களுக்கே பொறுப்பாளிகளாக இருக்கின்றீர்கள். இங்கே பொன்னான பிரமாணம் கடந்துவருகின்றதாய் இருக்கின்றது. அது திவ்விய பிரமாணத்தினை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இதற்குக் குறைவான எதுவும் தேவனைத் திருப்திப்படுத்துகிறதாய் இருப்பதில்லை. நீங்கள் பொன்னான பிரமாணத்தின்படி ஜீவியாமல் இருந்தால், நீங்கள் கர்த்தரால் அங்கீகரிக்கப்படுபவர்களாகவும், அவரைப் பிரியப்படுத்துகிறவர்களாகவும் காணப்படுவதாகச் சொல்லிக்கொள்ள வேண்டாம். அது ஒவ்வொரு நாளும் பயன்படுத்தப்பட வேண்டும். பரிசுத்தவானாகிய யோவான் ஆலயத்தைப் பொற்கோலினால் அளக்கும்படிக்குச் சொல்லப்படுகின்றார். ஆகையால் சபை, இந்தப் பொன்னான பிரமாணத்தினால், பொற்கோலால் அளந்துபார்க்கப்படுகின்றனர். நீங்கள் உங்களையே அளந்துபார்த்துக்கொள்ளுங்கள். இப்படியாகத் தேவன் நமக்குக் கொடுத்துள்ளதான பொன்னான நியமத்திற்கு நெருங்கி, நெருங்கி வருகின்றோம்.

பொன்னான பிரமாணத்திற்கு அப்பால் ஏதேனும் உள்ளதா? ஆம்! அதற்கும் அதிகமாக உங்களால் செய்யமுடியும். ஆனால் அதற்கும் குறைவாய் உங்களால் செய்யக்கூடாது; அது தகுதியாயிராது. எல்லாவிடங்களிலும், எல்லா நேரங்களிலும் பொன்னான பிரமாணத்தினை நடைமுறைப்படுத்துவதற்கும் அதிகமாய் ஒருவரால் என்ன செய்ய முடியும்? மற்றவர்களுடைய நலன்களுக்கு உங்கள் சொந்த உரிமைகளை நீங்கள் விட்டுக்கொடுக்கலாம், உங்கள் சொந்த உரிமைகளை நீங்கள் துறந்துவிடலாம். அதுவே அன்பாகும்; அதுவே பலியாகும். பொன்னான பிரமாணம் முதலாவதாக வருகின்றது; பின்னர்ப்பலி வருகின்றது. பொன்னான பிரமாணத்தினைக் கைக்கொள்ளாமல் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அநீதி செய்த சம்பவங்கள் என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. பொன்னான பிரமாணத்தின் அடிப்படையில் தங்கள் மனைவிகளை நடத்தாமல், ஆனாலும் தங்களைக் கிறிஸ்துவின் பின்னடியார்கள் என்று கூறிக்கொள்கின்ற கணவன்மார்களின் சம்பவங்கள் என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. பொன்னான பிரமாணத்தினைக் கைக்கொள்வது என்பது, நாம் செய்ய வேண்டிய மிக அடிப்படையான காரியமாகும். ஆனால் நீங்கள் சொல்லலாம்: "இது ஒருபோதும் என் கணவன் விஷயத்தில் செல்லுபடியாகாது; அல்லது இது ஒருபோதும் என் மனைவி விஷயத்தில் செல்லுபடியாகாது." அதைத் தேவனிடத்தில் விட்டுவிடுங்கள். தேவன் வழியைச் சுட்டிக்காண்பித்துள்ளார் மற்றும் நாம் நம் சொந்த புரிந்துகொள்ளுதலின்மீது சாராமல், தேவனுடைய சித்தத்தை, தேவனுடைய நியமமாகிய பொன்னான பிரமாணத்தினை நடப்பிக்க வேண்டும். இது என்னுடைய எல்லா நடக்கைகளையும், அனைவருடனான என்னுடைய அனைத்துக் காரியங்களையும் நிர்வகித்திட வேண்டும் மற்றும் அப்போது தேவன் என்னிடத்தில் பிரியம் கொள்வார். இப்படியாக நீங்கள் கிருபையில் வளருவீர்கள்; நீங்கள் அறிவில் வளருவீர்கள். பின்னர் நீங்கள் கேட்கலாம்: "நான் செய்வதற்கு இன்னும் ஏதேனும் உள்ளதா?" ஆம்! நீங்கள் பலிசெலுத்திடலாம் என்று பதிலளிக்கிறேன்!

**3HG 674, 675**

தேவன் தம்முடைய ஜனங்கள், உபதேசத்திலுள்ள தப்பறைகளினின்று விலகிக் காணப்படும்படிக்கு விரும்புகின்றார், ஆனாலும் அவர்கள் பாவம், அநீதி, அநியாயம் ஆகியவற்றுடன் இணக்கம் ஏதுமில்லாமல் இருக்கும்படி விசேஷமாய் விரும்புகின்றார். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் நீங்களும், நானும் பொன்னான பிரமாணத்திற்கு மிகவும் நேர்மையாய்க் காணப்படத் தேவன் விரும்புகின்றார். இதுவே முதலாம் காரியமாகும் மற்றும் இப்பாடத்தினைக் கற்றுக்கொள்வதற்கு, வருடக்கணக்கான அனுபவங்கள் தேவைப்படும். உயர்வாய் மதிக்கப்படுகின்ற சிலரை நான் அறிவேன், ஆனால் இவர்கள் இவ்விஷயத்தில் குறைவுப்பட்டவர்களாய் இருக்கின்றனர். அநேகர் நீதியினைத் தங்கள் ஜீவியத்தில் நடைமுறைப்படுத்துகிறதில்லை.

இவர்கள் தங்கள் குடும்பங்களைக் கையாளும் விஷயத்தில் அநீதியாய் நடந்துகொள்ளுகின்றனர்; கணவன்மார்கள் தங்கள் மனைவிகளை அநீதியாய் நடத்துகின்றார்கள் மற்றும் மனைவிகளும் இப்படிச் செய்கின்றார்கள்; பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அநீதியாய் நடத்துகின்றனர் மற்றும் சிலர் விஷயங்களில் பிள்ளைகள் பெற்றோர்களை அநீதியாய் நடத்துகின்றனர்; நீதியை விட அநீதியே இவர்களது பிரமாணமாய்க் காணப்படுகின்றது. நாம் இயேசுவின் பின்னடியார்களாகி, நீதியானது எங்ஙனம் நியாயப்பிரமாணத்தில் எழுதப்பட்டுள்ளது என்பதைக் கண்டதுமுதற்கொண்டு, அதுமுதற்கொண்டு நாம் பொன்னான பிரமாணத்தினைக் கைக்கொள்ள வேண்டும் என்று அவர் எதிர்ப்பார்க்கின்றார் என்பதை அறியத் துவங்குகின்றோம். அதை முதலாவதாக நம் சொந்த குடும்பங்களில், நம் பெற்றோர்களிடத்தில், நம் பிள்ளைகளிடத்தில், நமக்கு ஜீவித துணையானவர்களிடத்தில் நாம் துவங்க வேண்டும். இது நம் ஜீவியத்தின் சிறு காரியங்களிலும்கூட அதன் தாக்கத்தினைக் கொண்டிருக்க வேண்டும் மற்றும் கொண்டிருக்கும். அவை அனைத்தையும் விவரிக்க இங்கு நேரம் போதாது. அது வீட்டில் நாம் நடக்கும் விதத்தையும், கதவருகே நம் செருப்புகளை நாம் சுத்தம் செய்யும் விதத்தையும், சொல்லப்போனால் நாம் செய்கிற அல்லது சொல்லுகிற அனைத்திலும் மாற்றத்தைக் கொண்டுவரும். அது அனைத்து விஷயத்திற்கும், அனைத்து இடங்களுக்கும் பொருந்தும். மற்றவர்கள் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகின்றீர்களோ, அதை நீங்கள் மற்றவர்களுக்குச் செய்யுங்கள். அதை நம் இருதயங்களிலும், ஜீவியங்களிலும் முற்றும் முழுமையாய் நடப்பிப்போமானால், அது நம் ஜீவியங்களில் மாத்திரமல்லாமல், மற்ற அநேகருக்கும்கூட மாபெரும் ஆசீர்வாதங்களாய் விளங்கும். சில சகோதரர்களையும், சகோதரிகளையும் அவர்களது புறம்பான நடக்கையினையும், அவர்களது கடிதங்களையும் வைத்துப் பார்க்கையில், (நான் நியாயந்தீர்க்க முற்படவில்லை) இவர்கள் இது விஷயத்தில் அதிகம் முன்னேறவில்லை என்பதாகத் தோன்றுகின்றது.

பொன்னான பிரமாணத்திற்கும் அதிகமாய் நாம் செய்திடலாம், ஆனால் ஒருபோதும் அதற்குக் குறைவாக அல்ல. அன்புதான் நம்மை அதிகம் செய்யத் தூண்டுகின்றதாய் இருக்கின்றது; அதாவது நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் விஷயம் போன்றதாகும். அவர் எல்லாத் தருணங்களிலும் பொன்னான பிரமாணத்தினை மீறாமல், அதைக் கைக்கொண்டார். அவர் ஒருபோதும் அதற்குக் குறைவாகச் செய்யவில்லை, மாறாக அதிகமாகவே செய்தார். அவர் தம்முடைய ஜீவனை மற்றவர்களுக்காய்க் கொடுத்திட்டார் மற்றும் இப்படித்தான் நாமனைவரும் செய்ய வேண்டும். இதைச் செய்வதற்கே நாம் ஈடுபட்டிருக்கின்றோம். இதுவே நம் உடன்படிக்கையாகும். பொன்னான பிரமாணத்தினைக் கைக்கொள்ளுங்கள்; பின்னர் இதற்கு அதிகமானவைகளைச் செய்யுங்கள். நாம் நம் சகோதரர்களுக்காக நம் ஜீவியங்களைக் கொடுத்துவிட வேண்டும். இதுவே வேதாகமத்தின் கருத்தாகும்.

## 3HG 729

தேவனுடன் உறவிற்குள்ளாக வரும் யாரும், அன்பினால் ஒரு ஜெநிப்பித்தலை அடைகின்றனர்; ஏனெனில் தேவன் அன்பாகவே இருக்கின்றார். அன்பு பிறருக்குத் தீமை செய்யாது. ஆகையால் "அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாய் இருக்கின்றது" என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். தேவனுடைய நியாயப்பிரமாணம், நீதியின் பிரமாணமாய் இருக்கின்றது மற்றும் வேதவாக்கியங்கள் முன்வைப்பது போன்று கர்த்தருடைய ஆவியை, அன்பின் ஆவியினைப் பெற்றுக்கொள்பவர்கள் யாரும், மற்றவர்களுக்கு நீதியையாகிலும் செய்ய வேண்டியவர்களாய் இருக்கின்றனர். நீதிக்கும் அதிகமாய் எந்த நியாயப்பிரமாணமும் எதிர்ப்பார்ப்பதில்லை. நீதிக்கும் அதிகமாய் நாம் செய்கிற எதுவும், நம் சார்பிலான பலியாய் இருக்கும். ஆனால் நாம் செய்ய விரும்பும் அனைத்தையும் நம்மால் செய்துவிட முடியாது; ஏனெனில் நம்முடைய மாம்சத்தில் பூரணம் காணப்படுகிறதில்லை. தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கு முழு இசைவுடனும் நம்மால் ஜீவித்திட முடியாது. ஆனாலும் நீதிக்கும் குறைவாய் எதுவும் செய்யக்கூடாது என்று நம் சித்தம் காணப்படத்தக்கதாக நம்மால் பார்த்துக்கொள்ளக்கூடும்; மேலும் ஏதேனும் விஷயத்தில் நாம் நீதிக்குக் குறைவாய்ச் செய்திருப்போமானால், ஏதேனும் விஷயத்தில் பொன்னான பிரமாணத்தினை மீறியிருப்போமானால், அது நம் மனவிருப்பத்திற்கு மாறாக நடந்த ஒரு காரியமாகவே இருக்க வேண்டும். பின்னர் மற்றவர்களுடைய உரிமைகளைக் குறுக்கிட்டதான அந்தத் தவறான கிரியையை, வார்த்தையை அல்லது பார்வையைச் சரிப்பண்ணிடுவது வரையிலும் நாம் ஓய்ந்திருக்கக்கூடாது.

யாரேனும், "இது கடினமானதொரு பிரமாணம்" என்பீர்களானால், என் அருமை சகோதரனே "சரியான ஆவியினைத் தாங்கள் பெற்றிராதது வரையிலும், தாங்கள் இராஜ்யத்திற்கு ஒருபோதும் ஆயத்தமாக மாட்டீர்கள்" என்றே நாங்கள் பதிலளிக்கின்றோம். தேவனுடைய சிங்காசனத்தின் ஆதாரமாகிய நீதியின் இக்கொள்கையானது, அவரது குணலட்சணத்தின் ஆதாரமாய் இருக்கின்றது. மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புவோமோ, அதை நாம் மற்றவர்களுக்கும் செய்வதே நீதி செய்தலாகும். எல்லாக் கிரியைகளின் விஷயத்திலும் நம்மால் நீதி செய்ய முடியாவிட்டாலும், அதை நம் மனங்களிலாகிலும் நம்மால் செய்ய இயலும். எல்லா நேரங்களிலும் அப்போஸ்தலனினால் ஒவ்வொரு செய்கையிலும், வார்த்தையிலும் செய்ய முடியாவிட்டாலும், "என் மனதினாலே, தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கு ஊழியஞ்செய்கிறேன்" என்று அப்போஸ்தலன் கூறியுள்ளார் (உரோமர் 7:25).

நாம் நீதியை மீறியிருப்பதை எப்போதெல்லாம் காண்கின்றோமோ, அப்போது மனந்திரும்புவதே தகுதியான பிரயாசமாயிருக்கும் மற்றும் யாருக்குத் தவறு செய்யப்பட்டிருக்கின்றதோ, அவரிடம் தவற்றினை ஒப்புக்கொள்வதே உண்மையான மனந்திரும்புதலாகும். இந்த நடைமுறையானது மிகவும் தாழ்மைக்குள்ளாக்கும்/சிறுமைக்குள்ளாக்கும் என்பது உண்மையே. ஆனால் இத்தகைய அனுபவங்களானது நமக்கான சிறந்த அனுபவங்களாகும்; ஏனெனில் இவைகளினாலே நமக்குத் தாழ்மை வளர்கின்றது மற்றும் இதன் விளைவாய் நாம் சாந்தத்திலும், தயவிலும் வளர உதவப்படுகின்றோம். இப்படியாக திவ்விய ஏற்பாட்டில் தேவனுடைய ஜனங்கள், அவர்களுக்கு அதிகமதிகமாய்த் தெளிந்த புத்தியுள்ள மனதைக் கொடுக்கும் உதவிகரமான படிப்பினைகளைக் கற்றுக்கொள்கின்றனர். அவர்கள் முந்தைய காலங்களைக்காட்டிலும், இப்பொழுது நன்கு சிந்திக்க முடிபவர்களாயும், அவர்கள் தங்களைக் கட்டியெழுப்ப முடிகின்றவர்களாயும் இருக்கின்றனர். இப்படியாய் இந்த அல்லது அந்தக் குணலட்சணத்தின் தன்மைகளில், தங்கள் பூரணமற்ற மாம்ச தன்மைகளின் காரணமாய்க் குறைவுபட்டிருப்பதைக் காண்கையில், நீதியின் ஆவிக்கு இசைவாய்த் தங்கள் முழுப்பண்புகளையும் இசைவுப்படுத்திக் கொண்டுவருவதற்கு அவர்கள் கற்றுக்கொள்கின்றனர். அவர்களின் இருதயங்களில் நடந்துகொண்டிருக்கின்றதான இந்த வேலையானது, அவர்களை இராஜ்யத்திற்குத் தகுதியாக்குகின்றதாய் இருக்கின்றது. (2 பேதுரு 1:5-11)

## சபை மீதான மாபெரும் பரீட்சை

மிகவும் விசேஷமான ஒரு வகுப்பார் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு உடன்சுதந்தரராகக் காணப்படும்படிக்கு தேவன் அழைத்துக்கொண்டிருக்கின்றார். இவர்கள் தகுதியானவர்களெனக் கருதப்படுவதற்கென்று, இவர்கள் கர்த்தருக்கு மிகவும் நேர்மையாய்க் காணப்பட வேண்டும், மற்றவர்களுடைய உரிமைகளைப் புரிந்துகொள்ளும் விஷயத்தில் மிகவும் நீதியாய்க் காணப்பட வேண்டும். நம்முடைய சரீரங்கள் மிகவும் அபூரணமானவைகள் என்று பிதா காண்கின்றார்; ஆனால் நம் தலைகளும், நம் இருதயங்களும் சரியாய்க் காணப்படுமானால், உயிர்த்தெழுதலின்போது, நமக்கு உரிய சரீரத்தினை, ஒரு மகிமையான சரீரத்தினைக் கொடுப்பதாகப் பிதா வாக்களித்துள்ளார். திவ்விய குணலட்சணத்தினை, தேவனுடைய பரிசுத்த ஆவியினை அடையாளப்படுத்தும் நீதியின் அந்தக் கொள்கைகளுக்கு நம் தலைகளானது முழு இசைவாய்க் காணப்படும்போது, நம்மை அவர் பயன்படுத்த முடிகிற நிலைமையில் நாம் காணப்படுவோம்.

புதிய சரீரமானது குணலட்சணத்தினை உருவாக்கிடுவதில்லை, மாறாக குணலட்சணம் வெளிப்படுவதற்கான கருவியாக மாத்திரம் காணப்படும். இப்பொழுது நாம் குணலட்சணத்தினை, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நற்பண்புகளை வளர்த்திக்கொள்ளவில்லையெனில், நாம் மேசியாவின் இராஜ்யத்தில் இடம் பெறுவதில்லை. இராஜ்யத்தில் இடத்தினைப் பெற்றுக்கொள்பவர்கள் அனைவரும், தங்கள் ஸ்தானத்திற்குத் தகுதியானவர்களாகக் காணப்படுவார்கள். இந்த வகுப்பாரைக் கண்டுபிடிப்பதற்குத் தேவன் நீண்டகாலம் எடுத்துள்ளார். அவர் எந்தத் தவறும் செய்கிறதில்லை. தெய்வீக அன்பினை வளர்த்துள்ள ஒவ்வொருவரும் - உங்களையும், என்னையும் போன்று, நீதி மற்றும் நியாயத்தின் அடிப்படையிலுள்ள அனுபவங்களைப் பெற்றிருக்கின்றனர். இவைகள் இரண்டும் ஒன்றே; ஏனெனில் நீதிதான் நியாயம் மற்றும் நியாயந்தான் நீதியாயிருக்கின்றது.

ஆனால் நாம் நீதியை உடையவர்களாய் மாத்திரம் காணப்பட வேண்டும் என்பது தெய்வீகச் சித்தமல்ல; தேவனைப்போன்று காணப்படுவதற்கு நாமும்கூட அனுதாபத்தின் உணர்வுகளையும், இரக்கமான உணர்வுகளையும் மற்றவர்பால் பெற்றிருக்க வேண்டும். தேவன் தமது சிருஷ்டிகளுக்காக இரக்கத்தின் உணர்வுகளைப் பெற்றிருந்தார். ஆரம்பத்திலேயே தகப்பனாகிய ஆதாமின் சிருஷ்டிப்பிற்கடுத்த தம்முடைய திட்டத்தை அறிந்த நிலையிலும், ஆதாமின் கீழ்ப்படியாமைக் காரணமாய்ப் பாவங்கள் நம் மீது வரும் என்பதை அவர் அறிந்த நிலையிலும், நம்முடைய மீட்பிற்காகவும், உலகத்தினுடைய சீர்ப்பொருந்துதலுக்காகவும் மற்றும் சபைக்கான அழைப்பிற்காகவும் தேவன் ஏற்பாடு பண்ணினார். இவையனைத்தும் நீதியின் கோரிக்கைகளுக்கும் அதிகமான காரியங்களாகும். மனுஷ ஜாதியின் அங்கத்தினர்களுக்குத் தேவனால் நீதிக்குக் குறைவான எதையும் செய்ய முடியாது. நீங்களும், நானும் பொன்னான பிரமாணத்தின்படி செயல்பட வேண்டும் என்று அவர் சொல்வதுபோன்று, அவரும் அனைத்துக் காரியங்களையும் நீதியினுடைய கொள்கைகளுக்கேற்பவே செய்வார்.

நீதி தேவனுடைய சிங்காசனத்தின் ஆதாரமாய் இருக்கின்றது. அவரது இராஜ்யத்தின் முழு அடித்தளமும் நீதியின் மீது போடப்பட்டுள்ளது. அவர் நீதிக்குக் குறைவானதைச் செய்வதில்லை மற்றும் இதையே அவர் ஒவ்வொரு சிருஷ்டியினிடத்திலும் எதிர்ப்பார்க்கின்றார். முழுமையான நீதிக்குக் குறைவான எதுவும் அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் நீதிக்கும் மேலாக, சகோதர சகோதரிகளுக்காய் ஜீவனைக் கொடுக்குமளவுக்கான அன்பினைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதே சபையின் மீதான மாபெரும் பரீட்சையாகக் காணப்படுகின்றது. நீதிக்கும் அதிகமானதைத் தேவன் கேட்கவில்லையென்றாலும், ஒருவேளை நாம் நீதிக்கும் அதிகமானவைகளைச் செய்யவில்லையெனில், நம்மால் இராஜ்யத்தில் ஆளுகை செய்ய முடியாது.

**3HG 734**

உலகம், மாம்சம் மற்றும் எதிராளியானவனிடமிருந்து பல்வேறு இன்னல்களை நாம் பெற்றிருக்கின்றோம். தேவ சித்தத்தைச் செய்ய நாடுகிற காரியத்தில், நாம் நீதியாய் இருக்க முற்படுவதே முதலாம் காரியமாகும். இதுவே குணலட்சணத்திற்கான அஸ்திபாரமாகும். நம்முடைய முழு இருதயத்தோடு தேவனை அன்புகூருபவர்களாக மாத்திரம் இராமல், நம்மை நாம் அன்புகூருவதுபோல நம் அயலானையும் அன்புகூர வேண்டியவர்களாக இருக்கின்றோம்; மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புவோமோ, அதையே நாம் அவர்களுக்கும் செய்திட வேண்டும். இதுவே பொன்னான பிரமாணமாகும் மற்றும் நாம் இதைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று தேவன் எதிர்ப்பார்க்கின்றார் என்றவிதத்தில் இயேசு இதை ஒரு நியமமாக முன்வைத்துள்ளார். நீங்கள் எந்தமட்டும் பொன்னான பிரமாணத்தைக் கைக்கொள்கின்றீர்கள் என்றும், எந்தமட்டும் அது உங்கள் ஜீவியத்தில் தாக்கம் கொண்டுள்ளது என்றும் தேவன் கண்ணோக்குகின்றார். எல்லா மனுஷருக்கும் நீதி செய்யும்படிக்கு நீங்கள் கடமைப்பட்டிருக்கின்றீர்கள். அன்பிற்கு முன்னதாக நீதி வரவேண்டும். நீதி செய்த பிற்பாடு, பொன்னான பிரமாணத்தைக் கைக்கொண்ட பிற்பாடு, அன்பை குவியுங்கள். ஆனால் நீதிக்கும் குறைவான எதுவும் உங்களால் செய்யப்படக்கூடாது.

இந்தக் காரியங்கள் அனைத்தும் இல்லத்திலிருந்தே துவங்குகின்றது என்று நீங்கள் கவனிக்கவேண்டுமென்று நான் விரும்புகின்றேன். இறைச்சிக்கடைக்காரரிடத்திலும், ரொட்டிக்கடைக்காரரிடத்திலும் ஒரு ரூபாய் விஷயத்தில் கூட நீதியாய் நடந்துக்கொண்டிருப்பினும், தங்கள் சொந்த குடும்பத்தின் அங்கத்தினர்களுடைய விஷயத்தில் அப்படிக் காணப்படாத ஜனங்களை நான் அறிவேன். "அது எப்படிச் சாத்தியம்?" என்று நீங்கள் கேட்கலாம். விளக்கிக்கூறினால் உங்களுக்குப் புரியும். இது நிச்சயமாய் உண்மையே. அநேக கணவன்மார்கள் மற்றவர்களிடத்தில் நடப்பித்திடும் நீதியைக்காட்டிலும், தங்கள் மனைவிமார்களிடத்தில் நீதி நடப்பிப்பதில் குறைவுபடுகின்றனர். அநேகம் மனைவிமார்கள் மற்றவர்களிடத்தில் நடப்பித்திடும் நீதியைக்காட்டிலும், தங்கள் கணவன்மார்களிடத்தில் நீதி நடப்பிப்பதில் குறைவுபடுகின்றனர். அநேகம் பெற்றோர்கள் மற்றவர்களுடைய பிள்ளைகளைக் கையாளும் விஷயத்தில் நடப்பித்திடும் நீதியைக்காட்டிலும், தங்கள் சொந்த பிள்ளைகளிடத்தில் நீதி நடப்பிப்பதில் குறைவுபடுகின்றனர். அநேகம் பிள்ளைகள் மற்ற ஜனங்கள் விஷயத்தில் நடப்பித்திடும் நீதியைக்காட்டிலும், தங்கள் சகோதரர்களிடத்தில், சகோதரிகளிடத்தில் மற்றும் பெற்றோர்களிடத்தில் அநீதியாய் நடந்துகொள்கின்றனர். இவை அனைத்தும் தவறாகும் மற்றும் இவைகளைத் தவறு என்று அடையாளம் கண்டுகொள்ளும் நேரத்தில் நம்மைச் சரிசெய்துக்கொள்வது நல்லது. நீங்கள் பின்வருமாறு சொல்லலாம்: "சூழ்நிலைகளானது ஒவ்வொருவருக்கும் வித்தியாசப்படுமே. என் கணவனை நான் நீதியோடு கையாண்டால், அதை அவர் சாதகமாய்ப் பயன்படுத்திக்கொள்வாரே அல்லது என் மனைவியை நான் நீதியாய்க் கையாண்டால் அவளுக்கு அது சாதகமாகிப்போய்விடுமே."

இப்படித்தான் பெரிய நாடுகளின் விஷயத்திலும் காணப்படுகின்றது. அவர்கள் ஒருவரையொருவர் நம்புகிறதில்லை. "ஜெர்மானியர்கள் நம்மை விழுங்கிவிட ஆயத்தமாயிருக்கின்றனர்" என்று பிரிட்டன் நாட்டினர் கூறுகின்றனர். "நம்முடைய வளமையைக் கண்டு ஆங்கில வர்க்கத்தினர் பொறாமைபடுகின்றனர்; அவர்கள் நம் இடங்களைக் கைப்பற்றி, மாபெரும் பிரிட்டீஷ் சாம்ராஜ்யமாகிவிடுவர்" என்று ஜெர்மானியர்கள் கூறுகின்றனர். நீங்களும் நானும் தேவனுக்கே பொறுப்பாளிகளாக இருக்கின்றோம். மற்றவர்களைக்குறித்து கவலைப்படாதீர்கள். மற்றவர்களைத் தேவனிடத்தில் விட்டுவிடுங்கள். தேவனுடைய பிரமாணங்களுக்கு இசைவாக நீங்கள்

நடந்துள்ளீர்களானால், அதனால் உங்களுக்கு மகா அசௌகரியம்/அநுகூலமற்ற நிலைமை ஏற்பட்டிருக்குமாயின் - “தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்” என்று அப்போஸ்தலர் தெரிவிக்கின்றார் மற்றும் உங்கள் இருதயத்தில் நீங்கள் ஜெயங்கொண்டவர்களாக இருப்பீர்கள். இதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்.

தேவன் தெரிந்தெடுத்துக்கொண்டிருக்கின்ற ஜாதியார், நீதியான, பயபக்தியான, அன்பான மற்றும் அவர் சித்தம் செய்வதில் வாஞ்சையுள்ளதான இருதயங்களைப் பெற்றிருக்க வேண்டும். ஜெயங்கொள்பவர்கள் அனைவரும், நீதியினுடைய அம்சங்களை உடையவர்களாய் இருப்பார்கள் என்று நான் எண்ணுகின்றேன். நீதி தம்முடைய சிங்காசனத்திற்கு ஆதாரமாய் இருக்கின்றதெனத் தேவன் கூறுகின்றார். வேறு ஏதேனும் அஸ்திபாரத்தினைப் பெற்றிருப்பவர்களை மேசியாவின் அரியணைக்கு அவர் அனுமதிப்பார் என நீங்கள் எண்ணுகின்றீர்களா? நம்மிடத்தில் நீதியானது ஆழமாய்ப் பதியப்பெற்றிருக்கவில்லையெனில், நீங்களும், நானும் கர்த்தருடைய சிங்காசனத்தில் உட்காருவதற்கு அனுமதிக்கப்படுவோம் என்று எண்ணுகின்றீர்களா?

## கிறிஸ்தவர்கள் பொன்னான பிரமாணத்தினையும் தாண்டி அடுத்தக்கட்டம் செல்ல வேண்டும்

பொன்னான பிரமாணத்தினைக் கைக்கொள்வது, இறுதியான காரியமா? இல்லை. அன்பான சகோதரனே அது வெறும் துவக்கமே. நீங்கள் இன்னும் தொடர்ந்து முன்னேறி, உங்களால் முடிந்தமட்டும் அன்பை, தியாக அன்பினைப் பெற்றிருக்க வேண்டும். நீதியின் பிரமாணம் உங்கள் இருதயத்தில் ஆளுகை செய்கிறதா என்றும், நீங்கள் பொன்னான பிரமாணத்தின்படிதான் செய்கின்றீர்களா என்றும் உறுதிப்படுத்திக்கொண்டு, பின்னர் அன்பினைக் கட்டியெழுப்புங்கள்/குவியுங்கள்.

**<u>3HG 735</u>**

# உண்மை குணலட்சணத்தின் அஸ்திபாரமாகிய நீதி

“ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.” (மத்தேயு 7:12)

நீதித் தொடர்புடையதான இந்த அறிவுரையைப் பார்க்கிலும், தேவனுடைய அறிவுரையில் வேறு எந்தப் பாகமும் அவருடைய சபைக்கு முக்கியமாக இருந்ததில்லை. தேவன் செய்கிற எக்காரியமும் முழுமையான நீதியின் அடிப்படையினாலானதாகும் மற்றும் அவரைப் போன்றிருப்பதற்கும், அவர் பெற்றிருக்கின்றதும், அவர் நமக்கு விவரித்ததும், வெளிப்படுத்தினதுமான மகா பண்புகளை நம் குணலட்சணங்களில் வளர்த்திக்கொள்வதற்கும், அவர் தம் ஜனங்களை அழைக்கின்றார். நீதி என்பது மிகவும் சாதாரணமான காரியம் என்றும், அதை நடைமுறை வாழ்க்கையில் அனைவருமே அடையாளம் கண்டுகொண்டு பின்பற்றுகின்றனர் என்றும் அநேகர் எண்ணம் கொண்டுள்ளனர். ஆனால் இப்படியாகக் காரியம் இருப்பதில்லை. அநேகர் பின்வருமாறு கேட்பதுண்டு: “நாங்கள் கிறிஸ்தவர்களாய் இருக்கின்றோம் என்றும், நீதியினை நடப்பிப்பது என்பது இயல்பாகவே கிறிஸ்தவர்கள்

அனைவருக்குமான கடமை என்றும் உங்களுக்குத் தெரியாததா என்ன? இதற்குப் பதிலாக அன்பினை வளர்த்தி, விருத்திச் செய்யும்படிக்கு எங்களுக்கு ஏன் நீங்கள் அறிவுறுத்தக்கூடாது?" இதற்கு எங்களது பதில்: "நீதி எப்போதுமே முந்தி வரவேண்டும்; மனுஷஜாதியிலுள்ள யார் ஒருவருக்கும், மிருக ஜீவனுக்கும்கூட நீதிக்குக் குறைவானதைச் செய்திடுவதற்கு நமக்கு உரிமை இல்லை" என்பதேயாகும்.

இந்தக் கொள்கையினை அடையாளம் கண்டுகொள்ள தவறினதே முழு உலகத்தின் பிரச்சனையாக இருக்கின்றது. நீதி தேவனுடைய சிங்காசனத்தின் ஆதாரமாய் இருக்கின்றது. இந்த அடிப்படையான கொள்கையின் மீதே நம் குணலட்சணத்தை நாம் கட்டியெழுப்ப விரும்புகின்றார் மற்றும் இந்தக் கொள்கையின் அடிப்படையிலேயே அவர் தம் சிருஷ்டிகள் அனைத்தையும் கையாளுகின்றார். நீதியின் இக்கொள்கை அடையாளம் கண்டுகொள்ளப்படாததே, உலகம் பிரச்சனையில் காணப்படுகிறதற்கும், வேத வாக்கியங்கள் உறுதிபடுத்துவது போன்று, மகா உபத்திரவக்காலம் நம் இனத்தின் மீது வருகிறதற்கும் காரணமாயிருக்கின்றது. பொதுவான மனுக்குலத்தில் அன்புகூருவதற்கு எதுவும் இல்லையென்றாலும், ஒவ்வொரு மனுஷனுக்கும் நீதி செய்யப்பட வேண்டும். கிறிஸ்துவின் பின்னடியார்களென, நாமே யாவரிடத்திலும் நீதியினை நடப்பிக்கிற விஷயத்தில் முதன்மை வகிக்கின்றவர்களாகக் காணப்பட வேண்டும்.

## நீதியே நியாயப்பிரமாணத்தின் அடிப்படையாகும்

பல வருடங்களுக்கு முன்னதாக, தேவன் எகிப்திலிருந்து இஸ்ரயேலர்களை வெளியே அழைத்துவந்தார். அவர் அவர்களிடத்தில் கூறினதாவது: "ஆபிரகாமின் சந்ததி உலகை ஆசீர்வதிக்கும் என்று நானூறு வருடங்களுக்கு முன்னதாக நான் ஆபிரகாமோடு ஓர் உடன்படிக்கைப் பண்ணியிருந்தேன். உங்களுக்கு அவ்வாக்குத்தத்தம் நிறைவேற்றப்படத்தக்கதாக, அதற்கு நீங்கள் ஆயத்தமாய் இருக்கின்றீர்களா?" அவர்களோ தாங்கள் ஆயத்தமாய் இருப்பதாகத் தெரிவித்தார்கள். ஆகையால் அவர் அவர்களைச் சீனாய் மலைக்குக் கூட்டிச்சென்றார்; அங்கு அவர் சொல்லும் எல்லாவற்றையும் தாங்கள் செய்வார்களென அவரோடு ஓர் உடன்படிக்கைக்குள் பிரவேசித்தனர். அவர் அவர்களுக்குப் பத்துக் கற்பனைகளைக் கொடுத்துவிட்டு, "ஆபிரகாமின் சந்ததியாக, மனுக்குலத்தை ஆசீர்வதிப்பவர்களாக ஆக நீங்கள் விரும்பினால், இந்தக் கட்டளைகளைக் கைக்கொள்ளுங்கள்" என்றார்.

அந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையானது நீதியின் அடிப்படையினால் மாத்திரமேயானது; அது அவர்களது சத்துருக்களை அவர்கள் அன்புகூரும்படியாகக் கேட்டிடவில்லை. அவர்கள் நீதிசெய்வதற்கேற்ப அல்லது செய்யாமல் இருப்பதற்கேற்ப, உலகத்தை ஆசீர்வதிக்கும் ஆபிரகாமின் சந்ததியாக அவர்கள் கருதப்படுவதற்குத் தகுதியானவர்களாக இருக்கின்றார்கள் என்ற திவ்விய தீர்மானம் காணப்படும். ஆனால், அவர்களால் நீதி செய்ய முடியவில்லை, தங்கள் அயலான் தங்களுக்குச் செய்ய வேண்டுமென்று தாங்கள் விரும்புவற்றை, அவர்களால் அவர்களது அயலானுக்குச் செய்ய முடியவில்லை. இந்தத் தோல்வி, அவர்களது விழுந்துபோன நிலைமையினாலாகும்; காரணம் பாவம் மனுஷீக சுபாவத்தில் ஆழமாய்ப் பதிந்துவிட்டது. (உரோமர் 3:20) ஆயிரத்து அறுநூறு வருடங்களாகத் தேவன் அந்த ஜனங்களிடத்தில் பொறுமை காத்தபோதிலும், நியாயப்பிரமாணத்தினைக் கைக்கொள்பவர்களுக்கு அளிக்கப்படும் பலனாகிய நித்திய ஜீவனை, அவர்களில் ஒருவர்கூடப் பெற்றுக்கொள்ளவில்லை. (லேவியராகமம் 18:5; உரோமர் 10:5)

நீதியின் நியாயப்பிரமாண உடன்படிக்கையினைக் கைக்கொள்வது என்பது எளிமையான காரியம்

அல்ல. யூதர்கள் கைக்கொள்ளத் தவறினார்கள் என்று நாம் காண்கின்றோம். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் எந்தப் பூரணமற்ற மாம்சமும் இரட்சிக்கப்படுகிறதில்லை என்று அப்போஸ்தலன் கூறியுள்ளதையும் நாம் அறிவோம். எனினும் "நியாயப்பிரமாணத்தினை நீங்கள் கைக்கொள்ளாதது வரையிலும், பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிக்கின்றதான ஆபிரகாமின் சந்ததியாராக நீங்கள் ஆகிடமுடியாது" என்று தேவன் கூறுகின்றார்.

## சபையும், நியாயப்பிரமாணமும்

கிறிஸ்துவின் சபையானது, ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாய் இருக்கின்றனர் என்று வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. (கலாத்தியர் 3:8, 16, 29) ஆகையால் அவர்கள் நியாயப்பிரமாணத்தினைக் கைக்கொள்ளக் கடமைப்பட்டிருந்தனர். விழுந்துபோன மாம்சத்தில் செய்ய முடியாததை, அவர்கள் செய்ய முடிகின்றவர்களாகத்தக்கதாக, தேவன் சபைக்கு ஒரு விசேஷித்த ஏற்பாடு பண்ணினார்; ஆனால் இப்படியாக அவர் நிழலான ஜனங்களாகிய யூத ஜனங்களுக்குச் செய்திடவில்லை. தம்முடைய நியாயப்பிரமாணத்தினைப் பூரணமாய்க் கைக்கொள்ள முடியாத அளவுக்கு மனுக்குலம் மிகவும் விழுந்துபோயுள்ளது என்பதை அறிந்தவராக, அவர் நம் சந்ததிக்கு உதவும்படியாக தம் குமாரனை உலகிற்கு அனுப்பிவைத்திட்டார். பூரணமானவரும், ஆதாமின் விழுந்துபோன சந்ததியினால் நோய்க்குள்ளாகாதவரும், "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமான" நமது கர்த்தரால் திவ்விய நியாயப்பிரமாணத்தினைக் கைக்கொள்ள முடிந்தது மற்றும் கைக்கொண்டிட்டார். பின்னர்த் திவ்விய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தவராக, அவர் தம்மையே பலிசெலுத்தும் விதத்தில் கையளித்தார். அவர் பலிசெலுத்திட்டதான ஜீவனானது ஒரு புண்ணியமாகக் காணப்பட்டு, பிதாவினுடைய திட்டத்தின்படி, சுவிசேஷ யுகத்தின் முடிவில் ஆதாம் மற்றும் அவரது சந்ததியினருக்கான ஈடுபலி விலைக்கிரயமென, நமது கர்த்தரினால் கொடுத்துத் தீர்க்கப்படும்.

அந்தப் புண்ணியத்தினை நமது கர்த்தர் பிதாவிடம் (நீதியிடம்) கொடுத்துவிட்டவுடன், முழு மனுக்குலமும் அவரிடத்தில் கொடுக்கப்படுவார்கள்; உடனே அவர் பூமியின் குடிகளை ஆளும் மற்றும் ஆசீர்வதிக்கும் தம் மாபெரும் வேலையினைத் துவங்குவார். நீண்ட இடைவெளிக்கான காரணம், திட்டத்தினுடைய இன்னொரு அம்சமாகும். மனுக்குலத்தினை ஆசீர்வதிக்கும் மாபெரும் எதிர்க்கால வேலையில் கர்த்தரோடுகூடப் பங்கெடுக்கத்தக்கதாக ஒரு சபையினை உலகத்திலிருந்து தெரிந்தெடுப்பது திவ்விய சித்தமாக இருக்கின்றது. ஆகையால் சபை வகுப்பாருக்கு முன்குறிக்கப்பட்ட எண்ணிக்கை யானவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டு, பரீட்சிக்கப்பட்டு, முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையினால் மறுரூபமாக்கப்படுவது வரையிலும் அவர் தம் ஆளுகையினைத் துவங்குவதில்லை.

ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியினர் சுபாவத்தின்படியானவர்களல்ல என்பதைக் கவனிப்பது நன்று. ஒரு மனுஷனாகவே எப்போதும் இயேசு காணப்பட்டிருந்திருப்பாரானால், அவரால் உலகத்தினை ஆசீர்வதித்திட முடியாது. அவரால் நல்லதொரு மனுஷீக ஆளுகையைக் கொண்டுவந்திருக்க முடியும், ஆனாலும் மரித்தோருக்கு ஜீவன் கொடுப்பதற்கான உரிமை அவருக்கு இருந்திருக்காது. மேலும் மரணம் எனும் சாபத்தினையும், அதனோடுள்ள யாவற்றையும் அவரால் ஒருபோதும் ஒழித்துப்போட்டிருக்க முடியாது. ஆகையால் திவ்விய நியாயப்பிரமாணத்தினைக் கைக்கொள்வதற்கும் அதிகமாய் அவர் ஏதோ ஒன்றைச் செய்ய வேண்டியிருந்தது; நீதி ஒருபோதும் கேட்டிடாத ஏதோ ஒன்றினை, அதாவது சுயத்தைப் பலிசெலுத்தும் விதமான ஏதோ ஒன்றினை அவர் செய்ய வேண்டியிருந்தது. நியாயப்பிரமாணத்தினை அவர் கைக்கொண்டிருந்த காரியமானது, இயேசு என்றென்றுமாய் ஜீவிப்பதற்கு அவருக்கு அங்கீகாரம் வழங்கினதாய் இருந்தது; ஒருவேளை அவரது ஜீவனை அவர் ஈடுபலியெனக் கொடுக்காமல், அவர் தம் இராஜ்யத்தினை ஏற்படுத்துவாரானால், அவரால் மனுக்குலத்தினை ஆசீர்வதித்திருந்திருக்க முடியாது;

ஏனெனில் பாவிகள் யாவரும், மரண ஆக்கினையின்கீழ்க் காணப்பட்டனர்.

நியாயப்பிரமாணத்தினைக் கைக்கொண்டதோடுகூட, இயேசு தம்முடைய சரீரத்தைத் தேவனுக்குப் பரிசுத்தமும், பிரியமுமான ஜீவபலியாக ஒப்படைத்தார் மற்றும் இந்த அவரது பலியின் புத்தியுள்ள ஊழியமானது அன்பினால் ஏவப்பட்டதாகும். பிரமாணத்தினைக் கைக்கொள்வதும், கூடுமானமட்டும் அதன் நியமங்களுக்கு/கொள்கைகளுக்கு இசைவாய் ஜீவிப்பதும் நமது முதலாம் கடமையாகும். கிறிஸ்துவினுடைய கொடியின் கீழ் இணைந்துகொண்டவர்களாகிய நாம், நம் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுப்பதும், அவரது அடிச்சுவடுகளில் மரணபரியந்தம் உண்மையாய் நடப்பதும் நமக்கான கடமையாகும்; இப்படியாகக் கிறிஸ்தவர்களாகிய நாம் மற்ற அனைத்து ஜனங்களைக்காட்டிலும் அதிகமாய்ச் செய்ய வேண்டும். அனைவரும் நீதியின் பொன்னான பிரமாணத்திற்குக் கடமைப்பட்டிருக்கின்றனர்; ஆனால் அன்பினால் நாம் நீதிக்கும் அதிகமான ஏதோ ஒன்றினைச் செய்ய வேண்டும்.

நம்மால் ஒருவேளை முடிந்திருக்குமானால், நாம் சிந்தையிலும், வார்த்தைகளிலும், கிரியைகளிலும் முழுமையாய் நீதியாய்க் காணப்பட்டிருப்போம். ஆனால் அப்படிச் செய்ய நம்மால் கூடாது; ஏனெனில் ஆதாமின் சந்ததியிலுள்ள எவராலும் திவ்விய பிரமாணத்தினைக் கைக்கொள்ள முடியாது. சுயநலமென்பது நமது சுபாவ சரீரத்தில் ஆழப்பதிந்துள்ளதாய் இருக்கின்றது; மற்றும் இதன் காரணமாய் நாம் முழுப்பூரணத்தினை அடைய தவறிவிடுகின்றோம். ஆனால் நாம் தவறினாலும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவதில்லை; ஏனெனில் யூதர்களுக்கு இருந்ததுபோன்றதான நிலைமை நமக்கு இல்லை. (உரோமர் 8:1) இயேசு கிறிஸ்துவின் இரத்தமானது நம்மை அனைத்து அபூரணங்களினின்று சுத்திகரிக்கின்றதாய் இருக்கின்றது; நம்மால் செய்ய முடியாதவைகள் அனைத்தையும் கிறிஸ்துவின் இரக்கமானது மூடிவிடுகின்றதாய் இருக்கின்றது.

ஆனால் அதற்கென்று நம்மால் முடிந்தமட்டும் செய்ய முடிந்ததை நாம் செய்யாமல் இருக்கக்கூடாது. நம் இருதயங்களில் பொன்னான பிரமாணத்தினை நாம் அடையாளம் கண்டுகொள்வோமானால் அதனோடு, நம் எண்ணங்களை இசைவிற்குக் கொண்டுவர நாம் நாடுகிறவர்களாய் இருப்போம். நம் அயலான் நம்மைக்குறித்து எப்படி எண்ணம் கொள்ள வேண்டும், எப்படிப் பேசிட வேண்டும் என்று நாம் விரும்புவோமோ, அப்படியே நாமும் நம் அயலானைக் குறித்து கருணையோடு எண்ணுகிறவர்களாகவும், பேசுகிறவர்களாகவும் இருப்போம். அயலான் நம்மிடத்தில் தயவுபாராட்ட நாம் விரும்புவதுபோன்று, நாமும் அவனிடத்தில் தயவாய் நடந்துகொள்ளுவோம். இக்கொள்கையானது தினந்தோறுமாக யாவரிடத்திலும் செயல்படுத்தப்பட வேண்டும். ஆரம்பத்தில் இது விஷயத்தில் எவ்வளவு குறைவுகள் இருப்பினும், நாம் நமது கர்த்தராம் இயேசு போன்று அதிகமதிகமாய் ஆகத்தக்கதாக, தேவனுடைய கிருபையின் கிரியையானது நம்மை அதிகமதிகமாய் மறுரூபமாக்கிட வேண்டும்.

## எப்படி அன்பு நியாயப்பிரமாணத்தினை நிறைவேற்றுகிறது

மகிமையான அளவுகோல் நியமத்தின் அளவை அடையாவிட்டாலும், நம் இருதயங்களைப் பொறுத்தமட்டில், தேவனுடைய அருமையான குமாரனுக்கொத்த துல்லியமான சாயலானவர்களாகிட வேண்டும். அந்த மகிமையான அளவுகோலினை மாம்சத்தில் இருக்கையில் நம்மால் அடைய முடியாது. நம்முடைய குறைவுகளுக்காய் நாம் தினந்தோறும் தெய்வீக மன்னிப்புக் கேட்க அவசியமாயிருக்கும். ஆனால் இருதயத்தினை ஆராய்ந்து அறிகிறவர், நம்மால் செய்ய முடிந்ததை நாம் செய்துகொண்டிருப்பதையும், கிருபையிலும், அறிவிலும், தெய்வீக அளவுகோல்/நியமங்கள் முன்வைத்திடும் காரியங்கள் அனைத்திலும் வளர நாம் நாடிக்கொண்டிருப்பதையும் காண்கையில் பிரியம் கொள்வார். இதுவே நமது கர்த்தர் இயேசுவின் தன்மையாகவும் இருந்தது மற்றும் இதே ஆவியினை

வெளிப்படுத்தும் யாவரையும் பிதா அன்புகூருவார். பாவத்தின் கீழ்த்தரத்தினை நாம் அடையாளம் கண்டு, தேவனுடைய நீதியின் பாதையில் நடக்கத்துவங்குவது மாத்திரம் போதாது. அவரது ஆவியினை நாம் பெற்றிருப்போமானால், நாம் அவரது குணலட்சணம் குறித்துத் தியானித்து, அவரது தன்மைகளின் சாயலை அடைய நாடுகிறவர்களாய் இருப்போம். அனைவருக்கும் நன்மை செய்ய நாடுகிற யாரும், நீதிக்குக் குறைவானதைச் செய்ய ஒருபோதும் விரும்புவதில்லை. இதற்கும் அதிகமாகவே செய்வார்கள். ஆகையாலே "அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாய் இருக்கிறது" என்று அப்போஸ்தலன் கூறுகின்றார்.

நமது கர்த்தர் தம் சபைக்கு ஒரு புதிய கட்டளையைக் கொடுத்தபோது அது நியாயப்பிரமாணத்தின் காரியம் அனைத்தையும் உள்ளடக்கினதாய் இருந்தது (யோவான் 13:34). யாரெல்லாம் இந்த அன்பினைக் கொண்டிருக்கின்றார்களோ, அவர்கள் கர்த்தரானவர் பரலோக மகிமையை விட்டு வருகிறதற்கும், தம் ஜீவனை மனுக்குலத்திற்கெனப் பலிசெலுத்திடுவதற்கும் நீதியல்ல, அன்பே அவரை வழிநடத்தினது என்று உணர்ந்துகொள்ளுவார்கள். இந்தப் பலியினை ஏறெடுக்க பிதா குமாரனுக்குக் கட்டளையிடவில்லை. மற்றவர்களுக்காக ஒருவன் தன் நலன்களைப் பலிசெலுத்தும்படிக்குத் தேவன் யாருக்கும் கட்டளையிடவில்லை. நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய திட்டம் ஒன்றினைத் தேவன் பெற்றிருந்தார்; அதை நடைமுறைப்படுத்திட குமாரன் விரும்பினால், அவர் வாக்களிக்கப்பட்டுள்ள வெகுமானத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆகையால் பிதா மீதான அன்பின் காரணமாக மரணத்தை, சிலுவைபரியந்தமான மரணத்தினைச் சகித்திட நமது கர்த்தர் மிகவும் விருப்பமாயிருந்தார். பிதாவின் குணங்களை உடையவராய் இருந்தபடியால், அவர் விழுந்துபோன மனுக்குலத்தின் மீது அனுதாபம் கொண்டார். மனுக்குலத்தினை மீட்டுக்கொள்வதற்கும், விரும்புகிறவர்களையும், கீழ்ப்படிகிறவர்களையும், மீண்டும் தெய்வீகத் தயவிற்கும், ஆசீர்வாதத்திற்கும் உள்ளாகக்கொண்டுவருவதற்கும் தேவன் நோக்கம் கொண்டிருந்தார். இந்த வேலையினைச் செய்வதற்கு நமது கர்த்தர் இயேசு ஏங்கினார். இது நீதிக்கும் அதிகமாய்ச் செய்யும் காரியமாகும். தற்கால ஜீவியத்தில் வரும் பாடுகளிலும், எதிர்க்காலத்தின் மகிமை, கனம் மற்றும் அழியாமையிலும் அவரோடுகூடப் பங்கடையத்தக்கதாக, நாம் அவரது தலைமையின் கீழ் இணைந்துள்ளோமெனில், நாம் அன்பின் பிரமாணத்தினைக் கைக்கொள்வதற்கு உடன்படிக்கைப் பண்ணினவர்களாய் இருப்போம். "அன்பு தன் பிறனுக்குத் தீமை செய்கிறதில்லை." "அன்பானது, மோசேயின் நியாயப்பிரமாணத்தினைக் கைக்கொள்வதையும் தாண்டி, அதிகமாய்ச் செய்யும்." நீதியின் அடிப்படையிலான அனைத்தையும் அன்பு உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது; அது ஒருவன் தன் அயலானுக்காய், தன் நண்பனுக்காய் மற்றும் தன் குடும்பத்திற்காய்ப் பலிசெலுத்தும்படிக்கு வழிநடத்துகின்றதாய் இருக்கும். இது நீதிக்கும் அதிகமாய்ச் செய்கிற காரியமாகும்.

## மற்றவர்களுக்கான நமது கடமை

அன்பிற்கு முன்னதாக நீதி வருகின்றது என்பதைத் தேவ ஜனங்களில் அநேகர் உணராதவர்களாக இருப்பதாகத் தெரிகின்றது. தேவன் நாம் நீதி செய்ய வேண்டும் என்று எதிர்ப்பார்க்கின்றார்; மேலும் நீதிக்கு அதிகமாய்ச் செய்வோம் என்று நாம் ஒத்துக்கொண்டிருக்கும் காரியமானது, நீதி செய்யாமல் நாம் இருக்க அனுமதிக்காது. நம்மைச் சுற்றிலும் அநீதியே உள்ளது. தங்கள் பிள்ளைகளிடத்தில் நீதியாய் நடந்துகொள்ளாத பெற்றோர்கள் இருக்கின்றனர்; இவர்கள் தங்கள் பிள்ளைகள் விஷயத்தில், அநேக விதங்களில் தங்களின் இஷ்டப்படியே நடந்துகொள்கின்றனர். பிள்ளைகளை உலகத்திற்குள் கொண்டுவருவதற்கும், குடும்பத்தின் நலனுக்கடுத்தவைகளுக்காக அவர்களை வேலைகளில் ஈடுபட

பண்ணுவதற்கும் மாத்திரமல்லாமல், அவர்களுக்கு அடிப்படையான கல்வியைக் கொடுப்பதற்கும், வீட்டில் மத மார்க்கத்திற்கடுத்த பயிற்சியினைக் கொடுப்பதற்கும் பெற்றோர்கள் பிள்ளைகள் விஷயத்தில் கடமைப்பட்டிருக்கின்றனர். ஒவ்வொருவனும் வீட்டில் தனக்கிருக்கும் உரிமைகள் யாவை என்று அறிந்தவனாகவும், மற்றவர்களுடைய உரிமைகளைக் கவனிக்கிறவனாகவும் காணப்பட வேண்டும்.

நல்ல மனுஷனுடைய பிள்ளையானவன், வீட்டைவிட்டு ஓடுகிறதில்லை; மிக அபூர்வமாக நன்கு பயிற்றுவிக்கப்பட்ட பிள்ளையானவன் இப்படி ஓடுவான். அநேகம் குடும்பங்களில் பிள்ளைகள் நீதியின் கொள்கைகளின்படி நடத்தப்படுகிறதில்லை. பெரும்பாலும் வளர்ந்துவரும் மகன்கள் மற்றும் மகள்களின் உரிமைகளைப் பெற்றோர்கள் உணர்ந்துகொள்ளத் தவறினவர்களாக, தொடர்ந்து அவர்களைக் குழந்தைகளாகவே நடத்துகின்றனர். பிள்ளைகள் தங்கள் காரியங்கள் அனைத்திலும் முடிவெடுக்க அவர்களுக்கு உதவும் அளவுக்கான பரந்த அனுதாப மனப்பான்மையினைப் பெற்றோர்கள் வளர்த்திக்கொள்ள வேண்டும். பிள்ளை முதிர்ச்சியடைகையில், அவர்கள் தானாய்ச் சிந்திப்பதற்குச் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும். திடீரெனச் சிந்தனைகள் எல்லையை மீறுகிறது; ஆனால் ஒருவேளை குழந்தைச் சரியாய்ப் பயிற்றுவிக்கப்பட்டிருந்தால், சரீரம் வளர்கையில், வாலிபன் தானாய் சிந்தித்து, செயல்படுவான்; ஆனாலும் பெற்றோரின் வழிகாட்டுதலை எப்போதும் நாடிடுவான்.

தங்கள் வேலைக்காரர்களின் நியாயமான உரிமைகள் அனைத்தையும் அவர்களுக்குக் கொடுக்கத் தவறிடும் எஜமான்களும் இருக்கின்றனர். உண்மைதான் ஒருவனால், ஒவ்வொருவரும் கேட்கும் அனைத்தையும் அனைவருக்கும் கொடுக்க முடியாதுதான்; ஏனெனில் சில ஜனங்கள் எல்லாவற்றையும் கோரிக்கையாய் வைப்பார்கள் மற்றும் திருப்தியும் அடையமாட்டார்கள். ஆனால் சரியான எஜமானிடம், வேலைக்காரன் தன் உரிமைகளுக்காகக் கேட்க வேண்டிய அவசியமிராது. வேலைக்காரன் தனக்கானவைகளைப் பெற்றுக்கொள்வான் என்று எஜமானே வலியுறுத்துகின்றவராய் இருப்பார்.

தங்கள் நண்பர்களை வழிநடத்தும் நோக்கத்தினையுடைய சில ஜனங்கள் இருப்பார்கள். மற்றவர்கள் என்ன செய்ய மற்றும் எப்படிச் செய்ய வேண்டும் என்று எப்போதும் இவர்கள் மற்றவர்களுக்குச் சொல்லிக்கொண்டிருப்பார்கள். நாம் தன்னடக்கம் உடையவர்களாய் இருந்து, மற்றவர்களுடைய உரிமைகளை மதிக்கின்றவர்களாய் இருத்தல் வேண்டும்; நம் கருத்துக்களை மற்றவர்கள் மீது திணிக்கின்றவர்களாக இருக்கக்கூடாது. மற்றவர்கள் நம்மிடம் வந்து என்ன செய்ய வேண்டும் மற்றும் எப்படிச் செய்ய வேண்டும் என்று கேட்கும்போதே, நாம் அவர்களுக்குச் சொல்வதற்கான சரியான தருணமாகும் மற்றும் சொல்வது தகுதியானது என்று நாம் எண்ணவேண்டிய தருணமுமாகும். என்னிடம் அறிவுரை கேட்க ஜனங்கள் வந்தால் நானோ: "ஒருவேளை நான் உங்கள் நிலைமையில் இருந்திருப்பேனாகில், நான் இன்னின்ன விதமாய்ச் செய்திருப்பேன் என்று எண்ணுகின்றேன்; ஆனாலும் நீங்கள்தான் தீர்மானம் எடுக்க வேண்டும்" என்பேன். இப்படிப் பேசுகையில், நாம் உரிய நபர் மீதே பொறுப்பினை விடுபவர்களாய் இருப்போம்.

## மறுபக்கத்திலிருந்து பார்த்தல்

நாம் பெற்றோர்களின் கடமைகளைக் குறித்து இதுவரை பேசியிருக்கின்றோம். இப்பொழுது பிள்ளைகளின் கடமைகளைக் கவனிக்கலாம். இப்போது பிள்ளைகளாக இருக்கிற நீங்கள், வயதாகுகையில் உங்கள் பிள்ளைகள் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள்

விரும்புவீர்களோ, அதையே உங்கள் பெற்றோர்களுக்கும் இப்பொழுது செய்யுங்கள் என்று பொன்னான பிரமாணம் கூறுகின்றதாய் இருக்கின்றது. பிள்ளைகள் இந்தக் கண்ணோட்டத்தினைப் பெற்றிருக்க வேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் இது விஷயத்தில் கற்பிக்கப்பட்டிருப்பார்களானால் பெற்றோர் கொடுத்த அன்பு மற்றும் பராமரிப்பிற்கான நன்றியினை, பிள்ளைகள் முதிர்ச்சியடைகையில், பிற்காலங்களில் வெளிப்படுத்துவது தொடர்புடைய விஷயத்தில் பெற்றோர்கள் கவலைப்படத் தேவையில்லை. பெற்றோர்கள் பின்வருமாறு சொல்வார்கள்: "தவறான எவ்விஷயத்திலும் திருப்திக்கொள்ளாத அளவிற்கு என் பிள்ளைகள் சிறுபிள்ளைகளாய் இருந்தது முதற்கொண்டு, நீதியின் கொள்கைகளைத் தங்களில் ஆழமாய்ப் பதியப்பெற்றிருக்கின்றனர்." எஜமான் குறித்துப் பார்த்திருக்கின்றோம், இப்பொழுது வேலைக்காரர் குறித்துப் பார்க்கலாம். எஜமானை வேலைக்காரன் ஸ்தானத்திலும், வேலைக்காரனை எஜமான் ஸ்தானத்திலும் நிறுத்தி இப்பொழுது கற்பனை பண்ணிப்பார்க்கலாம். தன் வேலைக்காரர்களுக்கு அல்லது தன் எஜமானுக்கு நீதியாய்ச் செய்ய வேண்டுமென்று ஒவ்வொருவரும் என்ன எண்ணவேண்டும்? சரியான வகை வார்த்தைகள் என்னவாக இருக்கும், சரியான வகை உணர்வுகள் என்னவாக இருக்கும்? இந்நடத்தையானது எஜமான்கள் மற்றும் வேலைக்காரர்களுக்கிடையே மாபெரும் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும்.

ஆகையால் நாம் செய்ய வேண்டிய சரியான/நீதியான காரியம் என்ன என்று நாம் கவனிக்கும்போதும், சரியான/நீதியான காரியங்களைச் செய்வதற்கு நாம் விரும்பும்போதும், நாம் அனைவரோடும், நம் தொழிலில் இணைந்திருப்பவர்களோடும் கொண்டுள்ள கையாளுதல்களில் அதிகமதிகமாய் நீதியாய் நடந்துகொண்டிருப்பவர்களாய் இருப்போம். நாம் பொருட்களை வாங்குபவர்களாகவோ அல்லது விற்கிறவர்களாகவோ இருப்பினும், நீதியான கையாளுதல் ஒன்று உள்ளது. விற்கிறவர்கள் நஷ்டம் அடையும் விதத்தில் அவர்களிடமிருந்து நாம் பொருட்கள் வாங்குவது என்பது தவறான காரியமாகும். நமக்குப் பொருள்கள் விற்பவர் நியாயமான இலாபம் அடைவதில் நாம் திருப்திக்கொள்ள வேண்டும். ஒருவேளை நாம் பொருள்களை விற்பவர்களாய் இருப்போமானால் நாமும் நியாயமான இலாபத்தையே எடுத்துக்கொள்ள வேண்டுமே ஒழிய, அநியாயமாய் அல்ல. பொன்னான பிரமாணம் இக்காரியங்களை நிர்வகித்திட வேண்டும்.

## சபையில் நீதி?

சகோதரர்களுக்காய்த் தங்கள் ஜீவியங்களைக் கொடுத்திட வேண்டும் எனும் கொள்கையின் மீது சுவிசேஷயுகத்தின் முழுச்சபையும் கட்டியெழுப்பப்படுகிறது என்றாலும், தேவனுடைய அருமையான ஜனங்களில் சிலர் ஒருவரையொருவர் கையாளும் விஷயத்தில் நீதியின் கொள்கைகளை அடையாளம் கண்டுகொள்ள தவறிவிடுகிறவர்களாய் இருக்கின்றனர். எப்போதெல்லாம் பிரச்சனை எழும்புகின்றதோ, அப்போதெல்லாம் தவறு நம்முடையதா என்று காணும்படிக்கு நம் சொந்த இருதயங்களையும், நடக்கைகளையும் நாம் விசேஷமாய் ஆராய வேண்டும். இந்தப் பிரச்சனைகள் கிட்டத்தட்ட நீதியின் கொள்கைகளை மீறுவதன் விளைவானவையே ஆகும்.

நீதி தேவனுடைய சிங்காசனத்தின் ஆதாரமாய் இருக்கின்றது. அவரது ஏற்பாட்டிற்கேற்ப கட்டப்பட்டவர்களாகிய சபையானது, இதே கொள்கையின் மீது கட்டப்பட்டவர்களாய்க் காணப்படுகின்றனர். ஒவ்வொரு அங்கத்தினனும், தன் சொந்த உரிமைகளை விட்டுக்கொடுத்திடலாம், ஆனாலும் மற்றவர்களுடைய உரிமைகளில் குறுக்கிடக்கூடாது. மற்றவர்கள் நம்மிடத்தில் நீதியாய்

நடந்துகொள்ளும் போது நாம் மிகவும் சந்தோஷம் கொள்ள வேண்டும்; ஆனாலும் நாம் எங்குமே நம் சொந்த உரிமைகளை வலியுறுத்திக்கொண்டும் இருக்கக்கூடாது. அன்பானது தன் சொந்த உரிமைகள் அநேகவற்றைப் புறக்கணிக்கின்றதாய் இருக்கும். பூமியில் நமது கர்த்தருடைய ஜீவியமானது, தியாகமான ஒன்றாகவே இருந்தது. சபையிலும் அல்லது குடும்பத்திலும் அல்லது தொழிலிலும், மற்றவர்களைச் சுரண்டி பிழைப்பதைக் காட்டிலும், தேவ சித்தத்தைச் நன்கு சிந்தித்துச் செய்திட வேண்டும்.

நாம் இப்படிச் செய்யும்போது, நீதியின் ஆவியினை வளர்த்தி விருத்தியாக்குகின்றோம். இது எல்லா விஷயங்களுக்கும் பொருந்துகின்றது என்று நாம் காண்கின்றோமா? உதாரணத்திற்கு: தேவனுடைய நியாயப்பிரமாணமானது ஆதியில் ஆதாமுக்குக் கொடுக்கப்பட்டது; அந்தப் பிரமாணம் மீறப்பட்டதின் நிமித்தம் தேவனுடைய நீதியானது, மரணத்தண்டனையை அளித்தது. அவர் தம் நியாயப்பிரமாணத்தினை, தம் நீதியினைப் புறந்தள்ளிட மாட்டார், ஆனால் அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக ஆசீர்வாதத்தினைக் கொண்டுவருவார். நீதியினை மீறியல்ல, மாறாக சுயத்தைப் பலிசெலுத்துவதின் வாயிலாக அன்பானது நீதியின்மீது இந்த ஜெயத்தினை அடைந்தது. இப்படியாகவே நாமும் கர்த்தருக்கடுத்த, சத்தியத்திற்கடுத்த மற்றும் சகோதரருக்கடுத்த காரியங்களுக்காக நம்மை நாம் பலிசெலுத்திட வேண்டியவர்களாய் இருக்கின்றோம்; மற்றும் இப்படிச் செய்வதன் மூலம், நாம் நம் நலனுக்கடுத்தவைகளைப் பாதுகாக்கின்றவர்களாகவும், கிருபையிலும், அறிவிலும், நமது தேவனுக்கொத்த குணலட்சணத்தின் சாயலிலும் வளர்கின்றவர்களாகவும் இருப்போம்.

**ஆமென்!!**

For further copies contact :
**Br ANBAZHAKAN**
Coimbatore Ecclesia, **Cell : 84287 37474**

# மத்தேயு 7:12

